www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்

Registered as a News Paper in Sri Lanka
பக்கம் 20
ரூபா 9/00
දිනමුරසු වාරමලර්
ஆக.28-செப்.03,1994

# வாரமலர் தினமுரசு

THINA[...] SRI LA[...]AL TAMIL WEEKLY முரசு 65



அரசியல் அலசல்

அதிகாரமுள்ள ஜனாதிபதியும் ஆட்சிக்கு வந்துள்ள புதிய- பிரதமரும்

ஸ்பெசல் ரிப்போர்ட்

ஆட்சியமைக்க முன் நடந்த சுவையான சங்கதிகள்!

புலிகளின் அடுத்த நகர்வு என்ன?

மருத்துவ விந்தை

அதிசயக் குழந்தை

இலக்கிய நயம்

சினி விசிட்

சூடு - சுவை - சுவாரசியம் அதுதான் தினமுரசு

www.padippakam.com நன்றி - நூலகத்திட்டம்

# முரசம்

அன்புள்ள உங்களுக்கு,
வணக்கம்.
தேர்தலில் வெற்றி பெற்றவர்களுக்கு
இருக்கக்கூடிய மகிழ்ச்சியைவிட
முரசுக்கு
இரட்டிப்பு மகிழ்ச்சி!

வெற்றிபெற்ற வேட்பாளர்கள்,
வாக்காளர்களுக்கு
நன்றி சொல்வதில் இருக்கக்கூடிய
பூரிப்பை விடவும்
வாசகர்களுக்கு நன்றி சொல்லும்
கடமையும்-பூரிப்பும்
முரசுக்கு அதிகம். மகா அதிகம்!

ஏன்-எதற்கு என்றால்-
இலங்கையில் இருந்து
வெளிவருகின்ற
சகல பத்திரிகைகளிலுமே
தேர்தல் பற்றிய
97 வீதமான சரியான கணிப்பினை
வெளியிட்ட ஒரே ஒரு பத்திரிகை
உங்கள் முரசுதான்.
முரசு மட்டும்தான்!

இது உண்மையாகவே
அரிய சாதனைதான்.
இதற்கு மிக முக்கிய காரணம்
வாசகர்களாகிய நீங்கள்தான்!
உண்மையிது வெறும் புகழ்ச்சியில்லை!!

சொந்த விருப்பு-வெறுப்புக்களின்படி
கணிப்புக்களை வெளியிடவில்லை.
பலமுறை கூறியபடி-
முரசினை சார்ந்தவர்களுக்கு
எந்தக் கட்சி சார்பு இருந்தாலும்;
முரசு கட்சி சார்பின்றி
உள்ளதை உள்ளபடி உரைக்கும்.
வாசகர்கள் தன்மீது கொண்டுள்ள
விசுவாசத்தை-நம்பிக்கையை
உண்மையான தரவுகள்-
உறுதியான விமர்சனங்கள்
மூலமாக என்றும் காத்து நிற்கும்.

காதில் விழும் கட்டுக்கதைகளையெல்லாம்
முரசு வெளியிடுவதில்லை.
பரபரப்பான செய்திக்காக
ஆதாரமில்லாத தகவல்களை
முரசு தருவதுமில்லை.

முரசு வெளியிட்ட
தேர்தல் கணிப்புக்களால்
முகம் சுளித்த அரசியல்வாதிகள் சிலர்
முரசுமீது வசைமாரி பொழிந்தனர்.
முரசுக்கு எப்படித் தெரியும்
என்று கேட்டு-
அரசியல் நிலவர
ஆய்வுகளில்
பத்திரிகைகளுக்கு இருக்கும்
திறன்-வாசகர் தொடர்பு மூலமான
நாடித்துடிப்பறியும் பலம்
புரியாமல் பேசினார்கள்.

இங்கே-ஜனநாயகம்-அரசியல்
பற்றியெல்லாம் பேசும் சிலருக்கு
பேசத் தெரிந்தளவுக்கு
அவற்றை நேசிக்கத் தெரியவில்லை.
அதனால்தான்-தாம் பாதிக்கப்படும்போது
உண்மைகள்மீது எச்சில் துப்புகிறார்கள்.
இப்போது அவர்களுக்கு
முரசு சொல்கிறது-
"நண்பர்களே! நீங்கள்
மல்லாந்து படுத்தபடி எச்சில் துப்புனீர்கள்.
முகங்களை துடைத்துக் கொள்ளுங்கள்!".

அதிகாரம் உள்ள பக்கம்
சலாம் போடுவது.
பக்கச் சார்பின்மை என்றபடி
ஆபத்தில்லாப்பக்கம் மட்டும்
சேறு வீசுவது-விமர்சனம் செய்வது;
தம் சொந்த விருப்பு வெறுப்பை
மக்கள் கருத்து என்று சொல்வது;
முதுகெலும்பில்லாதவர்களது முனகல்.
முரசு அவற்றிலிருந்து வேறுபட்டு
தன் வித்தியாசத்தை
வெளிப்படுத்தியே வந்திருக்கிறது.
அதனால்தான்-வாசகர் பலத்தையும்
அதன் மூலமாக
ஆச்சரிய சாதனைகளையும்
குறுகிய காலத்தில்
முரசால் பெற முடிந்திருக்கிறது.

மீண்டும் சொல்கிறேன்...!
முரசைச் சார்ந்தவர்கள் ஒவ்வொருவருக்கும்
ஏதாவது ஒரு கட்சி சார் எண்ணம் இருக்கலாம்.
இல்லையென்றால் அது பொய்.
ஆனால்-முரசு
எந்த ஒரு கட்சியையும்
ஏற்றிப்போற்றி
உயரத்தில் தூக்கி வைக்காது;
உண்மைக்குப் புறம்பாக
விருப்பு-வெறுப்புக்களை
பொதுக் கருத்தாக்காது.
தனது-தனித்துவம்-வித்தியாசம்
மூலமாக-
முரசு தன் முத்திரையைப் பதிக்கும்.

நடைபெற்ற தேர்தலில்
தமிழ் பேசும் மக்கள்
பெரும்பாலானோர்
மிகச் சரியான தீர்ப்பினை
வழங்கியுள்ளீர்கள்!
தேர்தல் முடிவுகள்
தமிழ் பேசும் மக்களது
விழிப்பையும்- தெளிவையும்
கட்டியம் கூறுகின்றன.
முரசின் பாராட்டுக்கள்.

□□

மீண்டும் மறுமடலில்
வந்து கலக்கும்வரை
முரசுக்கு மகிழ்ச்சி தந்த
வாசக நெஞ்சங்களை
ஆரத் தழுவியபடி-

என்றென்றும் அன்புடன்
—ஆசிரியர்—

# ஆன்மீகம்



## இயேசு ஜீவிக்கிறார்-ஜீவனளிக்கிறார்

இன்றைய உலகத்தைப் பார்க்கும்போது அது தேவனை மறந்ததாகவும், பிசாசானவனுக்கு அடிமைப்பட்டதாகவும், தீமை நிறைந்ததாயும், விசுவாசம் அற்றதாயும், சத்தியத்தை அசட்டை செய்கிறதாகவும் காணப்படுகிறது. தெய்வம் இவைகளொன்றையும் காணவுமில்லை, கேட்கவுமில்லை என்று பலர் எண்ணிக்கொள்கின்றனர். அவர் அதிக பொறுமையாய் இருப்பது உண்மையே. ஆயினும் இந்த நிலைமை மாறும் காலம் வரும். இதே 'பூமி கர்த்தருடைய மகிமையை அறிகிற அறிவினால் நிறைந்திருக்கும். (ஆபகூக் 2:14)

மனிதன் தன் பாவத்தினால் ஜீவனை இழந்தவனாக இருக்கிறான். தேவனை தனக்குச் சொந்தமாக்கிக்கொள்ளுகிறவனோ, அவருடைய அழியாத ஜீவனை தனதாக்கிக் கொள்கிறான். மனுகுலத்துக்குத் தேவன் அளிக்கும் உன்னத ஆசிர்வாதம் இதுவே. 'தேவன், தம்முடைய ஒரே பேறான குமாரனை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டுப்போகாமல் நித்தியஜீவனை அடையும்படிக்கு, அவரைத் தந்தருளி, இவ்வளவாய் உலகத்தில் அன்புகூர்ந்தார்." (யோவான் 3:16) உலகத்துக்கோ இந்த ஜீவனை குறித்து அக்கறை இல்லை. ஜீவனை அளிக்கும் ஜீவாதிபதியாய் அவர் வந்தார். உலகமோ அவரை புறக்கணித்தது. "ஜீவன் உண்டாகும்படி என்னிடத்தில்வர உங்களுக்கு மனதில்லையா" (யோவான் 5:40) என்றார். மனிதனோ அவ்விலையேறப்பட்ட வார்த்தைகளுக்குச் சிறிதளவாகிலும் மதிப்புக் கொடுக்கவில்லை. ஜீவன் கொடுக்க வந்தவருக்கு உலகம் அவருக்கு மரணத்தை கொடுத்தது.

'குமாரனை விசுவாசியாதவன் ஜீவனை காண்பதில்லை' (யோவான் 3:16)ல் உறுதிப்படுத்தப்பட்டிருக்கிறது. நானே உயிர்த்தெழுதலும் ஜீவனுமாயிருக்கிறேன். என்னை விசுவாசிக்கிறவன் மரித்தாலும் பிழைப்பான். (யோவான் 11:25) இயேசு கிறிஸ்து என்னும் ஒருவராலே ஜீவனை அடைந்து ஆளுவார்களென்பது அதிக நிச்சயமாமே. (ரோமர்-5:17)

## நற்குண நபியின் நன்மொழிகள்

- இறைவனை வணங்குபவருக்கும், வணங்காதிருப்பவருக்கும் உள்ள உதாரணம் உயிருள்ளதும் செத்த பிணமுமாகும்.
- ஒரு தாயானவள் தனது குழந்தைகளிடத்தில் வைத்திருக்கும் அன்பைக்காட்டிலும், நிச்சயமாக இறைவன் தனது படைப்புக்களில் அதிகமாக அன்பு பாராட்டுகிறான்.
- மருந்துக்காகக்கூட சாராயத்தை உபயோகிக்கக்கூடாது. அது மருந்தல்ல- வியாதியே அதுதான்.
- ஏழ்மை-என் பெருமை, பணிவு-என் நிறைவு, தியாகம்-என் கலை, திருப்தி-என் வெற்றிப் பொருள்.
- மூன்று காரியங்கள் உங்களை அழித்துவிடும். பேராசை, உடலிச்சை, தற்பெருமை என்பனவாகும்.
- செல்வம் என்பது பொருள் பெருக்கத்தினால் ஏற்படுவதில்லை. மனத் திருப்தியினாலேயே உண்மையான செல்வம் கிடைக்கின்றது.
- நீரில் இறங்குபவன் நிச்சயம் நனைந்து போவதைப்போல் இவ்வுலக இன்பத்தில் மூழ்குபவன் நிச்சயம் அசுத்தனாகவே இருப்பான்.
- ஏழைகளுக்கு தர்மம் செய்வதில் ஒரேவிதமான நன்மைதான் உண்டு. ஆனால் தனது உறவினர்களுக்கு உதவுவதில் இரண்டு விதமான நன்மைகள் உண்டு. தர்மத்தின் பயனும், உற்றார்க்கு உதவிய பயனும்.
- ஒரு தியாகியின் அத்தனை குற்றங்களும் மன்னிக்கப்படும். அவரது கடனைத் தவிர.

இர்பானா ரியால்-மக்கொன.

## கவிதைப்போட்டி இல-62

வந்து குவிந்தவற்றில் வாகை சூடியதும் வியக்கப்பட்டவற்றில் இடம் பிடித்தவையும்

### பரிசுக்குரிய கவிதை

**புதுப் பயணம்**

எஞ்சிய
உயிர்காக்க
எண்ணிய
பிஞ்சொன்று
போர்த்தேசம் விட்டு
ஒரு புதுப்பயணம்.

ஆரையூர்-இதயம்.

### வியக்கப்பட்டவை

**உயிர்களின் ஒத்திகை**

கண்ணீரும், செந்நீரும்
கரைபுரண்டு ஓ(டை)டையிலே
உயிருள்ள ஜீவன்கள்
ஒத்திகை பார்ப்பதேனோ?

எஸ்.பீ.டீன்-கல்பிட்டி.

**நட..!ஓடு!!தாண்டு!!!**

விறகு பொறுக்க போனவளே!
வெறுங்கையோடு..வருவதென்ன?
அம்மா வீட்டில்- பார்த்திருப்பா...
சோறு போட்டு-காத்திருப்பா...
பாலமதைவெள்ளம்..மூடும்
முன்னே!
வேகமாக நீயும்- ஓடு கண்ணே!!

கோட்டைமுனை-வாஹிட் ஏ.குத்தூஸ்-பதுளை.

அச்சம் இல்லை இவளுக்கு
அழுகை இல்லை இவளுக்கு
துச்சம் துன்பம் இவளுக்கு
இத் துணிவே வேண்டும்
உலகுக்கு.

செல்வி.என்.ஏ.புவனேஸ்வரி-பசறை த.ம.வி.

**[illegible]**

பாலம் உடைந்துவிடின் இவர்கள்
கங்கையுடன் சங்கமம்-ஆனால்
பாலம் கடந்துவிடின் இப்
பாழும் உலகில்
சாகும்வரை சங்கடம்.

கே.சிவா-கொழும்பு-13.

**தீ(ர்)வுக்கான பாதை**

தீ(ர்)வுக்கு
வழியுண்டு; வாய்ப்புண்டு-
தலைமைகளும்
வால்(ள்)களும்
மிருகங்களாய்
எதிர்கொள்ளாதபோது-

எம்.என்.எம்.நவ்ரஜி
அக்குறணை-03.

## கவிதைப் போட்டி இல-65



சிந்தனைகள் சூழலைப் பிரதிபலிக்கட்டும். சொல்லும் கருத்தில் தெளிவும், சுருக்கமும் இருக்கட்டும். எண்ணத்தில் உருவாகும் கவி வரிகளுக்கு தபாலட்டையில் வடிவம் கொடுத்து அனுப்பிவையுங்கள்.

சிறந்த கவிதை ஒன்றுக்கு பரிசு ரூபா 100/=.

அனுப்பிவைக்க வேண்டிய கடைசித் திகதி 03.09.1994.

—முகவரி—

கவிதைப் போட்டி இல: 65
தினமுரசு வாரமலர்
த.பெ.இல-1772, கொழும்பு.

**சமத்துவ சமன்பாடு**

ஜனநாயகம்
சாகாதவரை
சமத்துவ
சமன்பாடே-நம்
சமுதாய
மேன்பாடு.

ஷியானி நளீர்-
அக்குறணை.

**சொந்தங்கள்**

நானிலத்தில் நாதியில்லை
மனிதத்தில் மதிப்பில்லை
நாளை இவள் வாழ்வதற்காய்
நாடி வந்த சொந்தங்கள்.

ஏ.எச்.எம்.மௌஜுத்
ஹிஜ்ராபுரம்.

**அன்பு**

அன்பிற்கும் உண்டோ
அடைக்கும் தாள்
அன்பிற்கு இங்கே
ஐந்தறிவு ஜீவன்கள்
மட்டும்தானோ?

அஞ்சலி- ஆரையம்பதி-01.

**தொடரும் துன்பம்**

தொடர்கின்ற பயணத்தில்
தொடரும் துன்பங்கள்
துயர் கொள்ளும் வாழ்வினிலே
துன்பங்கள் தொடர்கதையே.

தெ.லோஜனா-கொழும்பு-15.

**உசார்**

மெதுவாகச் செல்
தேர்தல் வாக்குறுதிகளில்
தடுக்கி விழ
போகின்றாய்

ஆர்.யோகநாதன்-வவுனியா.

**சிறுமியோ..பன்றியோ...**

யார் கடப்பினும்
பாதை ஒன்றே!
யார் வீழ்ந்திடினும்
சாவும் ஒன்றே!!..

எம்.பி.எம்.அலு..பர்
கொழும்பு-14.



**அஞ்சாதே மகளே!**

அவள்
அஞ்சமாட்டாள்!
ஏன் தெரியுமா?
மனிதனல்ல-
மிருகம்.

ஜே.எம்.பைஸால்
அக்குறணை-06.

## வாசகசாலை

மலருக்கு மணம் உண்டு
கடலுக்கு அலை உண்டு
கண்ணுக்கு இமை உண்டு
முரசுக்கோ வாசகர் இதயங்களை
ஈர்க்கும் அபார ஆற்றல் உண்டு.

எம்.ரி.அப்துல் வாஜித்-நிந்தவூர்.

□□

சிந்தை விரிக்கும் தினமுரசே,

அரசியலை அலசி வரும் எக்ஸ்ரே ரிப்போர்ட் சிந்தையை வியக்க வைக்கும் நில் கவனி முன்னேறு, சுடச் சுடச் சுவையூட்டும் சிறுகதைகளும் என் மனதை கவர்ந்துள்ளன. இதேபோல் சுவையான அம்சத்துடன் நீடூழிகாலம் தொடர வாழ்த்துகின்றேன்.

செல்வி.ப.சுபத்திரா-பசறை.

□□

அன்று முதல்... என் இதய முரசே!

நீ சுமந்துவரும் அத்தனை விடயமும் உன் கரத்தை பலப்படுத்துகிறது. அதிலும் 'தகவல்பெட்டி' எம்மை உலுப்பி விடுகிறது.

ஏ.எஸ்.எம்.ரிஸ்வி-மதவாச்சி.

□□

என் அன்பான முரசே, நீ வாராவாரம் வெளியிடும் சிறுகதைகள் அனைத்தும் பலே...பலே அதேபோல்தான் லேடீஸ், ஸ்பெசலும், அழகுக்குறிப்புக்களும் அது அத்தனையும் தந்து எங்களை மெய்மறக்க செய்கிறாய். அதனால் எங்கள் அனைவரின் நல் வாழ்த்துக்கள்.

பி.அம்பிகாவதி,பி.லோகேஸ்வரி மதிஅழகன்.

□□

என் இதய வீணையில் இடம்பிடித்த தினமுரசே! நீ சுமந்து வரும்

அனைத்து அம்சங்களும் வெகு சுவை. அதிலும் நில், கவனி, முன்னேறு அதிரடி அய்யாத்துரை, லேடீஸ் ஸ்பெசல் இவைகள் என் மனதை கொள்ளை அடித்து விட்டன. உன் பணி மென்மேலும் விருத்திஅடைய எனது நல்வாழ்த்துக்கள்.

எம்.எம்.பஸ்மிலா பானு, ஏ.எஸ்.நிஹாதா- மூதூர்.

□□

ஓ...முரசே!

என் இதயப்பட்டு விரிப்பின் மையத்திலே நித்தமும் மங்காப் புகழ் பெற்றிருக்கிறாய். நீ-சுமந்துவரும் புத்தம்புது செய்திகள் பிரமாதம். வாழ்க நீ என்றும் வளரட்டும் உன் பணி 'என்று கூறுமிவள்.

ரோஜாறாஸிக்-குருநாகல்.

□□

இப்பகுதியில் எல்லோரும் தினமுரசுக்கு பாராட்டி கடிதம் எழுதும்போது நான் மட்டும் ஆசிரியருக்கு என்றே விழிக்கின்றேன். இன்றைய அரசியல் செய்திகளுக்கு வடிவம் கொடுக்கும் ஒரு முழுமையான பத்திரிகை தினமுரசுதான்- எனக்கு தங்களின் நடுநிலைப் போக்கு மிகவும் பிடித்திருக்கிறது. நீங்கள் என் அருகில் இருந்தால், உங்களை அனைத்து முத்தமிட தயங்கேன். தொடர்ந்து எழுதுங்கள் கிழக்கின் அரசியல் கோணங்கிகளை படம் பிடித்துக்காட்டுங்கள்.

இ.திருச்செல்வம்-நாவற்குடா.

□□

தித்திக்கும் தேன் சுவையில் கூறிய சிந்தனைத் துளிகளை அள்ளிக் கொண்டு நித்தம் என் கரத்தைப் பற்றிக்கொள்கிறாய். உனக்குள் பொதிந்திருக்கும் சகல விடயங்களும் என் மனதைக் கொள்ளை கொள்கின்றன. உன் பணி மென்மேலும் சிறப்புடன் திகழ என் இனிய வாழ்த்துக்கள் என்றென்றும் உரித்தாகட்டும்.

மடுல்சீமையூர்-பெ.சண்முகராஜா.

□□

அன்பின் முரசே,

நோய்க்கு மருந்து தேவை. தாகத்துக்கு தண்ணீர் தேவை. பசிக்கு உணவு தேவை. எம் இதயங்களுக்கே உனது இனிதான ஆக்கங்கள் தேவை. உன் சேவை மென்மேலும் வழர எனது இதயபூர்வமான வாழ்த்துக்கள்.

ஜே.எம்.சித்தீக்-குருத்தலாவை.

□□




என் அபிமான தினமுரசே!

எத்தனையோ அம்சங்களை சுமந்து வந்து எம்மை மகிழ்விக்கின்றாய். நீ வழங்கும் அனைத்து அம்சங்களும் மிக சுவையே! உனது வருகை என்போன்ற மாணவ உள்ளங்களுக்கு பயனுள்ளதாகவே உள்ளது. வாராவாரம் ஸ்போட்ஸ், பாப்பா முரசு மகாபாரதம், எக்ஸ்ரே ரிப்போர்ட், போன்றவை என்னால் வாசிக்காமல் இருக்க முடியாது. அந்த அளவிற்கு நீ எம்மை ஆக்கிரமிப்பு செய்கிறாய். மாணவ குழாத்தினூடாக வாழ்த்துவதுடன் இன்னும் எங்கும் பிரகாசிக்க என் இனிய வாழ்த்துக்கள்.

ஜென்சி தாமிலா பர்னாந்து- கொழும்பு-15.

□□

என் இனிய தினமுரசே, உனக்கு எனது அன்பு முத்தம். நீ சுமந்து வரும் கொலைவிழும் நேரம் மற்றும் பல்சுவை அம்சங்கள் எல்லாம் எனக்கு ரொம்பவும் பிடித்துவிட்டது. நீ வாழ, வளர என் நல்லாசிகள்.

ஏ.டபிள்யூ.டி.மக்கியா-புத்தளம்.

□□

வாரங்கள் தோறும் வண்ண வண்ண படங்களோடு 'தகவல் பெட்டி அள்ளித்தரும் அதிசயங்களோடு ரசிகனின் 'இலக்கிய நயம்' 'கொலை விழும் நேரம்' அடடா 'மகா பாரதத்தையும்' விளக்கமாய் தரும் என்னவளே நீர் இன்னும் தரமுயர வானளவில் வாழ்த்துக்கள்.

செல்வன்.சுரேஸ் விஸ்வநாதன்-மஸ்கெலியா.

□□

உண்மைச் செய்திகளை உறங்க விடாது வெளி உலகுக்கு எடுத்து காட்டும் ஓர் உத்தம மலர் அதுவே, 'தினமுரசு வாரமலர்.'

செல்வன்.பிருதவுஸ்கான்-வெல்லம்பிட்டி.

□□

வாரந்தோரும் வண்ண வண்ண கோலங்களின் வந்து வாசகர்களின் நெஞ்சங்களில் நீங்காத இடம் பிடித்து அறிவுக்கு விருந்தலிக்கும் பல ஆலமான கருத்துக்களுடன் எம்மை மகிழ்விக்கும் அன்பு முரசே உன் திறமை மென்மேலும் ஓங்க என்னுடைய வாழ்த்துக்கள்.

பி.ராதாகிருஷ்ணன்-டிக்கோயா.

www.padippakam.com நன்றி - நூலகத்திட்டம்

# புலிகளின் நகர்வைப் பொறுத்தே அடுத்த கட்டம்!

## பேச்சுக்கு தயார் என்கிறது புதிய அரசு

புதிய அரசாங்கத்தை தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் வரவேற்றுள்ளமை அரசியல் வட்டாரங்களில் பரபரப்பாப் பேசப்படுகிறது.

ஐக்கிய தேசியக் கட்சித் தலைவராக மறைந்த ஜனாதிபதி பிரேமதாசா இருந்தவரை அவருக்கும் புலிகளுக்கும் இடையே நெருங்கிய உறவு இருப்பதாகவே எதிர்க்கட்சிகள் பிரசாரம் செய்து வந்தன.

இப்போது எதிர்க்கட்சிகள் ஆளும் கட்சியாகிவிட்டன. தேர்தல் பிரசாரத்தின் போது திருமதி-சந்திரிக்கா தாம் பதவிக்கு வந்தால் புலிகளோடு பேசுவேன் என்று கூறிவந்தார்.

பொதுஜன முன்னணி தேர்தலில் வெற்றி பெற்றவுடன் இலண்டனில் உள்ள புலிகள் அமைப்பு பிரதிநிதியோடு பி.பி.சி தொடர்பு கொண்டு கருத்துக் கேட்டிருந்தது.

புதிய அரசை தாம் வரவேற்போம் என்று அவர் கூறியிருந்தார். ஏற்கனவே கூறியதுபோல் நிபந்தனையற்ற பேச்சுக்கும் தாம் தயார் என்று புலிகள் அமைப்பு பிரதிநிதி கூறியிருந்தார்.

இதே சமயம் யாழ்ப்பாணத்தில் இருக்கும் புலிகள் அமைப்பின் தலைவர் திரு.வே.பிரபாகரனை அல்லது புலிகளது வட்டாரமோ புதிய அரசு பற்றி கருத்து எதனையும் இதுவரை தெரிவிக்கவில்லை.

புலிகளது கட்டுப்பாட்டில் உள்ள பத்திரிகைகள் மற்றும் புலிகளின் குரல் வானொலி போன்றவற்றிலும் ஐ.தே.கட்சியின் செல்வாக்கு சரிந்துவிட்டதாக முக்கியத்துவம் கொடுத்து கூறப்பட்டது.

பிரதமர் சந்திரிக்கா புலிகளோடு பேச விருப்பம் தெரிவித்த செய்தியும் குறிப்பிடப்பட்டிருந்தது.


ஆயினும்-புலிகளது கருத்துப் பற்றி எதுவும் கூறப்படவில்லை.

தற்போதுதான் புதிய அரசாங்கம் பதவிக்கு வந்துள்ள நிலையில் அதனைப் பற்றி விமர்சிக்க புலிகள் விரும்பமாட்டார்கள் என்றே கருதப்படுகிறது.

உள்நாட்டிலும்-வெளிநாட்டிலும் புதிய அரசாங்கம் தொடர்பாகவும் பிரதமர் திருமதி சந்திரிக்கா தொடர்பாகவும் மாற்றத்தை விரும்புபவர்கள் என்னும் அபிப்பிராயம் காணப்படுகிறது.

இந்த நேரத்தில் எதிரான கருத்துக்களை புலிகள் வெளியிட்டால் அரசியல் ரீதியில் அவர்களுக்கே பாதகம் ஏற்படும்.

ஜனாதிபதி டி.பி.விஜேதுங்கா பேச்சுக்கு தயாராக இல்லை என்பதுபோல இதுவரை



வே.பிரபாகரன்

அபிப்பிராயம் நிலவி வந்தமை புலிகளுக்கு சாதகமாக இருந்தது.

ஆனால், புதிய பிரதமர் பேச்சுக்குத் தயார் என்று அறிவித்துள்ளதால் அதனை மறுத்துப் பேசுவது விவேகமாக இருக்காது என்றே புலிகள் கருதுவர்.

ஆயினும்-புதிய அரசால் அதன் தற்போதைய நாடாளுமன்ற பலத்தின் மூலமாக அரசியலமைப்பை திருத்துவதோ-உறுதியான தீர்வினை முன்வைப்பதோ சாத்தியமில்லை என்றே புலிகளது இலண்டன் பிரதிநிதி அன்ரன் ராஜா மேலும் கூறியிருக்கிறார்.

தவிர-பொதுஜன முன்னணி அரசாங்கத்திற்கு தமிழர் விடுதலைக் கூட்டணி, புளொட், ஈ.பி.டி.பி. போன்ற தமிழ் அமைப்புகள் ஆதரவு தெரிவித்துள்ளன.

வடக்கு-கிழக்கில் தேர்தலை பகிஷ்கரிக்குமாறு அறிக்கை விட்டிருந்த புலிகள் அத்தேர்தலில் போட்டியிட்டு வெற்றிபெற்ற தமிழ்-முஸ்லிம் பிரதிநிதிகளது ஆதரவால் பலமடைந்துள்ள பொதுஜன முன்னணி அரசாங்கத்தோடு பேசுவது புலிகளுக்கு உடனடி சாத்தியமா என்பது சந்தேகம் என்றே அரசியல் நோக்கங்கள் கருதுகின்றனர்.

ஆயினும் புதிய அரசாங்கம் தமிழ் பேசும் மக்களது நம்பிக்கைகளை பெறும் வகையில் விரைவான முதல்கட்ட நடவடிக்கைகளை ஆரம்பிக்கலாம் என்றே தெரிகிறது.

பொருளாதாரத் தடை தளர்வு. விமானத் தாக்குதல்களை குறைப்பது. போன்றவை அந்த முதல் கட்ட முயற்சியில் இடம் பெறலாம்.

எனவே-புலிகள் உடனடியாக தாக்குதல்களில் ஈடுபடாமல் இருக்கக்கூடும். அதுபோல் பாதுகாப்புப் படையினரும் தமது நடவடிக்கைகளை முகாம்களை பாதுகாப்பதோடு மட்டுமே மட்டுப்படுத்திக் கொள்ளக் கூடும் என்று நம்பப்படுகிறது.

புலிகளை தவிர்த்து ஒரு தீர்வுக்கு வருவது சாத்தியமில்லை என்று புதிய அரசாங்கம் நம்புகிறது. அதேவேளை புலிகள் பேச்சுக்கு வந்து எப்படி நடந்து கொள்வார்கள் என்ற சந்தேகமும் அரசாங்க வட்டாரத்தில் காணப்படுகிறது.

ஏனைய அரசியல் கட்சிகளோடு தமிழ் கட்சிகள் உட்பட-இனப்பிரச்சனை தீர்வு தொடர்பாக பேசுவது புலிகளோடும் பேசுவது என்பதே பிரதமரின் எண்ணமாகும்.

ஆனால் ஏனைய தமிழ் கட்சிகளோடு பேசுவதை புலிகள் எந்தளவுக்கு ஏற்றுக் கொள்வார்கள் என்று தெரியவில்லை.

எப்படியோ புலிகளின் தரப்பிலிருந்து காய் நகர்தல் எப்படியிருக்கப் போகிறது என்பதைப் பொறுத்தே அடுத்த கட்டம் தீர்மானிக்கப்படும்.

# தேர்தலுக்குச் சவால்–புலிகள் தாக்குதல்

## அரசின் பிரசாரத்திற்கு பதிலடி

பொதுத் தேர்தல் நடைபெறுவதற்கு முன் 13ம் 14ம் திகதிகளில் வடக்கு-கிழக்கில் புலிகள் அமைப்பினர் தாக்குதல்களை நடத்தினார்கள்.

மட்டக்களப்பு-திருகோணமலை-யாழ்ப்பாணம் ஆகிய மாவட்டங்களில் தாக்குதல்கள் இடம்பெற்றன.

வடக்கு-கிழக்கில் தேர்தல் நடத்துவதன் மூலம் அங்கு சகஜநிலை நிலவுவதாகக் காட்டும் அரசாங்கத்தின் முயற்சிக்கு எதிர்ப்புக்காட்டும் நோக்கத்திலேயே தாக்குதல்கள் நடத்தப்பட்டன என்று தெரிகிறது.

மட்டக்களப்பு கட்டுமுறிப்பு குள இராணுவ முகாம் பலத்த சேதத்துக்கு உள்ளாகியது. ஆகஸ்ட் 11ம் திகதி அத்தாக்குதல் இடம்பெற்றது. புலிகள் அமைப்பின் பத்திரிகை அறிக்கையின்படி, தமது தரப்பில் மேஜர் கங்காதரன் உட்பட 17 பேர் பலியானதாகவும், இராணுவ தரப்பில் 25 பேர் பலியானதாகவும், ஆயுதங்கள் மற்றும் மூன்று இராணுவத்தினரின் உடல்கள் என்பன கைப்பற்றப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது. கட்டுமுறிப்பு குளத் தாக்குதலில் காயமடைந்த மேலும் ஐந்து புலிகளும் மரணமடைந்துள்ளனர் என்று பின்னர் அறிவிக்கப்பட்டது.

15ம் திகதி முல்லைத்தீவில் ஹெலி தாக்குதல் நடத்தியதில் கப்டன் இசைமாறன் என்பவர் உட்பட இரு புலிகள் பலியானார்கள்.

14ம் திகதி திருகோணமலை அளுத் ஓயாவில் தமது தாக்குதலில் படையினர் இருவர் பலியானதாக புலிகள் கூறியுள்ளார்கள்.

13ம் திகதி யாழ்ப்பாணத்தில் உள்ள அராலிக் கடலில் தாம் நடத்திய தாக்குதலில் படையினர் மூவர் பலியானதாகவும், படையினர் வந்த படகும் மூழ்கடிக்கப்பட்டதாகவும் புலிகளது செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டது. இங்கும் படையினர் மூவரின் உடல்கள் உட்பட, இயந்திரப் படகு எஞ்சின்கள் மற்றும் ஆயுதங்கள் புலிகளால் கைப்பற்றப்பட்டதாக அச்செய்திக் குறிப்பு மேலும் தெரிவிக்கிறது.

இதேவேளை ஆகஸ்ட் 1ம் திகதி முதல் 16ம் திகதிவரை யாழ் மாவட்டத்தில் படையினர் நடத்தியதாக்குதலில் 24 பேர் பலியானதாகவும் யாழ்ப்பாணத்தில் இருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன. இதில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த ஐந்து பேரும் மற்றொரு குடும்பத்தைச் சேர்ந்த மூன்று பேரும் பலியானதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

# முன்கூட்டியே நடக்குமா ஜனாதிபதித் தேர்தல்?

பொதுத்தேர்தலில் பொதுஜன முன்னணி வெற்றி பெற்றதையடுத்து ஜனாதிபதித் தேர்தல் பற்றிய கணிப்பிடல்கள் ஆரம்பமாகியுள்ளன.

ஜனாதிபதி டி.பி. விஜேதுங்கா முன்கூட்டியே பதவி விலகக்கூடும் என்று ஆளும் கட்சி வட்டாரத்தில் பேசப்படுகிறது.

இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் ஐக்கிய தேசியக் கட்சியோடு உறவு முறிந்தால் ஜனாதிபதித் தேர்தலில் தோல்வி ஏற்படும் சாத்தியம் இருக்கிறது.

முஸ்லிம் காங்கிரஸ் பொதுஜன முன்னணியை ஆதரிப்பதாலும் தமிழ் கட்சிகள் பொதுஜன முன்னணியை எதிர்த்து செயற்படப்போவதில்லை என்பதாலும் கிழக்கில் கணிசமான வாக்குகளை ஐ.தே.கட்சி இழக்கவேண்டி ஏற்படும்.

பொதுஜன முன்னணி பதவிக்கு வந்துள்ள சூட்டோடு ஜனாதிபதித் தேர்தலை நடத்தினால் வெற்றிவாய்ப்பு முன்னணியின் பக்கமே செல்லும் என்று ஐ.தே.கட்சி முக்கியஸ்தர்கள் சிலர் அபிப்பிராயம் தெரிவிக்கின்றனர்.

பொதுஜன முன்னணி ஏதாவது ஒரு கட்டத்தில் மக்களது அதிருப்தியை சம்பாதிக்கும் போதோ, அல்லது அதற்குள் உள்ள கட்சிகளுக்குள் பிணக்குகள் வரும் போதோ ஜனாதிபதித் தேர்தலை நடத்தினால் பிரசாரத்திற்கு வாய்ப்பு இருக்கும் என்று அவர்கள் கருதுகின்றனர்.

ஆனால் குறுகிய காலத்திற்குள் அதற்குரிய சந்தர்ப்பத்தை பொதுஜன முன்னணி வழங்காது என்று நம்பலாம்.

17 வருடத்தின் பின் வந்துள்ள வாய்ப்பை பொதுஜன முன்னணிக்குள் உள்ள கட்சி எதுவும் கெடுத்துவிட முயலாது. அப்படிக் கெடுத்தால் மீண்டும் ஒரு வாய்ப்பை வாக்காளர்கள் தரமாட்டார்கள் என்று அக்கட்சிகளுக்குத் தெரியும்.

பொதுஜன முன்னணி அரசோடு முரண்டுபிடிக்க ஜனாதிபதி டி.பி.விஜேதுங்கா தயாராக இல்லை என்றே தெரிகிறது.

அதனால் ஜனாதிபதித் தேர்தலை முன்கூட்டியே நடத்த அவர் விரும்பலாம். அல்லது பொதுஜன முன்னணியோடு முரண்படாமல் பதவிக்காலம் முடியும்வரை பதவியில் இருக்கலாம்.

ஐ.தே.கட்சியின் ஜனாதிபதி வேட்பாளராக ஏற்கனவே அவர் தீர்மானிக்கப்பட்ட போதும் அதில் மாற்றம் ஏற்படக்கூடும் என்றும் அரசியல் வட்டாரங்களில் பேசப்படுகிறது.

## நழுவும் திட்டம் உண்டா?

### -நேற்று நீ-இன்று நான்-

முன்னாள் அமைச்சர்கள் சிலரும், முக்கிய பிரமுகர்கள் சிலரும் வெளிநாடுகளுக்கு செல்லத் திட்டமிட்டுள்ளதாக அரசில் கிசு-கிசு உலாவுகிறது.

ஊழல் விசாரணை பற்றிய செய்திகள் ஓரிருவரை உலுப்பியுள்ளதாகவும் தகவல்.

முன்னர் ஜே.ஆர். தலைமையிலான ஐ.தே.கட்சி அரசாங்கம் சிறிமாவோவின் குடியுரிமையை பறித்தது.

இப்போது அவரது மகள் ஆட்சிக்கு வந்துள்ளார்.

ஊழல் குற்றச்சாட்டுக்கள் நிரூபிக்கப் பட்டால் குடியுரிமை பறிப்பு என்றும் அறிவித்துள்ளார். அறிவிப்பை கேட்ட புதிய எதிரணியினர் சிலர் ஆடிப்போயுள்ளதாகவும் மற்றொரு தகவல் கூறுகிறது.

# இனப்பிரச்சனைக்கு தீர்வு அவசியம்

## மத்திய மாகாண சபையில் வலியுறுத்தல்

(கண்டி நிருபர்)

மத்திய மாகாண சபையின் கூட்டம் [illegible] அன்று நடைபெற்றது.

நடைபெற்று முடிந்த பொதுத்தேர்தலில் போட்டியிட்ட மத்திய மாகாண சபை உறுப்பினர்கள் [illegible] பேர் நாடாளுமன்றத்திற்கு தெரிவாகியுள்ளனர்.

நாடாளுமன்றத்திற்கு செல்லும் முன்னாள் மாகாண சபை உறுப்பினர்கள் [illegible] பெற்றுக் கொண்டனர்.

[illegible]

வெற்றிடமாகியுள்ள ஆசனங்களுக்கு நியமிக்கப்படப் போகிறவர்கள் என்று சிலரது பெயர்கள் அடிபடுகின்றன.

முன்னாள் இராஜாங்க அமைச்சர் ஒருவரின் பெயரும், ஆலய அறங்காவலரின் பெயரும், உள்ளூராட்சி மன்ற உறுப்பினர் ஒருவரது பெயரும் இ.தொ.காங்கிரசின் வெற்றிடங்களை நிரப்புவோர் வரிசையில் பேசப்படுகிறது.

மலையக முன்னணித் தலைவர் திரு.சந்திரசேகரனின் ஆசனம் திரு. தர்மலிங்கத்திற்கு கிடைக்கவுள்ளது.

இராஜாங்க அமைச்சராக இருந்தவர் மாகாண சபை அமைச்சராகச் செல்ல சம்மதிப்பாரா என்று சிலர் சந்தேகப் படுகின்றனர்.

எதிர்வரும் செப்டம்பர் மாதம் 6ம் திகதி மத்திய மாகாண சபை மீண்டும் கூடவுள்ளது.

## புரிந்துகொண்டால் சரிதான்

முன்னாள் அமைச்சர்கள் தமது வாகனங்களை உடனடியாக திருப்பி கையளிக்கவேண்டும் என்று ஜனாதிபதி பணித்துள்ளார். **-செய்தி-**



இந்தச் செய்திக்கும் கீழே உள்ள ஜோக்குக்கும் சம்பந்தம் இருப்பதாக கருதினால் நாம் பொறுப்பல்ல. இது கத்தரித்த ஜோக்ஸ்.

*"வீட்டில் இருந்து புறப்பட்டபோது மந்திரியாக இருந்த நான் விழா மேடைக்கு வரும்போது மாஜி மந்திரியாகி விட்டதால் யாரேனும் ஒரு தொண்டன் என்னை சைக்கிளில் கூட்டிச் சென்று வீட்டில் விட்டு வருமாறு பணிவண்புடன் வேண்டிக்கொள்கிறேன்."*

(நன்றி-பாக்யா)

## திரைமறைவுப் பேரங்கள்

வன்னியிலும்-யாழிலும் தேர்தல் நடக்கும் வரை புகார் எதுவும் சொல்லாமல் இருந்த சிலர் தமக்கு ஆசனம் எதுவும் கிடைக்காமல் போனதால் வயிற்றெரிச்சல் பட்டுக்கொண்டிருக்கிறார்களாம்.

இதேவேளை தமிழ் கட்சியொன்றிடம் வேறு சில கட்சிகள் தேர்தலுக்கு முன் நடத்திய பேரமான பேச்சுக்கள் சம்பந்தப்பட்ட கட்சியிடம் பதிவில் இருக்கிறதாம். தேவைப்படின் அது வெளியே வரும் என்கிறது அக்கட்சி வட்டாரம். பேரங்களும்-வெட்டி ஓடல்களும்-சீச்சி இந்தப் பழக்கம் புளிக்கும் என்ற பேச்சுக்களும் நம் தமிழர் அரசிய லாச்சே என்று வேதனைப்படுகிறார்கள் விசயமறிந்தவர்கள். பொறாமையும்-போட்டியும் துறந்து எம்மவர் திருந்துவது எப்போது?

## அடித்துக்கொள்ளும் ஆதரவாளர்கள்!

(ஏறாவூர் நிருபர்)

தேர்தல் முடிந்து முடிவுகள் வெளியானவுடன் ஏறாவூரில் கத்திக் குத்துக்கும், வாள் வெட்டுக்கும், துப்பாக்கிச் சூட்டுக்கும், உலக்கைத் தாக்குதலுக்கும் பலர் இலக்காகி சிகிச்சை பெற்று வருகின்றனர். இதேவேளை பெண்களும் அரசியல் மோதல்களினால் தூண்டப்பட்டு தர்க்கம் புரிந்து அடிபட்டுக்கொள்கின்றனர். இவ்விதம் தாக்கப்பட்ட நான்கு இளம் பெண்கள் ஏறாவூர் மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுவருவதைக் காண முடிந்தது. இதில் ஒரு பெண்ணுக்கு வாயில் மண் திணித்து தாக்கப்பட்டதாகவும் அறிய முடிந்தது.

இங்கே ஊரடங்குச் சட்டம் கடுமையாக அமுலாக்கப்பட்டது. எனினும் அசம்பாவிதங்கள் நடக்கவே செய்தன.

## காமினி சொல்லும் காரணம்

ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணியினரை முழுமையாக ஐ.தே.கட்சிக்குள் இணைக்கத் தவறியமை, எதிர்க்கட்சிகளினால் எழுப்பப்பட்ட ஊழல் குற்றச்சாட்டுக்களுக்கு பதில் அளிக்கத் தவறியமை, சந்திரிக்கா குமாரணதுங்காவின் தேர்தல் பிரசார நடவடிக்கைகளுக்கு சில பத்திரிகைகள் கவர்ச்சியான பிரசாரங்களைக் கொடுத்து வந்தமை, சிறிலங்கா சுதந்திரக்கட்சியினால் ஒதுக்கப்பட்ட அனுரா பண்டாரநாயக்காவை ஐ.தே.கட்சிக்குள் சேர்த்துக்கொண்டமை போன்ற பிரச்சனைகளாலேயே ஐ.தே.க. நடைபெற்ற தேர்தலில் தோல்வி ஏற்படக் காரணமாக அமைந்ததென்று நேற்று நடந்த பத்திரிகையாளர் மாநாடொன்றில் காமினி திசாநாயக்கா தெரிவித்தார்.

www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்

# நானே ராஜா-நானே மந்திரி

## பராவின் பேச்சால் அதிருப்தி

மட்டக்களப்பு மாவட்டத்தில் கூட்டணி இரண்டு ஆசனங்களைப் பெறும் என்றே எதிர்பார்க்கப்பட்டது. முரசும் அப்படித்தான் கணிப்பு வெளியிட்டிருந்தது.

ஆனால் கூட்டணி அலை மூன்று ஆசனங்களைக் கொண்டுவந்து சேர்த்திருக்கிறது. மட்டக்களப்பு மாவட்டத்தில் கூட்டணி பெற்ற வெற்றியைத் தனது தனிப்பட்ட வெற்றிபோன்று திரு.பரராஜசிங்கம் பேசிவருவதும், அறிக்கை விட்டிருப்பதும் கூட்டணி வட்டாரங்களில் அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளது.

திரு.ஜோசப் பரராஜசிங்கத்திற்கு கணிசமான தனிப்பட்ட செல்வாக்கு இருப்பதை மறுக்கமுடியாது. ஆனால் மூன்று ஆசனங்கள் பெறுமளவுக்கு தனிப்பட்ட செல்வாக்கு மட்டும் வாக்குகளை அறுவடை செய்திருக்க முடியாது.

ஆயுத அமைப்புக்கள் மீதான அதிருப்தியே கூட்டணிக்கு சார்பான அலையாகவீசி மாபெரும் வெற்றியைப் பெற்றுக்கொடுத்தது என்பதே பொதுவான கருத்தாகும்.

மட்டக்களப்பில் போட்டியிட்ட முன்னாள் பா.உ. கோ.கருணாகரம் இம்முறை தனது அணியில்கூட விருப்பு வாக்குகள் பெற்றதில் முதலிடத்தில் வரமுடியவில்லை. திரு. கருணாகரம் தனது தேர்தல் விளம்பரங்களில் ரெலோவின் பெயரையோ, கூட்டமைப்புப் பெயரையோ பயன்படுத்தவில்லை. இது ரெலோ மீது அவருக்கு இருந்த அதிருப்தியின் வெளிப்பாடே. அப்படியிருந்தும் இம்முறை அவரது தனிப்பட்ட செல்வாக்கும் வீழ்ச்சியடைந்துள்ளது.

# யாழ்-வன்னி வாக்களிப்பு

## ஈ.பி.ஆர்.எல்.எஃப். வருத்தம்

யாழ்-வன்னி வாக்களிப்பு பற்றி ஈ.பி.ஆர்.எல்.எஃப். அதிருப்தி தெரிவித்து அறிக்கை விட்டிருக்கிறது.

இலண்டன் பி.பி.சி. வெளியிட்ட செய்திக்குறிப்பொன்றில் "வடக்கு-கிழக்கில் நடைபெற்ற வாக்களிப்பை சர்வதேச பார்வையாளர் குழு சரியாகக் கண்காணிக்கவில்லை, என்று சிறு குழு ஒன்று குற்றம்சாட்டியிருக்கிறது." என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை வன்னியில் தமது ஆதரவாளர் ஒருவர் சுடப்பட்டதற்கு ஈ.பி.ஆர்.எல்.எஃப்பே காரணம் என்று புளொட் குற்றம் சாட்டியிருக்கிறது.

# "தமிழனுக்கு உணர்ச்சி கிடையாது!"

## தோல்வியால் வந்த ஞானம்!

கொழும்பில் சுய இச்சைக்குழுவில் போட்டியிட்டு- முரசு முன்கூட்டியே கூறிய சரியான கணிப்புப்படி - 2 வீதமான வாக்குகள் மட்டுமே பெற்று தோல்வியடைந்த பொன்னானவரின் புத்திரருக்கும் அவருக்கு தெரிந்தவருக்கும் இடையே நடந்த தொலைபேசி உரையாடலை கீழே தருகிறோம்.

"அண்ணர் கொழும்பில் தமிழ் வாக்காளர்கள் எத்தனை பேர்?"

"இந்திய வம்சாவளி மக்களை தவிர்த்துப் பார்த்தாலும் 1 இலட்சம் வரும் தம்பி."

"அப்ப ஏன் அண்ணர் உங்களுக்கு போடேல்லை?"

"தம்பி! தமிழனுக்கு உணர்ச்சியே இல்லைத் தமபி."

"ஒருவேளை பயத்திலை-கலவரம் வந்தாலும் எண்டு போடேல்லையோ?"

"இதென்ன தம்பி? நான் ஒருத்தன் இருக்கிறன். பயப்படாதேயுங்கோ எண்டு சொல்லியும் பயந்தா இதென்ன தம்பி?"

"இல்லையண்ணை. சனம் பாதி வவுனியா, றிங்கோ எண்டு போட்டுதோ?"

"பிறகேன் தம்பி அவை கொழும்பிலை இவளவு காலமும் இருந்தவையள்?"

உரையாடலின் முக்கிய பகுதி இதுதான். தங்களுக்கு வாக்குப் போடாவிட்டால் தமிழனுக்கு உணர்ச்சியே இல்லை என்று கூறும் பொன்னான குணம் யாருக்குப் பலம்?

செலவிட்ட பணத்திற்கு ஏற்ற வாக்குகள்கூட கிடைக்கவில்லை என்று சுய இச்சைகள் சிலர் புலம்புகிறார்களாம்.

# கூட்டணி ஆதரவாளர்களுக்கு மிரட்டல்

(சக்தீவன்)

திருகோணமலையில் தமிழர் விடுதலைக் கூட்டணி ஆதரவாளர்கள் சிலர் தேர்தல் முடிவு வெளியானவுடன் தாக்கப்பட்டனர். தோல்வியடைந்த அமைப்பொன்றே தாக்குதலில் ஈடுபட்டதாம்.

கூட்டணியில் வெற்றிபெற்ற திரு. தங்கத்துரை, கூட்டணியின் செயலதிபர் திரு.சம்பந்தன் ஆகியோரையும் அந்த அமைப்பினர் மிரட்டினார்களாம்.

இதனையடுத்து கூட்டணியினர் பொலிசில் புகார் செய்தனர். திரு.சம்பந்தனின் இல்லத்துக்கு பொலிஸ் பாதுகாப்பு வழங்கப்பட்டது.

சம்பந்தப்பட்ட அமைப்பின் மூன்று வேட்பாளர்கள் பொலிசாரால் தீவிரமாக விசாரிக்கப்பட்டனர்.

மூதூரில் சில பகுதிகளில் கூட்டணியினருக்கு வாக்களிக்கவேண்டாம் என்று ஒரு தமிழ் அமைப்பினர் மிரட்டியதால் அங்கு பலர் வாக்களிப்பில் கலந்துகொள்ளவில்லை.

திருமலையில் கூட்டணி இரு ஆசனங்களைப் பெறமுடியாமல் போனமைக்கு, மிரட்டலுக்குப் பயந்து ஒரு பகுதி மக்கள் வாக்களிக்காமல் விட்டதும் ஒரு காரணம் என்று கூறப்படுகிறது.

கட்சி மோதலால் தமிழர்கள் இழந்தது ஒரு பிரதிநிதித்துவம். அந்தோ பரிதாபம்.

# துள்ளியவர்கள் துவண்டனர்

வவுனியாவில் நடைபெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டமொன்றில் ஈ.பி.ஆர்.எல்.எஃப். செயலாளர் சுரேஸ் பிரேமச்சந்திரன் முரசுமீது எக்கச்சக்கமாகக் கோபப்பட்டார்.

வன்னியில் ஈ.பி.ஆர்.எல்.எஃபிற்கு வெற்றி வாய்ப்பில்லை என்று முரசு இறுதியாக வெளியிட்ட கணிப்பே அவரது கோ....பத்திற்கு காரணமாகும்.

'இவர்களுக்கு (முரசுக்கு) எப்படி இதெல்லாம் தெரியும்' என்று அவர் அன்று எழுப்பிய கேள்விக்கு ஆகஸ்ட் 17ல் பதில் கிடைத்தது. அவருக்கு வாக்காளர் பலம் இல்லையென்பதை நமது வாசகர் பலம் மூலமான கணிப்பு முன்கூட்டியே கூறிவிட்டது.

அதுபோலவே கூட்டணியை வசைபாடியபடி அமுதர் பாணியில் பேசமுற்பட்ட ரெலோவின் சிறீகாந்தாவும் திருமலைக் கூட்டமொன்றில், "இங்கு கூட்டணியே வெல்லும் என்று முரசுக்கு எப்படித் தெரியும்?" என்று தோல்விக் காச்சலில் ஏற்பட்ட பண்பாடற்ற வார்த்தைகளால் (மகாவீரர்) துள்ளினார். அவரும் ஆகஸ்ட் 17இல் துவண்டு போனார். அவரது வீர வசனங்களைத் தூக்கி வாக்காளர்கள் அவரது முகத்தில் எறிந்துவிட்டனர். வாய்ப்பந்தல்களுக்கு இனி மரியாதை கிடையாது. சும்மா துள்ளிச் செல்லாதையா!

# சிவாவின் தோல்வி ஏன்?


## தேசியப் பட்டியலில் செல்ல வற்புறுத்தல்

வவுனியாவில் கூட்டணித் தலைவர் திரு.மு.சிவசிதம்பரம் தோல்வியடைந்தமை கூட்டணி வட்டாரத்தில் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

பழம்பெரும் அரசியல்வாதியான திரு. சிவா வவுனியாவில் போட்டியிட முதலில் விரும்பவில்லை. கூட்டணி பிரமுகர்கள் பலர் வற்புறுத்தியதால் மட்டுமே அங்கு போட்டியிட்டார்.

ஆனால்- கூட்டணியின் தீவிர ஆதரவாளர்கள் வன்னியில் புலிகளது கட்டுப்பாட்டில் உள்ள பகுதிகளுக்குள்தான் இருக்கிறார்கள். கூட்டணிக்கு வெற்றி வாய்ப்பினை அளிக்கக்கூடிய அந்த வாக்குகள் கிடைக்காமல் போய்விட்டன. இவ்வாறான நிலை இருப்பதை முரசு முன்கூட்டியே தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

அதுமட்டுமல்லாமல் 1977 பொதுத் தேர்தலில் கூட கூட்டணி வேட்பாளர் அமரர் தா.சிவசிதம்பரம் குறைந்தளவு வாக்கு வித்தியாசத்தில்தான் வெற்றிபெற முடிந்தது. தா.சிவசிதம்பரம்மீது வன்னி வேட்பாளர்களுக்கு இருந்த அதிருப்தியும் இம்முறை கூட்டணியின் தோல்விக்கு ஒரு காரணம். கூட்டணியின் முக்கிய பிரமுகராக இருந்த திரு.கேதீஸ்வரன் பொதுஜன முன்னணியில் போட்டியிட்டதும் கூட்டணி வாக்குகள் குறைய இன்னொரு காரணமாகும்.



சரியான கணிப்பின்றி வன்னியில் தமது முக்கிய தலைவரைப் போட்டியிடவைத்தமை கூட்டணியின் ஒட்டுமொத்தமான தவறாகும் என்றே அபிப்பிராயம் நிலவுகிறது.

திரு.மு.சிவசிதம்பரம் ஒரு பண்பட்ட அரசியல்வாதியாவார். நீண்டகால தொடர்ச்சியான அரசியல் அனுபவமுள்ள சிவாவின் தோல்விக்கு தனிப்பட்ட ரீதியில் அவர் காரணமல்ல. ஆயினும் மக்கள் தீர்ப்பை ஏற்றுக்கொண்டு அரசியல் நாகரிகத்தோடு அவர் ஒரு அறிக்கை வெளியிட்டிருந்தார்.

தேசியப் பட்டியல் மூலம் திரு.மு. சிவசிதம்பரம் பாராளுமன்றம் செல்ல வேண்டும் என்று கூட்டணி ஆதரவாளர்கள் பலர் வலியுறுத்தினார்கள்.

வெளிநாடுகளிலுள்ள கூட்டணி ஆதரவாளர்களும் சிவாதான் தேசியப் பட்டியல் மூலம் பாராளுமன்றம் செல்ல வேண்டும் என்று கொழும்பிலுள்ள கூட்டணி தலைமைக் காரியாலயத்திற்கு தந்திகள் அனுப்பி வைத்தனர்.

சிவா போன்ற ஒருவர் பாராளுமன்றம் செல்வது தற்போதைய காலகட்டத்தில் மிக அவசியம் என்பதே கூட்டணி ஆதரவாளர்கள் பெரும்பான்மையோரின் எண்ணமாகும்.

ஆயினும்-தேசியப் பட்டியலில் செல்ல சிவா விரும்பவில்லை.

மாவை சேனாதிராஜாவும் தேசியப் பட்டியலில் செல்ல விருப்பம் தெரிவித்தார்.

இதேவேளை திரு.தங்கத்துரை தேசியப் பட்டியலில் திரு.சம்பந்தன் செல்ல வேண்டும் என்று வற்புறுத்தியதாக கூறப்படுகிறது.

இறுதியில், தேசியப் பட்டியல் பிரச்சனையை தீர்க்க ஏற்கனவே தேசியப் பட்டியலில் இருந்த திரு.நீலன் திருச்செல்வத்திற்கே வாய்ப்பு வழங்குவதாக முடிவு செய்யப்பட்டது.

நீலனும் திரு.சிவா செல்லாவிட்டால் தானே தெரிவாக வேண்டும் என்று விரும்பினாராம். அதனால் தேசியப் பட்டியல் பா.உறுப்பினராக நீலன் பாராளுமன்றம் செல்லுகிறார்.

# வாக்களிப்பு நடந்தபோது

## வாபசான செயலாளர்

வவுனியாவில் இராஜகுகணேஸ்வரனது தோல்விக்கு அவரது கட்சியின் செயலாளரே முக்கிய காரணம் என்று கூறப்படுகிறது.

புளொட் அமைப்பினர் பிரசாரத்தில் மிகத் திறமையாக செயற்பட்டனர். வாக்காளர்களை கவரும் விதமான உத்திகளையும் திட்டமிட்டுக் கையாண்டனர்.

ஆனால் ஈ.பி.ஆர்.எல்.எஃப். தலைமை இராஜகுகணேஸ்வரனுக்கு தேர்தல் செலவுக்குக்கூட உரிய பணத்தை கொடுக்காமல் யோசித்துக் கொண்டிருந்ததாம்.

இராஜ குகணேஸ்வரன், இம்மானுவல் சில்வா ஆகியோரது தனிப்பட்ட செல்வாக்கு காரணமாகவே வன்னியில் மூவாயிரம் வாக்குகளை ஈ.பி.ஆர்.எல்.எஃப். பெறமுடிந்தது.

ஆகஸ்ட் 16ம் திகதி வாக்களிப்பு நடந்து கொண்டிருந்தபோதே தோல்வியை ஊகித்துக்கொண்ட ஈ.பி.ஆர்.எல்.எஃப். செயலாளர் அன்று மதியமே வன்னியை விட்டு நைசாக நழுவி கொழும்பு சென்று விட்டாராம்.

# கடை எரிப்பு

கந்தப்பளையில் கட்சி மோதல்கள் காரணமாக சில கடைகள் எரிக்கப்பட்டன.

ஐக்கிய தேசியக் கட்சி ஆதரவாளர் ஒருவரது கடைக்கு வைக்கப்பட்ட தீ பரவி அருகிலுள்ள கடைகளையும் நாசமாக்கியதாக பேசப்படுகிறது.

ஊர்வலம் வந்த ஒரு கட்சி ஆதரவாளர்கள் மீது மறு கட்சியினர் கல்லெறி நடத்தியதில் சிலர் காயமடைந்தனர்.

# சம்பந்தன் வீடு முற்றுகை

திருகோணமலையில் உள்ள கூட்டணி செயலதிபர் திரு.சம்பந்தன் வீட்டை அவரது ஆதரவாளர்கள் முற்றுகையிட்டனர்.

தேசியப் பட்டியல் மூலம் கூட்டணிக்கு கிடைத்துள்ள ஒரு ஆசனத்தை திரு. சம்பந்தனே பெறவேண்டும் என்று அவர்கள் வற்புறுத்தினார்கள்.

மூதூரில் அளிக்கப்பட்ட விருப்பு வாக்குகளில் பெரும்பாலானவை திரு.தங்கதுரைக்கே கிடைத்திருந்தன. ஆனால் திருகோணமலையில் சம்பந்தன் ஆதரவாளர்கள் தமது விருப்பு வாக்கில் ஒன்றை திரு.தங்கதுரைக்கும் வழங்கியிருந்தனர். திரு.தங்கத்துரை ஆதரவாளர்கள் தமது விருப்பு வாக்கை அவருக்கே வழங்கிவிட்டனர். ஏனைய இரு விருப்பு வாக்கையும் ஏனைய வேறு எவருக்கும் செலுத்தவில்லை. அதனால்தான் சம்பந்தன் குறைந்த விருப்பு வாக்கு பெற்றுத் தோல்வியடைந்தார் என்பது சம்பந்தனின் ஆதரவாளர்களது வாதம்.

விளம்பரப் பகுதி



மலையாள மாந்திரீகம்

வெளிநாடுகளிலும் உள்நாட்டிலும் கடந்த 27 வருடங்களாக மாந்திரீகத் துறையில் உண்மையான, நிலையான சேவை.

உண்மையை அறிய நேரில் வாருங்கள்.
உங்கள் குறை என்ன?
வாழ்வில் நிந்திப்பா?
வறுமையில் தவிப்பா?
இஷ்ட தேவவைகளில் குறையா?
இஷ்டப்பட்டவனையோ,
இஷ்டப்பட்டவளையோ
தீர்க்கமாகவே அடைந்து தீர வேண்டுமா? இன்னலுக்குப் பின் இன்னலாக வரும் தறுவாயில் எதிர் நீச்சலுக்கு ஏணிப்படியாக பற்பல உற்சாடனங்கள் உண்டு. இன்னும் வசிய சொக்கலேட், தீர்க்க முடியாது என முடிவெடுக்கப்பட்ட ஆஸ்துமா நோய், தீராத நோய்கள் அனைத்துக்கும் அம்மனிடம் வாருங்கள்.

கொழும்பு கொட்டாஞ்சேனையில் 20முதல் 31 வரை நிச்சயம் சேவையில் இருப்பேன். இத்தினங்களில் பூஜைகள், ஆராதனைகள், அன்னையின் அன்பு, அரவணைப்பு, ஆசீர்வாதங்கள் பெறலாம். அதுமட்டுமல்ல. எமது பிரிவில் கைரேகை நிபுணத்துவம், வாழ்க்கைச் சுவடி சாஸ்திரம், ஜாதகக் குறிப்பு, என் ஞானக் குறிப்பு, இனியும் வேறு என்ன என்பதற்கு நேரில் வரவும்.

தலைமைப்பீடம்
P.K.சாமி JDGAN
(மாந்திரீகச் சக்கரவர்த்தி)
சிறீ துர்க்காதேவி ஆலயம்
32, தினச்சந்தை
காம்பிளக்ஸ்
நுவரெலியா.

கொழும்பு இல்லம்–
இல: 162,
கொட்டாஞ்சேனை வீதி,
கொட்டாஞ்சேனை.
கொழும்பு-13.

தொலைபேசி: 052-2508, 052-3093, 01-342463, 01-342464

வெளிநாட்டு ஆடர்கள் உடனுக்குடன் கவனிக்கப்படும்.
FAX: 0094 2508, 0094 3093

வீடியோ படப்பிடிப்பில் முன்னணி நிறுவனம்
VICTOP RECORDING STUDIO
356, GALLE ROAD, WELLAWATTE, COLOMBO-6

ஆவணி மாதம் பிறந்துவிட்டது. உங்கள் திருமணம் மற்றும் விசேட நிகழ்ச்சிகளை சிறந்த முறையில் Video மூலமும் எடுத்துப் பெற்றுக்கொள்ள முன்கூட்டியே பதிவு செய்து கொள்ளுங்கள்.

அதுமட்டுமல்ல, மங்களகரமான நிகழ்ச்சிகளை சிறந்த வீடியோ கமராக்களில் பதிவுசெய்வதோடு, ஸ்டில் புகைப் படங்களையும் சிறந்த முறையில் எடுத்துத் தருவோம்.

மற்றும் மங்கள நிகழ்ச்சிகளுக்கு தேவையான அலங்காரப் பொருட்கள் (மேக்கப் செற்) வாடகைக்குப் பெற்றுக் கொள்ளலாம்.
* T.V.—டெக் வாடகைக்கு
* 24 மணி நேரம் குளிரூட்டப்பட்ட எயர்போட்டிற்கான வான் சேவீஸ்.

உங்கள் மின்சார உபகரணங்கள் பழுதடைந்துவிட்டதா? 592453, 078 69749 இலக்கத்துடன் தொடர்பு கொள்ளுங்கள். உங்கள் இல்லத்தில் உங்கள் கண்முன் திருத்தித் தரப்படும்.

பிறந்தநாள் வாழ்த்து



தர்கா நகர்
தாருஸ்ஸலாம்
இல்லத்தைச் சேர்ந்த
பௌசுல் ஹினாயா-
பைஸர் தம்பதியின்
செல்வப் புதல்வன்
முஹம்மட் அஸ்ரான்
Mohaammed Asran
தனது முதலாவது
பிறந்த தினத்தை
20.08.1994ல்
கொண்டாடினார்.
இவரை உம்மா, வாப்பா,
உம்மும்மா, அப்பா,
வாப்பும்மா, பெரியப்பா
மார், பெரியம்மாமார்,
சாச்சாமார், சாச்சிமார்,
மாமாமார், மாமிமார்,
பாஹிம் நானா, இஷாரா
தாத்தா (தங்கா), மற்றும்
தாத்தாமார், நானாமார்,
மச்சான்மார், மதினிமார்,
டோட்டி தாத்தா மற்றும்
உற்றார் உறவினர்கள் அனைவரும் வல்ல அல்லாஹ்வின் அருளால் சீரும் சிறப்புமாக வாழ வாழ்த்துகிறார்கள்.

நேரடியாக முரசு கரம் சேர இதோ ஒரு வாய்ப்பு!

தினமுரசு உள்ளூர் சந்தா விபரம்:

| | | |
|---|---|---|
| ஒரு வருடத்திற்கு | ரூபா 440/= | (52 வாரங்கள்) |
| ஆறு மாதங்கள் | ரூபா 225/= | (26 வாரங்கள்) |
| மூன்று மாதங்கள் | ரூபா 115/= | (13 வாரங்கள்) |

சந்தாதாரராக விரும்புவோர் தங்களது சுயமுகவரியிட்ட கடிதமூலம் தொடர்பு கொள்ளவும். சந்தாப்படிவம் எம்மால் அனுப்பிவைக்கப்படும்.

தினமுரசு வாரமலர்
த.பெ.இல:1772
கொழும்பு

THINAMURASU VAARAMALAR
P.O.BOX: 1772
COLOMBO

என்ற முகவரிக்கு கடிதங்களை அனுப்பிவைக்கும்படி கேட்டுக் கொள்கிறோம்.

விளம்பரம் செய்து வியாபாரத்தைப் பெருக்குங்கள்.
விளம்பர மேலாளர் Advertising Manager
இல.5, காவிந்த பிளேஸ், No.5, Kavinda Place,
கிருலப்பனை Kirulapone
கொழும்பு-06. Colombo-06.

# அதிகாரமுள்ள ஜனாதிபதியும் ஆட்சிக்கு வந்துள்ள புதிய பிரதமரும்

## •எக்ஸ்ரே ரிப்போர்ட்•

பொதுத் தேர்தல் புதிய ஆட்சியை கொண்டு வந்திருக்கிறது.

யாருக்கும் தனித்த பெரும்பான்மைப் பலம் கிடையாது.

பொதுஜன முன்னணிக்கு முடிவுகள் ஓரளவு ஏமாற்றம்தான். சிறிது கவலையும்தான்.

ஐக்கியதேசியக் கட்சிக்கு தனது தோல்வி முன்கூட்டியே தெரிந்த விசயம் என்றே நினைக்கத் தோன்றுகிறது.

என்றாலும் படுதோல்வி என்று சொல்லமுடியாத அளவுக்கு தப்பிக் கொண்டமை அதன் கௌரவத்தை காப்பாற்றியிருக்கிறது.

இன்றைய பிரதமர் சந்திரிக்காவுக்கு அடுத்தபடியாக அதிக விருப்பு வாக்குப் பெற்றுள்ளார் முன்னாள் பிரதமர் ரணில்.

அதன்மூலம் அவர் தனது கௌரவத்தை கட்சிக்குள் நிலைநாட்டியுள்ளதோடு தனது மறைமுகமான போட்டியாளர் திரு.காமினி திசநாயக்காவைவிட அதிக விருப்பு வாக்குகளையும் பெற்றுக் கொண்டுள்ளார்.

பொதுஜன முன்னணிக்கு முஸ்லிம் காங்கிரஸ் உறவு கைகொடுத்திருக்கிறது.

தேர்தல் பிரசாரத்தில் அஷ்ரப் கூறியதுபோல பொதுஜன முன்னணி-முஸ்லிம் காங்கிரஸ் அரசாங்கம் அமைக்கப்பட்டுள்ளது.

ஆயினும் பொதுஜன முன்னணியின் முக்கியஸ்தர்கள் அதனை இருவரும் அடிவாங்கியுள்ளனர். தேவராஜ்-யோகராஜன் இருவரும் களத்தில் தோற்று வெறுங்கையுடன் திரும்பியது எதிர்பாராத ஒன்றுதான்.

ஆனாலும் மலையக தமிழ் வாக்காளர்கள் இ.தொ.காவை பெரிதாக ஏமாற்றவில்லை. அங்கு ஐக்கிய தேசியக் கட்சி வெற்றி பெறுவதற்கும் இ.தொ.கா வாக்கு வங்கியே பயன்பட்டிருக்கிறது.

கிழக்கில் அம்பாறை மாவட்டத்தில் சிங்கள வாக்காளர்களின் கணிசமான ஆதரவோடு ஐ.தே.கட்சி வெற்றி பெற்றிருக்கிறது. தமிழ்-முஸ்லிம் வாக்குகளும் ஓரளவு ஐ.தே.கட்சிக்கு கிடைத்துள்ளன.

அம்பாறையிலும்- திருமலையிலும் வடக்கு-கிழக்கு பிரிப்புக்கான ஐ.தே.கட்சியின் தீவிர பிரசாரம் சிங்கள வாக்காளர்களை கவர்ந்திருக்கிறது. வாக்குகளை அறுவடை செய்ய உதவியிருக்கிறது.

குறிப்பாக அம்பாறையில் தீவிரமான இனவாதப் பிரசாரம் ஐ.தே.கட்சியால் மேற்கொள்ளப்பட்டது கவனத்திற்குரியது.

வடக்கு-கிழக்கு இணைக்கப்பட்டால் கிழக்கில் உள்ள சிங்கள மக்களுக்கு பாதுகாப்பு இல்லை. ஆபத்து நிச்சயம் என்ற வாதம் அங்குள்ள சிங்கள வாக்காளர்களை அச்சுறுத்தியிருக்கிறது.

இனவாதத்திற்கு அப்பால் தமது பாதுகாப்பு பற்றிய அச்ச உணர்வு ஐ.தே. கட்சிக்கு அவர்களை வாக்களிக்கச் செய்திருக்கிறது.

இதேவேளை- மிகவும் தீவிர சிங்கள வழங்கப்படவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது.

இத் தேர்தலில் இரண்டு அரசியல் கட்சிகள் நியாயம் சொல்லி தப்பிக்கொள்ள முடியாத அளவுக்கு மக்களால் நிராகரிக்கப்பட்டுள்ளன.

சிங்கள மக்கள் மத்தியில் நவசமசமாஜக் கட்சியும், தமிழ் மக்கள் மத்தியில் ஈ.பி.ஆர்.எல்.எஃப்பும் நிமிரவே இடமில்லாமல் படுமோசமான அடிவாங்கியிருக்கின்றன.

வெற்றி தோல்வி சகஜம் என்று இக் கட்சிகள் கூற முடியாது. ஏனெனில் களத்தில் தகுதியான கவனத்திற்குரிய போட்டியாளர்களாகக்கூட இரு கட்சிகளும் விளங்கவில்லை குறைந்த பட்சம் தோல்விப் பட்டியலில் மூன்றாவது நாலாவது இடத்தைக்கூட அவற்றால் தக்கவைக்க முடியவில்லை. எதிர்க்கவே பலமில்லாதபோது வெற்றி தோல்வி சகஜம் என்று கூறுவது விழுந்தும் மீசையில் மண்படவில்லை என்ற கதைதான்.

தோல்வியடைந்த கட்சிகள் மக்கள் தீர்ப்பினை மதித்து அறிக்கை விடுவது ஜனநாயக மரபுக்கு ஏற்றதுதான்.

ஆனால்- சில கட்சிகள் தங்களை வாக்காளர்கள் மிதித்திருக்கிறார்கள் என்பதையும் கவனத்தில் கொண்டு தமது தவறுகளை திருத்திக்கொள்ளவேண்டும்.

பொதுஜன முன்னணி ஆட்சிக்கு வந்துள்ளபோதும் அதிகாரம் கொண்ட ஜனாதிபதி ஐக்கிய தேசியக் கட்சியைச் சேர்ந்தவர்.

எதிரும்-புதிருமான ஒரு நிலை நடந்து கொள்ள முடியாது.

மறு புறத்தில் ஏனைய கட்சிகளை அரவணைத்துச் செல்லும் அவசியம் காரணமாக ஜனநாயகத் தன்மையான அணுகுமுறைகளை புதிய பிரதமர் கையாள வேண்டிய நிலை இருக்கிறது.

அதிலே அவர் வெற்றிபெற்றால் ஜனநாயக நெறி முறைகளை பேணுகின்றவர் என்கின்ற மதிப்பினை பெற முடியும். அது ஜனாதிபதித் தேர்தலில் வாக்காளர்களின் ஆதரவினை அதிகரிக்க வழி ஏற்படுத்தும்.

ஜனாதிபதியோடு முரண்பட்டுக் கொள்ளும் நடைமுறையை பொதுஜன முன்னணி உடனடியாக விரும்பாது.

அதே சமயம் ஜனாதிபதி டி.பி. விஜேதுங்கா மாற்றுக் கட்சி அரசாங்கத்தோடு இணக்கமாக நடந்து கொள்ளும் பண்புகளை கொண்டவர் என்னும் அபிமானத்தை பெறுவதையும் பொதுஜன முன்னணி விரும்பாது.

ஏனெனில் அது ஜனாதிபதித் தேர்தலில் டி.பி.விஜேதுங்கா ஆதரவினைப் பெற சாதகமாக அமைந்துவிடும் என்று பொ.ஜ. முன்னணியினர் கருதுவர்.

அதே சமயம் பொதுஜன முன்னணியால் சிறந்த நிர்வாகத்தை தரமுடியும் என்கின்ற எண்ணம் ஏற்படாமல் பார்த்துக்கொள்வதில் ஐ.தே.கட்சியும் கவனம் செலுத்தும்.

புதிய ஆட்சிக்கு சந்தர்ப்பம் வழங்குவோம் என்று ரணிலும், காமினியும் கூறியுள்ளபோதும் அதனை ஒரு அரசியல் சாணக்கியப் பேச்சாகவே நோக்க முடிகிறது.



இனவாதக் கட்சியென்று கருதப்படுகின்ற மக்கள் ஐக்கிய முன்னணியும் அதன் தலைவர் தினேஷ் குணவர்த்தனவும் படு தோல்வி கண்டுள்ளனர். இது ஒரு நல்ல சகுணம் என்றே இனவாதத்தின் எதிரிகள் நம்புகின்றனர்.

இரத்தினபுரி மாவட்டத்தில் வாசுதேவ நாணயக்காராவின் அமோக வெற்றியும் கவனிக்கப்படவேண்டியதே.

தனது கட்சியான நவசமசமாஜக் காணப்படுகிறது.

ஆனாலும் புதிய ஆட்சிக்கு எதிராக ஜனாதிபதி உடனடியாக ஏதாவது செய்தால் மக்களது அனுதாபம் பொதுஜன முன்னணியின் பக்கமே திரும்பும்.

எனவே-ஜனாதிபதியும் நெளிவு சுழிவாகவே நடந்து கொள்ளவேண்டியிருக்கும்.

தோல்வியடைந்தபோதும் தமது ஜனாதிபதியே பதவியில் இருக்கிறார் என்றுசொல்லி ஐ.தே.கட்சியினர் ஆறுதல் பட்டுக்கொள்கிறார்கள்.

ஐ.தே.கட்சியின் பொதுச் செயலாளர் திரு.காமினி விஜயசேகர புதிய ஆட்சி ஆறுமாத காலமே நீடிக்கும் என்று கூறியிருக்கிறார்.

நிலையான ஒரு அரசாங்கத்தை ஐ.தே.கட்சியால் மட்டுமே ஏற்படுத்த முடியும் என்னும் எண்ணத்தை உருவாக்குவதே அக் கட்சியின் அரசியல் தந்திரோபாயமாக கொள்ளப்படும் என்பது தெளிவானது.

ஆயினும்-பாராளுமன்றத்தில் பொதுஜன



வெளிப்படையாகக் கூறுவதற்கு தயங்குகிறார்கள்.

மலையக மக்கள் முன்னணி சந்திர சேகரனின் ஆதரவும் பொதுஜன முன்னணிக்கு கிடைத்திருக்கிறது.

சிறுதுளி பெருவெள்ளம். ஒரே ஒரு உறுப்பினர் என்றபோதும் சந்திர சேகரனின் ஆதரவு பொ.ஜ.முன்னணிக்கு பெரிய உதவியாகிவிட்டது.

சந்திரசேகரனுக்கு இது ஒரு நல்ல வாய்ப்பு.

மலையகத்தில் தமது கட்சியை பலமுள்ளதாக்க இதைவிட வேறு ஒரு சிறந்த சந்தர்ப்பம் அவருக்கு கிடைக்க முடியாது.

மலையக மக்கள் முன்னணி தன்னை பலப்படுத்திக்கொள்வது இ.தொ.காவுக்கு பிடிக்காத காரியம்.

தொண்டாவை விட்டு விலகிய எவரும் அரசியலில் நிலைத்ததில்லை என்ற வாதம் சந்திரசேகரனால் அடிபட்டிருக்கிறது.

அதேவேளை-ஏற்கனவே எக்ஸ்ரே ரிப்போர்ட்டில் முன்கூட்டியே கூறியது போல திரு.செல்லச்சாமி சுருண்டு போனார்.

அதனால் இ.தொ.காவுக்கு மகிழ்ச்சியாகவே இருந்திருக்கும்.

ஆனால் மகிழ்ச்சியை முழுமையாக அனுபவிக்க முடியாதவாறு கொழும்பில் இ.தொ.காங்கிரஸ் வேட்பாளர்கள் கட்சியின் முடிவை எதிர்த்து பொ.ஜன முன்னணியில் இணைந்து போட்டியிட்டவர் வாசு.

தொலைக்காட்சி விவாதத்தில் வடக்கு-கிழக்கு இணைந்திருக்க வேண்டும் என்று துணிந்து கூறிய ஒரே ஒரு சிங்கள அரசியல்வாதியும் அவர்தான்.

பொதுஜன முன்னணித் தலைவர்கள் கூட அவ்வாறு பகிரங்கமாக தெளிவாகக் கூறவில்லை.

வாசுதேவ நாணயக்கார வடக்கு-கிழக்கு இணைப்புக்கு ஆதரவு என்று கூறியதை ஒரே பிடியாகப் பிடித்துக்கொண்ட ஐ.தே. கட்சி அதனை பொ.ஜ.முன்னணிக்கு எதிராகப் பயன்படுத்தியது.

எனினும் வாசுதேவ நாணயக்கார அதிக விருப்பு வாக்குகளைப் பெற்று வெற்றி பெற்றுள்ளார்.

நவ சமசமாஜக் கட்சி சில குழுக்களோடு இணைந்து போட்டியிட்டு படு தோல்வியைச் சந்தித்துள்ளது.

எனவே -வாசுவை மீண்டும் அழைத்துக் கொள்ள அக் கட்சி விரும்பக்கூடும். வாசுவும் சம்மதிக்கலாம்.

தனி மனிதனாக இருப்பதைவிட நவசமசமாஜக் கட்சியின் சார்பில் பொ.ஜ.முன்னணியில் இருப்பதையே அவர் விரும்பக்கூடும். அது ஒரு கௌரவமாகவும் இருக்கும்.

இதுவரை வாசுவுக்கு பொதுஜன முன்னணியால் அமைச்சர் பதவி எதுவும் என்றுசொல்லி ஐ.தே.கட்சியினர் ஆறுதல் பட்டுக்கொள்கிறார்கள்.

எனினும் தேர்தல் முடிவுகளால் உத்வேகம் அடைந்த பொதுஜன முன்னணியினர் ஐ.தே.கட்சி ஆதரவாளர்களை தாக்கியுள்ளனர். இரு தரப்பும் பல்வேறு பகுதிகளில் ஆக்ரோஷமாக மோதிக் கொண்டனர்.

இதனையடுத்து ஜனாதிபதி ஊரடங்கை நீடிக்க வேண்டியேற்பட்டது. தனது கட்சி ஆதரவாளர்களை காப்பாற்றும் பொறுப்பையும் அதன்மூலம் அவர் செய்யவேண்டி ஏற்பட்டது.

ஜனாதிபதியைச் சந்தித்த பொதுஜன முன்னணி ஊரடங்கு நேரத்தை குறைக்குமாறு கேட்டதையடுத்து ஊரடங்கு தளர்த்தப்பட்டது.

வன்முறை வேண்டாம் என்று புதிய பிரதமர் தொலைக்காட்சியில் தோன்றி வேண்டுகோள் விடுத்தபோதும் அது ஒரு சம்பிரதாய அறிவிப்பாகவே அவரது கட்சியினரால் நோக்கப்பட்டதுபோலவே ஆங்காங்கே மோதல்கள் தொடர்ந்தன.

17 வருடமாக அடக்கி வைத்திருந்த கோபத்தை தேர்தல் வெற்றிமூலம் ஏற்பட்ட உற்சாகத்தின்மூலம் பொதுஜன முன்னணியின் தொண்டர்கள் வெளிப்படுத்தித்தான் ஓய்ந்தார்கள்.

பாராளுமன்றத்தில் தனிப் பெரும்பான்மை இல்லாமையால் எடுத்தேன்-கவிழ்த்தேன் பாணியில் பொதுஜன முன்னணி முன்னணியை ஆட்டம் காணச் செய்யும் நடவடிக்கைகளை ஐ.தே.கட்சியால் மேற்கொள்ள முடியாது என்றே தெரிகிறது.

முஸ்லிம் காங்கிரஸ், தமிழர் விடுதலைக் கூட்டணி, புளொட் ஆகிய கட்சிகள் பொதுஜன முன்னணியை ஆதரிக்கின்றன.

ஈ.பி.டி.பியும் பொதுஜன முன்னணி அரசாங்கத்தை எதிர்க்கப் போவதில்லை என்று கூறியுள்ளது.

வடக்கு-கிழக்கு பிரிப்புக்கு உறுதியான எண்ணம் கொண்டுள்ள ஐ.தே.கட்சியை ஆதரிப்பது தமிழ் கட்சிகளைப் பொறுத்தவரை சாத்தியமானதல்ல.

அவ்வாறு ஆதரித்தால் தமிழ் மக்கள் மத்தியில் அந்நியப்படும் நிலையே ஏற்படும்.

இதேவேளை இ.தொ.காங்கிரசும் பொதுஜன முன்னணியை பகைத்துக் கொள்ளாத நிலைப்பாட்டையே கொள்ளும் என்று தெரிகிறது.

ஐ.தே.கட்சிப் பட்டியலில் போட்டியிட்டு தெரிவாகியுள்ளதால் பொ.ஜ முன்னணிக்கு பகிரங்கமாக ஆதரவளிப்பது அல்லது அரசாங்கத்தில் பங்குகொள்வது என்பது சட்ட ரீதியான பிரச்சனைகளை தோற்றுவிக்கும்.

ஆயினும்கூட இரகசிய வாக்கெடுப்புக்களில் பொதுஜன முன்னணியை இ.தொ.கா. ஆதரித்தால் சட்ட ரீதியான பிரச்சனைகள் எது ம் செய்ய முடியாது.

தனது வாக்கு வங்கியின் பலத்தின் மூலமாக ஐ.தே.கட்சியை மீண்டும் ஆட்சியில்

## நாரதர்

ஏற்றுவேன் என்று இ.தொ.கா தலைவர் திரு.தொண்டமான் கூறியிருந்தார்.

அதனை நிறைவேற்ற முடியாமல் போய்விட்டது.

புதிய ஆட்சி தொடர்பான எதிர்பார்ப்புகள் சகல தரப்பு மக்களிடமும் காணப்படுகின்றன.

தமிழ் பேசும் மக்களுக்கு சாதகமானவர் என்னும் எண்ணத்தையும் புதிய பிரதமர் திருமதி சந்திரிக்கா பெற்றுள்ளார்.

அதேவேளை திரு.சந்திரசேகரனும் மலையக தமிழ் மக்களது நலன் குறித்த கோரிக்கைகளை முன்வைத்துவிட்டுத்தான் அரசாங்கத்தில் இணைந்துள்ளார்.

தனது கோரிக்கைகளை பொ.ஜ. முன்னணி ஏற்றுக்கொண்டுள்ளதாகவும் அவர் கூறியுள்ளார்.

அக் கோரிக்கைகள் நிறைவேற்றப்பட்டால் திரு.சந்திரசேகரனின் கரம் மேலோங்கும். அரசாங்கத்தோடு இணைந்து திரு.தொண்டாவால் மட்டுமே நன்மைகளைப் பெற்றுத்தர முடியும் என்ற கருத்தை அவர் மாற்றுவதற்கு முயல்வார்.

எனவே- இ.தொ.கா பொ.ஜ. முன்னணிக்கு ஆதரவு வழங்குவது மூலம் தனது நிலைக்கும் பாதகம் ஏற்படாமல் பார்த்துக்கொள்ளவே விரும்பும்.

எப்படியிருப்பினும் மலையக தமிழ் அரசியல்வாதிகள் அது தொண்டாவாக இருந்தால் என்ன சந்திர சேகரனாக இருந்தால் என்ன ஒரு பொதுவான விடயத்தில் ஒன்றுபடுகிறார்கள்.


அரசாங்கத்தோடு இணைந்து நிற்காமல் தனித்து நின்று மலையக மக்களது உரிமைகளை பெறும் பாதையை இருவருமே நிராகரித்து விட்டார்கள்.

அரசாங்கத்தை சார்ந்து நின்று அதன்மூலம் மலையக மக்களுக்கு தேவையானதைப் பெறுவதே மலையக தமிழ் அரசியல் தலைவர்களது நிலைப்பாடு. அரசியலில் அவர்கள் எதிரெதிர் முகாம்களில் இருந்தாலும் நிலைப்பாடு மட்டும் பொதுவாக இருக்கிறது.

மலையக தமிழ் அரசியல்வாதிகள் மட்டுமல்ல வடக்கு-கிழக்கு தமிழ்-முஸ்லிம் அரசியல்வாதிகளும் அப்படியான நிலைப்பாட்டையே வந்தடைந்துள்ளார்கள்.

புலிகள் தவிர்ந்த ஏனைய தமிழ் கட்சிகள் யாவும் ஆட்சியில் இருப்பவர்களை அனுசரித்துப் போவதில் ஒத்த கருத்தினையே கொண்டுள்ளனர். பேசும் தொனிகள் வேறுபட்டாலும் நோக்கம் ஒன்றுதான்.

## அதிரடி அய்யாத்துரை



திருவான மலையிலை வோட்டுப் போடச்சொல்லி நூறு ரூபாவும்- சோமபானமும் கொடுத்ததாம் ஒரு இயக்கம். காசை வாங்கிப் பையிலையும், சோமபானத்தை வாயிலையும் ஊத்திப்போட்டு புள்ளடியை மட்டும் பிரகாசமான சின்னத்திற்கு நேரே குத்திப்போட்டினமாம். விசயமறிஞ்ச இயக்கம் வெறுப்பிலை பொல்லோடை திரிஞ்சதாம்.

சும்மா சொல்லக்கூடாது பாருங்கோ பழம் தமிழ் கட்சியும் க.வாக்குகள் போடுற விசயத்திலை விட்டுக்கொடுக்கேல்லை. ஒரு வான் நிறையப் போன பொண்டுகளை சீருடைக்காரர் மடக்கி விசாரிச்சதில் அவையும் க.வாக்குப் போடப்போன கதை தெரிஞ்சுதாம்.

கடந்த முறை கட்டியாண்ட தமிழ் குழு இந்த முறை சனத்தாலை வெட்டியெறியப்பட்டுப்போச்சு. பேட்டி எடுக்க வாறவை, அனுதாபம் சொல்லுறவை எல்லாரிட்டையும் தாங்கள் ஏன் தோற்றவை எண்டு கேட்டுக்கொண்டிருக்கிறாராம் அந்தக் குழுவின் முக்கிய சந்திரத் செயலர்.

தனித்துவ கட்சித் தலைவருக்கு துறைமுகத்தை கொடுத்ததிலை முன்னணிக்குள் சிலருக்கு மனக் கசப்பாம். முணுமுணுத்தவையாம். வெளியிலை சொல்ல முடியுமோ?

மலையக தனித்துவத் தலைவர் தனது உடமைகளை எடுக்க முன்னாள் அலுவலகத்திற்கு போனவராம். இதெல்லாம் அரச சொத்து எண்டுசொல்லி இடையூறு கொடுக்கப்பட்டதாம்.

கூட்டான தமிழ் கட்சி வட்டாரத்திலை தேசியப் பட்டியல் விடயத்தில் போட்டியோ போட்டி. வாகனங்களில் குறாப்போடை ஆளாளுக்கு வந்து குதிச்சவையாம். தலைவர் மட்டும்தான் போட்டிக்குப் போகேல்லையாம். நீலமானவர் வீட்டு வட்டாரத்திலையும் விட்டுக்கொடுக்க மாட்டம் எண்டு தூதுபோன சட்டத்தரணியிடம் கண்டிப்பாய் சொல்லப்பட்டதாம்.

பிறக்க முந்தியே பிள்ளைக்குப் பேர் வைச்சுத் திரிஞ்சமாதிரி கொழும்பு குமாரர் குழு திரிஞ்சதல்லோ. ஒண்டுகூட வராது எண்ட விசயம் தெரியாமல் மூன்று வரும், வந்தா பங்குபோடுறது எப்படி எண்டு விவாதிச்ச ஆக்கள் ஆகஸ்ட் 17அன்று தலையிலை துண்டு போட்டுக்கொண்டு இருந்திருப்பினமோ? பஜீரோ கனவும் பாழ். பேசாம உள்ள மரியாதையோடை இருந்திருக்கலாம்.

க.வாக்கு ஜனநாயகத்திலை உத்தியோகபூர்வமில்லாமல் ஒத்துக்கொள்ளப்பட்ட விசயமாய் போச்சுது பாருங்கோ. ஆனால் அதை பாவிச்சவை நீதான் குற்றம் நான்தான் சுத்தம் எண்டு பேசுறதும் ஒரு தந்திரமாய் போச்சு.

பச்சை வட்டார முன்னாள் செயலர் நீலத்திற்கு ஆதரவு எண்டு சந்தேகமாம். அதுதான் தேசியப் பட்டியலில் இருந்து கழற்றிவிட்டுப் போட்டினமாம். அது ஒருபுறமிருக்க உள்ளே இருக்கும் அவரது ஆதரவாளர்கள் விரைவில் விடுதலையாகப் போறதாகவும் ஒரு தகவல் காதிலை விழுந்திருக்கு. அப்ப ஒண்டும் ஒண்டும் ரெண்டுதானே?

எங்கடை தமிழ் கட்சியள் அடிபட்டுக் கண்டபலன் உள்ளதும் போனதுதான். இப்ப பாருங்கோ தேர்தலிலை பிரதிநிதித்துவமும் டமால். கவலையைத் தீர்க்க பாரதிதாசன் பாட்டு.

"சிரித்தது பாரடா செந்தமிழ்க்கூடு
விரிந்தது பாரடா அழிந்த நம் நாடு.
பாடுது பாரடா பைந்தமிழ் நாடு!
தாயி மாரே தகப்பமாரே
மாயம் இல்லே மந்திரம் இல்லே
கருத்து வேணும் நம்ப
வருத்தம் நீங்க தேடணும் வழியே!"

யார் தேடுறது. அவையவை எதை எதையோ தேடினம்.

www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்

# ஸ்பெஷல் ரிப்போர்ட்

## •ஆட்சியமைக்கமுன் நடந்த• •சுவையான சங்கதிகள்•

# மூன்று சுற்று அதிகாரப்போட்டி!

# அதிகாரத்தை தீர்மானித்த சிறுபான்மைக் கட்சிகள்!!

பாராளுமன்றத் தேர்தல் முடிவுகள் அறிவிக்கப்பட ஆரம்பிக்க தேர்தலில் போட்டியிட்ட கட்சிகளும், சுயேச்சைக் குழுக்களும் தூக்கக் களைப்பை துரத்தி விட்டு உஷாராகின.

ஐக்கிய தேசியக் கட்சியும் பொதுஜன ஐக்கிய முன்னணியும் படு உஷார். இரு அணி ஆதரவாளர்களும் பட்டாசுகள் சகிதம் கண்-காதுகளை கூர்மையாக்கியபடி காத்திருந்தனர்.

முதலில் அறிவிக்கப்பட்டது தபால் மூலம் அளிக்கப்பட்ட வாக்குகள்.

பொதுஜன முன்னணியே தபால் மூலமான வாக்குகளை வாரி அள்ளிக் கொண்டு முதலிடத்தில் நின்றது.

மல்யுத்தத்தில் முதல் சுற்றுப் போலவே தபால்மூலமான வாக்களிப்பு முடிவும் தேர்தல் களத்தில் முதல் சுற்று.

முதல் சுற்றில் ஐ.தே.கட்சிக்கு சற்று அதிர்ச்சி.

ஜனாதிபதியின் உத்தியோகபூர்வ வாசஸ்தலம் முதல் சாதாரண தொண்டர் இல்லம்வரை சல சலப்பு.

இப்போது இரண்டாவது சுற்று ஆரம்பம்.

பொதுஜன முன்னணித் தலைவர்கள் இருக்கைகளில் நிமிர்ந்திருந்து கவனிக்க, ஐ.தே.கட்சித் தலைவர்கள் இருப்புக்



17 வருட வனவாசம் முடிந்தது. மகளின் செல்வாக்கால் அம்மையார் பெருமிதம். ஜனாதிபதிக்கும் வணக்கம்.

கொள்ளாமல் தவித்தபடி கவனிக்கத் தொடங்கினார்கள்.

முடிவுகள் வெளியாகிக் கொண்டிருந்தன. அநேகமாக பொதுஜன முன்னணியே திருவாளர் பொதுஜனத்தின் அபாரமான ஊக்குவிப்போடு முன்னால் வந்து கொண்டிருந்தது.

ஐ.தே.கட்சியும் சில சமயம் தொட்டு விடும் தூரத்தில் பொதுஜன முன்னணியை தொடர்ந்து வந்துகொண்டிருந்தது.

மாவட்ட ரீதியாக பார்த்தபோது பொ.ஜ.முன்னணி முதலிடத்தில்வர ஐ.தே.கட்சி வட்டாரங்கள் கணக்குப் பார்க்கத் தொடங்கிவிட்டன.

அம்பாறையில் முஸ்லிம் காங்கிரஸ் 2 ஆசனம் பெற்றதில் தொடங்கி ஐந்து ஆசனம்வரை முன்னேறியது.

வன்னி-யாழ் முடிவுகள் அறிவிக்கப் படாதபோதும் ஜனாதிபதிக்கும், அதேபோல் பொதுஜன முன்னணித் தலைவர்களுக்கும் முடிவுகள் முன்கூட்டியே கிடைத்துவிட்டன.

வன்னியில் புளொட்-3, யாழில்- ஈ.பி.டி.பி-9. அங்கு கிடைத்த ஒரு ஆசனம், மற்றும் தேசியப் பட்டியலோடு சேர்த்து மு.காங்கிரசுக்கு 7 ஆசனம்.

இதே சமயம் கூட்டணிக்கு தேசியப் பட்டியலோடு சேர்த்து 4 ஆசனங்கள்.

ஆக-இப்போது சிறுபான்மைக் கட்சிகள் கையில் ஆட்சியதிகாரம் யாருக்கு என்று தீர்மானிக்கும் பலம் வந்துவிட்டது.

கூடவே-மலையக மக்கள் முன்னணி சந்திரசேகரனும் வெற்றிபெற்றுவிட்டார். ஆக மொத்தம் 25 ஆசனங்கள் இரு பெரும் அணிகளுக்கும் வெளியே இருந்தன.

1977ம் ஆண்டுப் பொதுத் தேர்தலில் தமிழ் கட்சி எதிர்க்கட்சியாகி சாதனை படைத்தது.

இம்முறை தமிழ்-முஸ்லிம் கட்சிகள் எந்தக் கட்சி ஆட்சி வரவேண்டும் என்பதை தீர்மானிக்கும் கட்சிகளாகி வரலாறு படைக்க முடிந்திருக்கிறது.

இப்போது மூன்றாவது சுற்று- இதுவே இறுதிச் சுற்று.


ஊரடங்கு நேரத்திலும் அனுமதிப் பத்திரத்தோடு இரு அணிகளது பிரமுகர்களும் வாகனங்களில் பறந்து திரிந்தனர்.

ஊர்காவற்துறையில் இருந்த ஈ.பி.டி.பி. செயலாளர் நாயகம் திரு.டக்ளஸ் தேவானந்தாவையும், கிழக்கில் அம்பாறையில் இருந்த முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் எம்.எச்.எம்.அஷ்ரப்பையும் வான் வழியே அழைத்துவர ஜனாதிபதி வாசஸ்தலத்திலிருந்து உத்தரவுகள் பறந்தன.

வன்னியில் இருந்த புளொட் தலைவர்களோடும்-திருமலையில் இருந்த கூட்டணிச் செயலதிபர் திரு.சம்பந்தனோடும் தொலைபேசியில் தொடர்பு கொள்ளப்பட்டது.

மறுபுறம் பொதுஜன ஐக்கிய முன்னணியும் தொலைபேசிகளை சுழற்றியது. புளொட்-ஈ.பி.டி.பி. அமைப்புக்களோடு தொடர்பு கொள்ளப்பட்டது.

இதேவேளை ஐ.தே.கட்சி முஸ்லிம் காங்கிரசோடு தொடர்புகொள்ளும் செய்தி




எப்படியோ பொதுஜன முன்னணியின் காதுக்கு எட்டிவிட்டது. உடனே உஷாராகி விட்ட பொதுஜன முன்னணி அஷ்ரப்போடு தொடர்பு கொண்டது. அஷ்ரப் ஜனாதிபதி அனுப்பிய ஹெலிகொப்டரில் வானத்தில் இருந்தார்.

இதேவேளை கூட்டணியினர் தம்மால் ஐக்கிய தேசியக் கட்சியை ஆதரிக்க முடியாது என்று கூறிவிட்டனர்.

ஈ.பி.டி.பி-புளொட் அமைப்பினரிடமிருந்து தெளிவான பதில் கிடைக்கவில்லை. எனினும் ஈ.பி.டி.பி. தம்மை ஆதரிக்கும் என்று ஐ.தே.கட்சி வட்டாரங்கள் கூறின.

மலையக மக்கள் முன்னணி சந்திரசேகரனுக்கும் வலை வீசப்பட்டது.

ஈ.பி.டி.பி. செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா நேரடியாக ஜனாதிபதியிடம் அழைத்துச் செல்லப்பட்டார். தனது கட்சியினரோடு பேசிவிட்டு முடிவு சொல்வதாகவும், ஆனால் ஐ.தே.கட்சி ஏனைய கட்சிகளது ஆதரவைப் பெற்றால் தமது கட்சியும் ஆதரிக்கும் என்று கூறிவிட்டு திரும்பிவிட்டார்.

இதேவேளை பொதுஜன முன்னணியின் சார்பாக ஈ.பி.டி.பி.யின் கொழும்பு, பாக்வீதி அலுவலகத்தில் டக்ளஸ் தேவானந்தாவை சந்தித்து பேசப்பட்டது. கட்சியினரோடு பேசிவிட்டு சொல்வதாக அவர் கூறியிருந்தார்.

ஹெலிகொப்டரில் இருந்த அஷ்ரப்போடு திருமதி சந்திரிக்கா நேரடியாக தொடர்பு கொண்டு பேசினார்.

ஜனாதிபதி ஹெலிகொப்டர் அனுப்பியுள்ளார். ஆனால் உங்களை சந்தித்துவிட்டுத்தான் அவரைப் பார்ப்பதாக கூறியுள்ளேன் என்று அஷ்ரப் கூறினார்.

திருமதி சந்திரிக்கா உடனடியாக இரத்மலானை விமானப்படை தளத்திற்கு கார் அனுப்பி அஷ்ரப்பை அழைத்துவர ஏற்பாடு செய்தார்.

இரத்மலானை விமானத் தளத்தில் வந்து அஷ்ரப் இறங்கியபோது இரு அணிகளும் அனுப்பிய கார்கள் காத்து நின்றன.

அஷ்ரப், திருமதி சந்திரிக்கா அனுப்பிய காரில் ஏறிச் சென்றுவிட்டார்.

முஸ்லிம் காங்கிரசுக்கு எதிரான முன்னாள் அமைச்சர்கள் மன்சூர்-மஜீத் ஆகியோர் தோல்வியடைந்துவிட்டதால் இப்போது ஐக்கிய தேசியக் கட்சிக்கு அஷ்ரப் ஆதரவு வழங்குவார் என்று ரணில் எதிர்பார்த்தார்.

முஸ்லிம் காங்கிரஸ் ஆதரவு தர முன்வராவிட்டால் மேற்கொண்டு காலம் கடத்தாமல் சந்திரிக்காவை அரசு அமைக்க அழைக்கலாம் என்பதே ரணிலின் கருத்தாக இருந்தது.

முக்கிய அமைச்சுப் பொறுப்புகளும் சில கோடி ரூபாய்களும் கொடுத்து வெளியே உள்ள ஆசனங்களை பெறுவதற்கு ஐ.தே.கட்சிக்குள் இருந்த இன்னொரு அணி ஒருபுறம் ஓடித்திரிந்தது.

முஸ்லிம் காங்கிரஸ் தனது முடிவை திருமதி சந்திரிக்கா மூலமாக ஜனாதிபதிக்கு தெரிவித்தது.

திரு.சந்திரசேகரனும் பொதுஜன முன்னணியின் பக்கம் சார்ந்துவிட மூன்றாவது சுற்றிலும் ஐ.தே.கட்சி பொ.ஜ. முன்னணியிடம் தோற்றுப் போனது.

ஆயினும் திரு.காமினி திசாநாயக்கா இறுதிவரை பலத்த முயற்சியில் இறங்கியிருந்தார் என்று கூறப்படுகிறது.

புளொட்- ஈ.பி.டி.பி. இரண்டும் பொதுஜன முன்னணிக்கு ஆதரவளிக்க ஒப்புக்கொண்டன.

ஈ.பி.டி.பி. செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தாவும் திருமதி சந்திரிக்காவும் எதிர்க்கட்சி தலைவர் இல்லத்தில் சந்தித்துப் பேசினார்கள்.

பொதுஜன முன்னணி அரசாங்கத்தை ஈ.பி.டி.பி. எதிர்க்கமாட்டாது என்று அக்கட்சியின் தரப்பிலிருந்து கூறப்பட்டது.

புளொட் தலைவர்களையும் திருமதி சந்திரிக்கா சந்தித்துப் பேசினார். அவர்கள் தரப்பிலும் ஆதரவு தருவதாக கூறப்பட்டது.

இதே நேரத்தில் கூட்டணியினருக்கு சபாநாயகர் பதவி வழங்க பொதுஜன முன்னணி முன்வந்திருப்பதாக செய்தி பரவியது. சபாநாயகராக திரு.நீலன் தீருச்செல்வத்தின் பெயர் அடிபட்டது.

இரு அணிகளையும் தேர்தல் நேரத்தில் சாடிய கூட்டணியினர் எப்பதவியையும் பெற முன்வரவில்லை. வெளியில் இருந்தே அரசை ஆதரிப்பதாகக் கூறிவிட்டனர்.

எப்படியோ சிறுபான்மைக் கட்சிகள் ஐ.தே.கட்சியின் பக்கம் செல்லப் போவதில்லை என்ற திருப்தியோடு பொதுஜன முன்னணி பதவியேற்கச் சென்றது.

இதுவரை கால வரலாற்றில் சிறுபான்மைக் கட்சிகள் ஐ.தே.கட்சியின் பக்கம்தான் பெரும்பாலும் சார்ந்து நின்றன.

திருமதி சந்திரிக்கா தலைமையேற்ற பின்னர் நிலைமை மாறியிருக்கிறது. ஐ.தே.கட்சி தரப்பில் சிறுபான்மையோரின் அபிமானம் பெற்ற தேசியத் தலைவர் ஒருவர் இல்லாமல் போனதும் முக்கிய காரணமாக இருக்கலாம். ■

## அரச ஊழியர்கள்—படையினர் மத்தியில்
## பொ.ஜ.முன்னணிக்கே செல்வாக்கு!

அரசாங்க ஊழியர்கள், பாதுகாப்பு படையினர் மற்றும் பொலிசார் மத்தியில் பொதுஜன முன்னணிக்கே அதிக செல்வாக்கிருப்பதாக தெரிகிறது.

தபால் மூலமான வாக்களிப்பு முடிவுகள் அதனை வெளிப்படுத்துவதாக கூறப்படுகிறது.

தேவையற்ற அரசியல் தலையீடுகள் அரச ஊழியர்களை கடந்த காலத்தில் அதிருப்தி அடையச் செய்திருக்கலாம் என்று நம்பப்படுகிறது.

மறைந்த பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் ரஞ்சன் விஜேரத்தினவுக்கு பின்னர் பாதுகாப்புப் படையினர் மத்தியில் ஆளுமை செலுத்தக்கூடிய ஒருவரை முன் கொண்டுவராமையும் ஐ.தே.கட்சி அரசாங்கத்திற்கு படையினர் மத்தியில் செல்வாக்கை குறைத்திருக்கலாம் என்று கருத முடிகிறது.

தற்போது பாதுகாப்பு அமைச்சராக நியமிக்கப்பட்டுள்ள திரு.அநுரா ரத்வத்த திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்காவின் சகோதரர் ஆவார். இராணுவத்திலும் பணியாற்றியவர். சிறிமாவோ அம்மையாரின் தனிப்பட்ட செயலாளராகவும் நீண்ட காலம் இருந்தவர். ●

## ஒன்று தருக-இன்றே தருக!

வன்னியில் புளொட், ஈரோஸ்-ரெலோ அமைப்பினர் கூட்டுச் சேர்ந்து போட்டியிட்டபோதும் புளொட் அமைப்பைச் சேர்ந்த மூவர் மட்டுமே விருப்பு வாக்கு அடிப்படையில் பாராளுமன்ற உறுப்பினர்களானார்கள்.

நான்காவது இடத்தில் வந்த ரெலோ தலைவர் திரு.அடைக்கலநாதன் (செல்வம்) குறைந்த விருப்பு வாக்கு வித்தியாசத்தில் தோல்வியடைந்தார்.

கூட்டுச் சேர்ந்து போட்டியிட்ட வகையில் தமக்கு ஒரு ஆசனத்தை விட்டுத்தருமாறு ரெலோ அமைப்பினர் புளொட் அமைப்பிடம் கேட்டிருந்தனர். ஆனால் புளொட் அதற்கு சம்மதிக்கவில்லை.

அது மட்டுமல்லாமல் தேர்தல் பிரசாரத்தில் கூட்டமைப்பு பற்றி அதிகம் கூறப்பட்டபோதும் தேர்தல் முடிவடைந்தபின் புளொட் அமைப்பின் வெற்றியாகவே அறிக்கைகள் வெளியாகியுள்ளன. கூட்டமைப்பின் பெயரும் காணாமல் போய்விட்டது.

பொதுஜன முன்னணிக்கு தெரிவடிப்படையில் ஆதரவளிக்கும் முடிவையும் புளொட் தாமாகவே தனித்து மேற்கொண்டது. ●

## துறைமுகத்திற்கு இடம் பார்க்கிறார்கள்

அம்பாறை மாவட்டத்தின் கரையோரப் பிரதேசத்தில் துறைமுகம் ஒன்றை அமைக்கும் நடவடிக்கையை, துறைமுக, கப்பல்துறை அமைச்சர் அல்-ஹாஜ் அஷ்ரப் மேற்கொள்ள விருக்கின்றார். முன்னோடியாகப் பொருத்தமான இடத்தைத் தெரிவு செய்ய அதிகாரிகள் குழு ஒன்றும் அடுத்தவாரம் இங்கு வரவிருக்கின்றதாம். ■

## வடபகுதித் தேர்தல்கள்
## சர்வதேச கண்காணிப்பாளர்கள் திருப்தியின்மை!

வடக்கில் யாழ்ப்பாணத்திலும் வன்னியிலும் நடைபெற்ற தேர்தல் தொடர்பாக சர்வதேச பார்வையாளர்குழு தனது அறிக்கையில் அதிருப்தி தெரிவித்துள்ளது.

இடம்பெயர்ந்த வாக்காளர்கள் தமது பெயர்களை பதிவு செய்ய சந்தர்ப்பம் அளிக்கப்படவில்லை.

யாழ்ப்பாணத்தில் ஈ.பி.டி.பி.யினர் ஆயுதங்களோடு காணப்பட்டனர்.

வன்னியில் ஒரு வாக்களிப்பு நிலையத்தில் புளொட் அமைப்பின் முகவர் மட்டுமே இருந்தார் என்றும் சர்வதேச பார்வையாளர் குழுவைச் சேர்ந்த ஒருவர் குறை கூறியிருந்தார்.

1977ம் ஆண்டுக்குப் பின் வடக்கு-கிழக்கில் நடைபெற்ற மாகாணசபைத் தேர்தல்-பொதுத் தேர்தல்கள் போன்றவை பூரணமான ஜனநாயக சூழலில் நடைபெறாதவையாகவே இருக்கின்றன.

ஆயினும் யாழ்ப்பாணத்திலும் வன்னியிலும் தேர்தல் நடைபெறாமல் போயிருந்தால் தற்போது தெரிவாகியுள்ள 15 தமிழ்பேசும் உறுப்பினர்கள் பாராளுமன்றம் சென்றிருக்க முடியாது.

தற்போதுள்ள நாடாளுமன்ற நிலவரப்படி தமிழ் பேசும் உறுப்பினர்களது எண்ணிக்கை அதிகமாக இருப்பது சாதகமானதுதான்.

ஆனால் 15 தமிழ் பேசும் உறுப்பினர்களும் தாம் ஒரு சிறப்பான ஜனநாயக சூழலில் பெரும்பான்மையான வாக்காளரால் தெரிவு செய்யப்படவில்லை என்பதை நினைவில் கொள்ளவேண்டும்.

எக்கட்டத்திலும் தமிழ் பேசும் மக்களது நலன்களுக்கு மாறாக அவர்கள் நடந்து கொண்டால் அதன் பலனை அனுபவிக்க வேண்டியே ஏற்படும்.

15 உறுப்பினர்களில் ஒருவர் (திருமதி புலேந்திரன்) ஐ.தே.கட்சியைச் சேர்ந்தவர். இன்னொருவர் (ஐ.கேதீஸ்ரவன்) பொதுஜன முன்னணியைச் சேர்ந்தவர். ஏனையோர் புளொட், ஈ.பி.டி.பி. கட்சியைச் சேர்ந்தவர்கள். ●

## வருவாரா பிரதமர்?

ஜூலை 27ம் திகதி தேர்தல் பிரசாரத்திற்காக நிந்தவூருக்கு வரவிருந்த பிரதமர் திருமதி.சந்திரிக்கா அவர்கள் வருகை தராமையால் மக்கள் ஏமாற்றமடைந்தனர். எனினும் தேர்தல் முடிந்ததும் நிந்தவூருக்கு விசேடமாகத் தாம் விஜயம் செய்யவிருப்பதாக அவர் நிந்தவூர் மக்களுக்குக் கடிதமூலம் தெரிவித்திருந்தார். நிந்தவூருக்கான பிரதமரின் வருகையை மக்கள் எதிர்பார்த்த வண்ணமுள்ளனர். வருவாரா பிரதமர்? ■

## இதுதாண்டா அரசியல்

அம்பாறை மாவட்டத்தின் முஸ்லிம் பிரதேசங்களில் தற்பொழுது முஸ்லிம் காங்கிரஸிற்கு 'ஹவுஸ்புள்' நிலை தோன்றியிருக்கிறது. யூ.என்.பியில் நின்ற மூன்று பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்தவர்கள் பிரதிநிதியாக வரப் பாடுபட்டவர்களின் பக்கற்றுகளிலெல்லாம் இப்பொழுது அமைச்சர். அஷ்ரப்பின் படங்கள் தென்படுகின்றன. இப்பொழுது அல்-ஹாஜ் அஷ்ரப் வந்தால் வெடிகொளுத்தி வரவேற்பதற்கும் இந்த யூ.என்.பீக்களே முண்டியடிக்கின்றனர். என்னே நம்மவர் அரசியல்?

## தமிழர்களுக்கு உரியது

எமக்குக் கிடைத்துள்ள திகாமடுள்ள மாவட்ட இரண்டாவது பிரதிநிதித்துவம் இந்த மாவட்ட தமிழர்களுக்குரியதே. ஆனால் அவர்களின் சிலர் ஐ.தே.க.வுக்கு வாக்களித்துவிட்ட பிழையால் அவர்களது பிரதிநிதித்துவத்தை இழந்ததோடு, எமக்குக் கிடைக்க வேண்டிய மூன்று பிரதிநிதித்துவத்தையும் கிடைக்காமல் செய்துவிட்டனர்" என்று கல்முனை ஜும் ஆப் பள்ளிவாசலில் மக்கள் மத்தியில் உரையாற்றும்போது மு.கா. தலைவரும், அமைச்சருமான அல்-ஹாஜ் அஷ்ரப் கூறினார்.

## நானே எம்.பி.

"நான் செத்துப் பிழைத்த எம்.பி., நமது தலைவர் அல்-ஹாஜ் அஷ்ரப் மிகப் பொறுப்பு வாய்ந்த மந்திரிப் பதவிகளைப் பெற்றிருப்பதால் அடிக்கடி இங்கு அவரால் வரமுடியாது.

"எனவே மருதமுனை தொடக்கம் பொத்துவில் வரையுள்ள மக்களுக்கு நானே எம்.பியாக இருந்து செயல்படுவேன்" என்று மருதமுனையில் நடந்த கூட்டம் ஒன்றில் நகைச்சுவை ததும்பக் கூறினார் மு.கா. திகாமடுள்ள எம்.பி.- சட்டத்தரணி ஜனாப். யூ.எல்.எம். முகைடீன்! ●

## மறக்கலாமா/மறுக்கலாமா?

முன்னாள் அமைச்சர் ஜனாப்.எம்.ஏ.அப்துல் மஜீத் (ஐ.தே.க) இம்முறை தேர்தலில் தோல்வி கண்டுள்ளார். தமிழ்-முஸ்லிம் ஒற்றுமையின் சின்னமாகத் திகழ்ந்த அவர் தமது 35 வருடகால அரசியல் வாழ்வில் சம்மாந்துறை, பொத்துவில் தொகுதி மக்களுக்கு, குறிப்பாக ஏழைகளுக்கு ஆற்றிவந்துள்ள அளப்பரிய சேவைகளை மனித நேயமுள்ள எவரும் மறக்கவோ, மறுக்கவோ முடியாது என்கிறார்கள் அவரது ஆதரவாளர்கள்.

# அலசுவது – இராஜதந்திரி

# ஆளுங்கட்சிக்கும், எதிர்க்கட்சிக்கும் துணைநிற்கும் சிறுபான்மைக் கட்சிகள்!

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியைத் தலைமையாகக் கொண்ட பொதுஜன ஐக்கிய முன்னணி இலங்கையின் பாராளுமன்றத்தைக் கைப்பற்றியுள்ளது.

திருமதி.சந்திரிக்கா பண்டாரநாயக்கா குமாரணதுங்க இலங்கையின் பதினோராவது பிரதம மந்திரியாக சத்தியப் பிரமாணஞ் செய்துகொண்டுள்ளார்.

இல்ங்கையைப் பொறுத்தவரை நடந்து முடிந்த பத்தாவது பாராளுமன்றப் பொதுத் தேர்தல் மிக முக்கியத்துவம் வாய்ந்ததொன்றாக இருக்கின்றது.

இதுவரை காலமும், இரு பெரும் தேசியக் கட்சிகள் என்ற நிலையில் இருந்த ஐக்கிய தேசியக் கட்சி, ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி ஆகியன இத்தடவை தேர்தலில் சிறுபான்மை இனக்கட்சிகளையே பெரிதும் தங்கி நிற்கும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளன.

பொதுஜன ஐக்கிய முன்னணி ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் தயவுடனேயே ஆளுங்கட்சியாக வரமுடிந்தது.

மறுபுறத்தே ஐக்கிய தேசியக் கட்சி, இலங்கைத் தொழிலாளர் காங்கிரசின் ஆதரவு காரணமாகவே படு தோல்வியடைவதிலிருந்தும் தப்பியுள்ளதுடன் பாராளுமன்றில் பிரதான எதிர்க்கட்சியாகவும் இடம்பிடித்துள்ளது.

மலையகத்தில் இ.தொ.காவுடனான கூட்டுச் சேர்ந்த போட்டியே ஐ.தே.கா வுக்கு குறிப்பிடத்தக்களவு ஆசனங்களைப் பெற்றுக்கொடுத்துள்ளது.

எனவே சிறுபான்மையினக் கட்சிகளான ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ், இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் ஆகியனவற்றின் பக்கபலத்துடன் ஆளுங்கட்சியாகவும், எதிர்க்கட்சியாகவும் பாராளுமன்ற ஆசனங்களைக் கைப்பற்றியுள்ள சிறுபான்மையினக் கட்சிகளான ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ், மற்றும் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் ஆகியன விளங்குவதை அவதானிக்கக்கூடியதாக இருக்கின்றது.

புதிய ஆளுங்கட்சியான பொதுஜன ஐக்கிய முன்னணியிடமிருந்து அரசியல், சமூக, பொருளாதார ரீதியாக பல்வேறு புதிய அம்சங்களை முழுநாடுமே எதிர்பார்த்திருக்கின்றது.

கடந்த பதினேழு வருடகால ஐக்கிய தேசியக் கட்சியின் ஆட்சியில் நாடு பல்வேறுபட்ட அரசியல் நெருக்கடிகளுக்கும் உள்ளாகியிருந்தது.

வடக்கு-கிழக்குப் பிரதேச இனப்பிரச்னை நாட்டின் அமைதி, மற்றும் சமாதான-சகவாழ்வுக்கு ஒரு பெரும் சவாலாகவே இருந்து வருகின்றது.

1983ம் ஆண்டிலிருந்து ஒரு முழு அளவிலான ஆயுதப் போராட்டமாக இலங்கையின் வடக்கு-கிழக்குப் பிரச்னை மாற்றமடைந்திருந்தது.

அன்றிலிருந்து இன்றுவரை வடக்கு-கிழக்கு பிரச்னை ஒரு அபாயகரமான நோயாகவே இலங்கையைப் பீடித்திருக்கக் காணப்படுகின்றது.

புதிய பிரதம மந்திரியான திருமதி.சந்திரிகா பண்டாரநாயக்கா குமாரணதுங்க வடக்கு-கிழக்குப் பிரச்னை அரசியல் ரீதியாகத் தீர்த்து வைக்கப்படும் என்று தமது தேர்தல் பிரசாரக் கூட்டங்களின்போதும், மற்றும் தாம் வழங்கிய பத்திரிகைப் பேட்டிகளின்போதும் குறிப்பிட்டு வந்தார்.

பிரச்னையை அணுகுவதற்கான எந்தவொரு அரசியல் முஸ்தீபையும் ஆரம்பிப்பதற்கு முன்னர், அப்பிரதேசங்களில் நிலவும் கெடுபிடி யுத்தத்தை முதலில் முடிவுக்குக் கொண்டுவர வேண்டியதே மிகவும் இன்றியமையாததாகின்றது.

முன்னைய பாராளுமன்றில் இருந்தவர்கள் வடக்குக்-கிழக்குப் பிரச்னையின் ஆழ-அகலத்தை நன்கு



அறிந்திருந்தபோதிலும் அப்பிரச்னையைத் தீர்த்து வைப்பது குறித்து துணிகரமான நடவடிக்கைகள் எதனையும் மேற்கொண்டிருக்கவில்லை.

அரைவேக்காடான தீர்வுத் திட்டங்களை திணிப்பவர்களாகவும், பேச்சுவார்த்தைகள், மற்றும் சமரச முயற்சிகள் என்பனவற்றுக்கான சந்தர்ப்பங்களைத்

1989ம் ஆண்டில் புலிகளுக்கும், மறைந்த ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாசா தலைமையிலான அரசுக்குமிடையிலான பேச்சுவார்த்தைகள் வெறுமனே ஒரு கேலிக்கூத்தாகவே விளங்கியிருந்தது.

1990ம் ஆண்டில் எத்தகைய உறுதியான உடன்பாடுகளையும் எட்டாத நிலையில் அன்று அரசுக்கும், புலிகளுக்குமிடையிலான

வந்தனர். ஆனால் இரு சாராருமே எந்தவொரு வகையிலும் அரசியல் ரீதியாக ஒருவரையொருவர் நெருங்குவதைத் தவிர்த்தே வந்திருந்தனர்.


படுகொலைகள் எண்ணிலடங்காத வகையில் இடம் பெற்றிருக்கின்றன.

சர்வதேச மன்னிப்புச்சபைகூட இத்தடவை தேர்தலுக்கு முன்பதாக அனைத்து அரசியல் கட்சிகளிடமும் அடிப்படை மனித உரிமை சார்ந்த விடயங்களுக்கு முன்னுரிமை வழங்கும்படி கேட்டிருந்தது.

கூடவே கடந்த பதினேழு வருடகாலத்தில் இலங்கையின் அனைத்துப் பிரதேசங்களிலும், அனைத்துத் தரப்பினரிடையேயும் இடம்பெற்ற அடிப்படை மனித உரிமை மீறல் நடவடிக்கைகளையும் சர்வதேச மன்னிப்புச் சபை பட்டியலிட்டுக் காட்டியிருந்தது.

வடக்கு-கிழக்குப் பிரச்னையை முன்னைய ஆட்சியாளர்கள் இராணுவ அணுகுமுறைகள் மூலமாக கையாண்ட அதேவேளை, வடக்கிலும், கிழக்கிலும் தோன்றிய ஆயுதப் போராட்டக் குழுக்களுக்கிடையிலான மோதல்களும் ஆயிரக்கணக்கானவர்களைப் பலியெடுத்திருக்கக் காணப்படுகின்றது.

இதேவேளை புதிய ஆட்சியாளர்கள் நாட்டில்



இலங்கையின் இனப்பிரச்னை என்பது முற்றிலும் ஓர் அரசியல் ரீதியான விவகாரமாகும்.

இனரீதியிலான பாகுபாடுகள், துவேசங்கள் என்பன தலைகாட்டியபோதெல்லாம் அன்றைய தமிழ் அரசியல்வாதிகள் சாத்வீகமாகவும், ஜனநாயக அணுகுமுறைகளுடனேயே இனப் பிரச்னையைத் தீர்ப்பதில் ஆர்வங்காட்டியிருந்தனர்.

ஆயினும் காலத்துக்குக்காலம்

தட்டிக்கழிப்பவர்களுமாகவே முன்னைய ஆட்சியாளர்கள் விளங்கியிருந்தனர்.


இன்று இலங்கையின் ஆட்சிப் பொறுப்பு புதியவர்களிடம் கைமாறியுள்ளது.

கடந்த ஒரு சில வருடங்களில் சர்வதேச ரீதியாகப் பல சிக்கல் நிறைந்த அரசியல் பிரச்னைகள் வெற்றிகரமான முறையில் தீர்க்கப்பட்டிருப்பதை அவதானிக்கக்கூடியதாக இருக்கின்றது.

பேச்சுவார்த்தைகள் முறிவடைந்திருந்தன.

இந்த முறிவையடுத்து தெற்கிற்கும் வடக்கிற்குமிடையே தோன்றிய பிளவு பல்வேறு வகையிலும் பாரிய தாக்கங்களை தோற்றுவித்துள்ளது.

யுத்தக் கெடுபிடியுடன், பொருளாதார ரீதியிலான நெருக்கடிகளும் பெரும் மனிதாபிமானப் பிரச்னைகளை வடக்கு-கிழக்குப் பகுதிகளில் உண்டு பண்ணியுள்ளன.



## புதிய ஆட்சியாளருடன் பேச்சுக்களை ஆரம்பிப்பதற்கு தமிழீழ விடுதலைப்புலிகளும் தயாராகவேண்டிய நிலை!

பொதுஜன ஐக்கிய முன்னணி, ஐக்கிய தேசியக் கட்சி ஆகியன, இன்று நாட்டில் பேரினவாத நிலைப்பாடுகளை முற்றிலுமாகக் களைந்தெறிய வேண்டிய சூழ்நிலைக்கே தள்ளப்பட்டவையாக இருக்கின்றன.

ஒருசில மாதங்களுக்கு முன்னர் இலங்கையின் தென் மாகாண சபைத் தேர்தல் இடம் பெற்றிருந்தது. அப்போது அத்தேர்தல் பிரசார கூட்டங்களில் உரை நிகழ்த்திய ஜனாதிபதி டி.பி.விஜேதுங்கா சிறுபான்மையினங்களை ஒரு பொருட்டாக மதிக்காது தமது கருத்துக்களை வெளியிட்டிருந்தார்.

இலங்கையின் பெரும்பான்மையின சிங்கள மக்களை ஒரு விருட்சமாகவும், ஏனைய சிறுபான்மை இன மக்களை அவ்விருட்சத்தைப் பற்றிப் படரும் செடி, கொடிகளாகவும் ஜனாதிபதி டி.பி.விஜேதுங்கா வர்ணித்திருந்தார்.

ஆனால் இத்தடவை பாராளுமன்றத்தில் இடம்பிடித்துள்ள ஆளுங்கட்சி, எதிர்க்கட்சி ஆகியனவற்றின் ஆணிவேர்களாகவே பதவிக்கு வந்த பேரினவாத தேசியக் கட்சிகள் விஷமத்தனமான இனவாதப் பிரசாரங்களை மேற்கொண்டு பலாத்காரமான அணுகுமுறைகள் மூலமாகவே இனப்பிரச்னை சார்ந்த விடயங்களை அணுகியிருந்தன.

நாளடைவில் பலாத்கார அணுகுமுறைகள் பரிபூரண இராணுவ நடவடிக்கைகளாக மாற்றமடைந்த நிலையிலேயே இன்று எதுவித தீர்வையும் எட்டாத நிலையில் வடக்கு-கிழக்கின் இனத்தகராறு படுமோசமான கட்டத்தை எட்டியிருக்கின்றது.

இலங்கையின் வடக்கு-கிழக்குப் பிரதேசத்தில் நிலவும் யுத்த நிலவரமானது இரு நாடுகளுக்கிடையிலான ஒரு பெரும் யுத்தத்தையொத்ததாக இருக்கக் காணப்படுகின்றது.

எனவே வடக்கு-கிழக்குப்

எனவே இலங்கையின் இனப்பிரச்னையையும் நிதானமாகவும், பரஸ்பர விசுவாசத்துடனும், விட்டுக்கொடுக்கும் மனப்பான்மையுடனும் அணுகும் பட்சத்தில், ஓர் உறுதியான-நிரந்தரமான தீர்வை எட்ட முடியும் என்பதையே உலகில் சமரசமாகத் தீர்த்து வைக்கப்பட்ட பிரச்னைகள் உணர்த்துவனவாக இருக்கின்றன.

வடக்கு-கிழக்கில் இன்று ஒருபிரதான தீவிரவாத இயக்கமாக இருந்துவரும் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம், கடந்த காலங்களில் பல தடவைகள் பேச்சுவார்த்தைக்குத் தயாராக இருப்பதாக அறிவித்திருந்தது.

மறுபுறத்தே முன்னைய ஆட்சியாளர்களும் தாம் புலிகளுடன் பேசத் தயாராக இருப்பதாக கூறி

லட்சக்கணக்கானவர்கள் வீடு, வாசல்களை இழந்தும், சொந்த-பந்தங்களைப் பறிகொடுத்தும் அகதிகள் என்ற நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர்.

இந்நிலையில் இலங்கையின் இன்றைய இனப்பிரச்னை என்பது, வெறுமனே அரசியல் விவகாரம் சார்ந்ததொன்றாக மட்டும் காணப்படவில்லை.

அப்பிரச்னை அடிப்படை மனித உரிமைகள் சார்ந்த பல விடயங்களையும் கொண்டிருப்பதாகவே இருக்கின்றது.

வடக்கு-கிழக்கில் மட்டுமல்ல, நாட்டில் பரவலாக கடந்த பதினேழு வருடகாலத்தில் அடிப்படை 'மனித உரிமைகள் பல்வேறு சூழ்நிலைகளிலும் மீறப்பட்டிருந்தன.

தென்னிலங்கையில்கூட மனிதப்

மேற்கொள்ளவிருக்கும் ஆட்சி முறையை முழு நாடுமே ஆவலுடன் எதிர்பார்த்திருக்கின்றது.

நாட்டின் ஏகோபித்த சமாதானத்துக்கு ஒரு சவாலாக இருக்கும் வடக்கு-கிழக்குப் பிரச்னையை புதிய பாராளுமன்றத்தினர் கையாளப் போகும் விதத்தை முழு உலகமுமே உன்னிப்பாக அவதானித்துக் கொண்டிருக்கின்றது.

எனவே புதிய ஆட்சியாளர்கள் மட்டுமல்ல; வடக்கே தம்மைப் பலப்படுத்திய நிலையில் இருக்கும் தமிழீழ விடுதலைப் புலிகள்கூட அரசியல் ரீதியான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்குத் தம்மைத் தயார்படுத்த வேண்டியவர்களாகவே உள்ளார்கள்.

இந்நிலையில் முரட்டுத்தனமான யுத்தங்களில் வெளிப்படுத்தும் துணிச்சலைவிட அரசியல் ரீதியாகத் துணிச்சலான, நேர்மையான நடவடிக்கைகளை மேற்கொள்வதன் மூலமே அரச தரப்பினரும், தமிழீழ விடுதலைப் புலிகளும் நாட்டில் சமாதான-சக வாழ்வினை எதிர்காலத்தில் உறுதிப்படுத்த முடியும். ●

www.padippakam.com நன்றி - நூலகத்திட்டம்

அழகைத் தேடிய பெண்ணின் சோகம்

# அழகாய் இருந்தபோதும் அலையும் மனம் அதனால் விளையும் விபரீதங்கள்!

பெண்கள் ஒவ்வொருவரும் தாங்கள் அழகிகளாகத் திகழ வேண்டும் என்று நாட்டம் கொள்வது இயல்பு. உண்மையிலேயே இயற்கை அழகுடன் உள்ள பெண்களும் தங்கள் அழகுக்கு மென்மேலும் மெருகூட்ட ஆசைப்படுவார்கள். அழகாகத் தோன்றும் பெண்கள், தாங்கள் அழகற்றவர்கள் என்று தங்களுக்குள்ளேயே ஒரு கற்பனைக் கவலையிலுழன்று மனநோயாளிகளாவதும் கண்கூடு.

தாங்கள் அழகற்றவர்கள் என்று ஆதாரமற்ற கருத்தினை வளர்த்துத் திண்டாடும் பெண்களின் தொகை இப்பொழுதெல்லாம் தொற்று நோய் போல் பரவி வருவதாக டாக்டர் டேவிட் வியேல் கூறுகிறார். இத்தகைய கருத்துக்களை வளர்த்து மனநோயாளிகளாகி வரும் பெண்களுக்கு சிகிச்சை அளிக்கும் பணியினை இவர் ஏற்றுக்கொண்டுள்ளார்.

தங்களுடைய அவயவங்களை தாங்களே பார்த்து- கண்ணாடிகளில் கண்டு, ஏனைய பல பெண்களின் சாயலோடு ஒப்பிட்டுப் பார்க்க ஆரம்பித்து விடுகின்றனர். உண்மையில் மிக அழகாகவும்- காண்பவர் மயங்கும் கவர்ச்சியுடன் காட்சி தரும் பெண்களே, தாங்கள் அவலட்சணமாகி விட்டதாகக் கருதுவதுதான் வேடிக்கையாக இருக்கிறது என்கிறார் அவர்.

அழகுபடுத்தும் நிலையங்களும் பிளாஸ்ரிக் அறுவை சிகிச்சை நிலையங்களும் தங்கள் வியாபாரத்தைப் பெருக்கும் நோக்குடன் செய்துவரும் விளம்பரங்களே இத்தகைய 'நோய்' பெருகுவதற்கான காரணம் என்று மனநோய் மருத்துவர்கள் கூறுகின்றனர்.

ஏதாவது ஒருகாரணத்துக்காக கணவன் தன் மனைவியைக் கடிந்து கொண்டாலும்கூட உடனே அவன் தன் அழகு குறைந்துவிட்டமையே கணவனின் வெறுப்புக்குக் காரணம் என்று கருதிவிடுகிறாள். தன்னுடைய அங்கங்கள் எங்கெங்கே அசிங்கமாகத் தென்படுகின்றன என்பதனை கண்ணாடியில் பார்த்து தானே தீர்மானித்துவிடுகிறாள்.





'பிளாஸ்டிக்' சத்திர சிகிச்சை நிபுணரும் பெரும்பாலும் வியாபார நோக்குடன்-அதனை ஆமோதித்து சிகிச்சையினை ஆரம்பித்துவிடுகிறார். இவ்வாறு பல சத்திர சிகிச்சைகளைச் செய்தும் திருப்தி அடையாமல் மனநோயாளிகளாக பலர் மாறியுள்ளனர். இன்னும் சிலர் தங்கள் 'அவலட்சணத்தை' வெளியே காட்டாமல் வீட்டினுள்ளேயே அடங்கி விடுகின்றனர்.

வெகு பலர் இக்காரணத்தினாலேயே தற்கொலையும் செய்யத் துணிகின்றனர்.

காட்டே என்ற 33 வயது பெண்மணி தனது முன்னாள் காதலன் அவளுடைய பின்புறம் அளவுக்கதிகமாக சதைபோட்டுள்ளது என்று கூறியமைக்காக பெரும் கவலைக்குள்ளாகிவிட்டாள். இரவு வேளைகளில் படுக்கையிலிருந்து விழித்துக்கொண்டு புலம்ப ஆரம்பித்து விடுவாள். முன்னுக்கும் பின்புறமும் பல கண்ணாடிகளை வைத்து தன் உருவத்தைப் பார்த்துக் கலங்கினாள்.

இவளுக்கு உளவள ஆற்றுப்படுத்தல் முறையினைக் கையாண்டு சில மாதங்களில் குணப்படுத்த முடிந்ததாக டாக்டர் டேவிட் கூறுகிறார்.

அனி ஜோன்சன் என்பவள் அளவான கொடி போன்ற உடலமைப்பும் அழகான ஒழுங்கான உறுப்புகளும் கொண்டவள். அவளுடைய எழிலுக்கேற்றாற்போல் ஓரளவு கர்வமும் கொண்டவளாகவே பருவ காலத்தில் விளங்கினாள். ஆனால் காலம் செல்லச் செல்ல தனது அழகு, அவலட்சணமாகமாறி வருவதாகத் தனக்குத்தானே கற்பனை செய்துகொண்டாள். பிறர் முன்னிலையில் வருவதையே விரும்பாமலிருந்தாள்.

இறப்பதற்கும் பயந்தாள். 'இவ்வளவு அசிங்கமானவளா இவள்?' என்று தன்னுடைய சடலத்தைக் காண்பவர்கள் அருவருப்பார்களே என்று கலங்கினாள். இவளுக்கும் மனோதத்துவ சிகிச்சை அளித்த டாக்டர் டேவிட் இவளைக் குணமாக்கி சாதாரண வாழ்க்கை வாழ்வதற்கு வழி வகுத்தார்.

அனி இளவயதில் இருந்த தோற்றத்தினையும், இன்று 52 வயதிலும் அழகுடன் விளங்குவதனையும் படங்களில் காணலாம்.

## நீங்களும் செய்து பாருங்கள்-கைவேலைப்பகுதி

### கப்பூறா மல்


எஸ்.எஸ்.

**தேவையான பொருட்கள்:**

ஸ்ரொக்கிநெற் 1 (மஞ்சள்வர்ணச் சேர்க்கையானது)
தங்கநிறக்கம்பி-1 டசின்
கம்ரேப்-(ஒட்டும் நாடா)
மகரந்தம்-வெள்ளை சிறு கட்டு
பச்சைநிற ஸ்ரொக்கிநெற் 1
கட்டுக்கம்பி

**எடுக்கப்படவேண்டிய அளவுகள்:**

| | |
|---|---|
| பெரிய பூ | 5 அங்குல அளவிலான கம்பி 5 துண்டுகள் |
| | 6 அங்குல அளவிலான கம்பி 5 துண்டுகள் |
| | 7 அங்குல அளவிலான கம்பி 7 துண்டுகள் |
| சிறிய பூ | 4 அங்குல அளவிலான கம்பி 5 துண்டுகள் |
| | 5 அங்குல அளவிலான கம்பி 5 துண்டுகள் |
| | 6 அங்குல அளவிலான கம்பி 6 துண்டுகள் |
| இலை | 9 அங்குல அளவில் 1 துண்டு |
| இலை | 8 அங்குல அளவில் 1 துண்டு |




**செய்யும்முறை:**

பெரிய பூவிற்கென மேற்குறிப்பிட்ட அளவிலான தங்க நிறக்கம்பிகளை தனித்தனியே எடுத்து படம் 1ல் காட்டியவாறு இரு நுனிகளும் சேரும் வண்ணம் குறட்டினால் முறுக்கவும். முறுக்கிய அக்கம்பிகளை அளவு முறையின்படி தனித்து வைக்கவும். அவ்வாறு அமைக்கப்பட்ட இதழ்களுக்கான கம்பிகளுக்கு மஞ்சள் வர்ணச்சேர்க்கை கலந்த ஸ்ரொக்கிநெற் போட்டு அடிப்பாகம்வரை இறுக்கமாக இழுத்து நூலினால் கட்டவும். இவ்வாறு இதழ்களை கட்டி தனித்தனி அளவுகளின்படி பிரித்து வைக்கவும். அதனை அடுத்து 5 மகரந்த நெட்டிகளை எடுத்து கட்டுக்கம்பியினால் சுற்றி கட்டிக்கொள்ளவும். இவ்வாறு கட்டிய மகரந்தத்தின் அருகில் 5 அங்குல அளவிலான இதழ்களை அருகருகே நூலினால் இறுக்கமாக கட்டவும். இவ்விதழ்களை வைத்துக் கட்டிய பின்னர் ஒவ்வொரு இடைவெளி தெரிகிறதல்லவா? அவ்விடைவெளிகளில் அடுத்த 6 அங்குல அளவிலான 5 இதழ்களையும் வைத்துக்கட்டவும். இதனைக் கட்டிய பின்னும் இடைவெளிகள் தெரியும் இடங்களில் அடுத்து 7 அங்குல அளவிலான 7 இதழ்களையும் வைத்துக்கட்டவும். இதழ்களைக் கட்டிய நூல்கள் தெரியாமல் கம்ரேப்பினால் தண்டுப்பகுதிவரை அழகாக சுற்றவும். சுற்றியபின்னர் படம் 2ல் காட்டப்பட்டவாறு இதழ்களை கீழ்ப்பக்கமாக வளைக்கவும்.

இவ்வாறு அடுத்த சிறிய பூவையும் அமைக்கவும். மேற்குறிப்பிட்ட அளவிலான இலைகளை படம் 3ல் காட்டப்பட்டவாறு அமைக்கவும். இவ்வாறு அமைத்த பூ, இலைகளை கொப்பாக கட்டுவோம்.

முதலில் சிறிய பூவை தடித்த கட்டுக் கம்பியில் வைத்து தண்டுப்பகுதியை முறுக்கி கம்ரேப்பினால் சுற்றி அக்கம்ரேப்பை இடையில் விட்டு சிறு இலையை வைத்து விடப்பட்ட கம்ரேப்பினால் சுற்றவும். அடுத்த பெரிய பூவையும் வைத்து அவ்வாறு கம்ரேப்பினால் சுற்றவும். இலையையும் வைத்து கம்ரேப்பினால் சுற்றவும்.

கொப்பாக அமைத்த பூவினை சிறிய சாடியிலிட்டு சாப்பாட்டு மேசைக்கு அழகாக வைத்துக் கொள்ளலாம்.

## லேடீஸ் ஸ்பெசல்

### சதை போட்டிருக்கிறதா?



எடையைக் குறையுங்கள். உங்கள் எடையை குறைத்துக்கொள்வது நல்லது. நடுத்தர வயதை அடைந்துள்ள கணவன் மனைவி இரண்டு பேருமே டையட்டில் இருப்பது நல்லது. ஜாகிங் செய்யலாம். உடல் அழகாக இருப்பது நடைமுறைக்கு ஆண்பெண் கவர்ச்சிக்கு அடிகோலும்.

இதற்காக கடையில் கூடிய விலை கொடுத்து சைக்கிள் இவைகளை வாங்கி பாவிப்பதால் பிரயோசனம் இல்லை. எக்சைசஸ் பைக் பாவிப்பதால் உங்கள் தொடை மட்டும்தான் குறைய வாய்ப்புண்டு. உடல் முழுவதும் இளைக்க வேண்டுமானால் தினமும் உடற்பயிற்சி நடை. இவைகளை செய்யவேண்டும்.

## சமைப்போம் சுவைப்போம் தொகுத்துத் தருவது—சுகந்தினி

### முத்துப்பாண் (Pearl Bread)


**தேவையான பொருட்கள்:**

பாண் துண்டுகள்-8
உருளைக்கிழங்கு-4
எலுமிச்சம்பழம் சிறியது-1
மிளகாய்ப் பொடி- 1/2 தேக்கரண்டி
உப்பு தேவையான அளவு
பச்சைக் கொத்தமல்லி 1 சிறிய கட்டு
சவ்வரிசி- 1 மேசைக்கரண்டி
எண்ணெய்- பொரிப்பதற்கு


**செய்முறை:**

1. உருளைக்கிழங்கை வேகவைத்து நன்றாக மசித்துக்கொள்ளவும்.
2. மசித்த உருளைக்கிழங்கில் கரம் மசாலாப்பொடி, மிளகாய்ப்பொடி, உப்பு எலுமிச்சம்பழச்சாறு, நறுக்கிய கொத்தமல்லி போட்டுக் கலந்து வைத்துக் கொள்ளவும்.
3. சவ்வரிசியை ஒரு மணிநேரம் தண்ணீரில் உறவைக்கவும். தண்ணீரை வடிகட்டி சவ்வரிசியை எடுத்துக்கொள்ளவும்.
4. பாண்துண்டை தண்ணீரில் தோய்த்து உள்ளங்கையில் வைத்து அழுத்தித் தண்ணீரை எடுத்து விடவும். உருளைக் கிழங்குக் கலவையை உள்ளே வைத்து நீளவாக்கிலோ, முக்கோணமாகவோ மடிக்கவும்.
5. 2 தேக்கரண்டி மாவில் சிறிது தண்ணீர் ஊற்றிக்கெட்டியாகப் பசை செய்து கொள்ளவும்.
6. மடித்த பாண் துண்டில் மேல் பாகத்தில் சிறிது மாப்பசையைத் தடவிக்கொண்டு சவ்வரிசியை அதன்மேல் அழுத்தி விடவும்.
7. எண்ணெயில் பொரித்து எடுத்துத் தக்காளி சோசுடனோ, சட்னியுடனோ சூடாகப் பரிமாறவும்.

## வீட்டுக்குறிப்புக்கள்



நகப்பூச்சு குப்பிகளை, வெய்யில் படும் இடத்திலோ அல்லது அடுப்பு பக்கத்திலோ வைக்க வேண்டாம். வெய்யிலில் அமர்ந்தபடி நகப்பூச்சு பூசவேண்டாம். குளிர்ந்த இடத்தில் வைக்கலாம். பிரிட்ஜ் இருந்தால் அதனுள் வைக்கலாம். கட்டியாகிப் போகாமல், நீண்ட நாட்களுக்கு வரும்.



குளியல் அறையில் உள்ள கண்ணாடி அவ்வப்போது புகை படிந்து இருப்பது போன்றதோற்றமளிக்கும். அச்சமயங்களில், மெத்தென்ற துணியில் சிறிதளவு கிளிசரின் மற்றும் ஸ்பிரிட் சேர்த்து, கண்ணாடியை அழுத்த துடைத்து விடுங்கள். கண்ணாடி 'பளிச்' சென்று மாறிவிடும்.



கரட், பீட்ரூட், உருளைக்கிழங்கு போன்ற கிழங்கு வகைகளை எப்போது வாங்கினாலும், கழுவி, பளபளப்பாக வைத்திருப்பதை வாங்காதீர்கள். மண்ணுடன் இருப்பதையே வாங்குங்கள். அப்போதுதான் இரண்டு அல்லது மூன்று நாட்களுக்கு வைத்திருந்து பயன்படுத்தலாம். வீட்டில் வைத்திருக்கும் போதும், கழுவாமல் வைத்திருங்கள். ஈரமண்ணில் வைத்திருந்தால் இன்னும் பிரஷ்ஷாக இருக்கும்.



பவுடர்பூச பயன்படும் 'பப்' பழையது ஆனவுடன் தூக்கி எறிந்து விடவேண்டாம். ஷு பாலிஷ் போடவும். பித்தளை,வெள்ளி பாத்திரங்களை துடைத்து சுத்தம் செய்யவும் பயன்படுத்தலாம்.



கத்திமுனை மழுங்கி, துருவேறி இருக்கிறதா? வெட்ட பயன்படுத்துவதற்கு முன், உறுதியான இரப்பர் அல்லது சொரசொரப்பான தரையில் நன்றாக தீட்டிக் கொள்ளுங்கள். அல்லது புளிப்பான பொருட்களான மாங்காய், எலுமிச்சம்பழம் போன்றவற்றை வெட்டின பிறகு மற்றவற்றை வெட்டலாம். கத்தியில் உள்ள துருவை நீக்க, ஒரு வெங்காயத்தை பாதி பாதியாக வெட்டி, கத்தியில் வைத்து நன்குதேய்த்து கழுவி விடுங்கள். 'பள பளப்'பாகிவிடும்.


யார் அந்த 50 அதிஷ்டசாலிகள்?

முரசின் பரிசு

தினமுரசு நடத்தும் பரிசுப் போட்டி.

* 50 பேர் அதிஷ்டசாலிகளாகத் தெரிவு செய்யப்படுவார்கள்.


முரசின் பரிசு
கூப்பன் இல 4
உண்மை—நேர்மை—வெளிப்படைத்தன்மை

* பெண்கள் மட்டுமே பங்கு கொள்ள முடியும்.
* பரிசுக் கூப்பன்களை 1-25 வரை பத்திரமாக சேர்த்து வைக்க வேண்டும்.
* நாம் அனுப்பச் சொல்லும் போது 25 கூப்பன்களையும் அனுப்பி வைக்கலாம்.
* மிக்ஸி- ரைஸ் குக்கர்கள்-இட்லி குக்கர்கள், கைக் கடிகாரங்கள், நவீன ரக இல்லப் பொருட்கள் என்பன பரிசுகளாக வழங்கப்படவுள்ளன.
* கூப்பன்களை பத்திரமாக சேகரியுங்கள். உங்கள் அதிஷ்டத்தைப் பரிசீலிக்கலாமே.

www.padippakam.com நன்றி - நூலகத்திட்டம்

# பாதமில்லை அதனால் பாதகமில்லை!

## அதிசய வீரன்– அசகாய சூரன்!



'இந்த ஆண்டின் இளம் மல்யுத்த வீரன்' என்ற பட்டத்தை வென்றுள்ள கடி சொஃபர் என்ற மாணவனுக்கு இரு பாதங்களும் கிடையாது. நாலாவது வயதில் அவனிடம் காணப்பட்ட ஒரு விசித்திர நோயினால் அவனுடைய இரு பாதங்களும் நீக்கப்பட்டு விட்டன.

இந்தக் குறைபாடு கடியின் ஆர்வத்தை எந்த வகையிலும் குன்ற வைக்கவில்லை. ஜோர்ஜியாவிலுள்ள கொலம்பஸ் உயர்நிலைப் பள்ளியில் படிக்கும் இவன் 103 இறாத்தல் எடை மல்யுத்த தரத்தில் முதலாவதாக வெற்றி பெற்றுள்ளான்.

படிப்பிலுள்ள ஈடுபாடு போன்று விளையாட்டுத் துறையிலும் இளமையிலிருந்தே ஆர்வம் கடிக்கு இருந்து வந்துள்ளது. மல்யுத்தத் துறையையே மிகவும் விரும்பினான். பாதங்களை இழந்து- இணைக்கப்பட்ட பொய்ப் பாதங்களுடன் நடமாடிய கடி மல்யுத்தத்தில் தேர்ச்சி பெறுவான் என்று எவருமே நம்பவில்லை. இருப்பினும் விடா முயற்சியின் பயனாக மிகச் சிறந்த மல்யுத்த வீரனாக கடி மாறியிருக்கிறான்.

கடியின் கால் எலும்பு பாதத்துடன் எதுவித தொடர்புமின்றி சதையுடன் மட்டுமே தொங்கிக்கொண்டிந்தது. இதனால் 4 வயது வரை இவனால் எழுந்து நடமாட முடியாதிருந்து. ஆகவே பாதங்களை வெட்டி எடுத்துவிட்டால் பொய்ப் பாதத்துடன் நடமாட வாய்ப்பு ஏற்படலாம் என்று மருத்துவர்கள் தெரிவித்த கருத்துப்படி அவனுடைய பாதங்கள் நீக்கப்பட்டன.

இதுவரை கடியுடன் மல்யுத்தப் போட்டியில் மோதிய பலரை வீழ்த்தி 1390 புள்ளிகளைப் பெற்று ஐவி லீகால் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளான். 'ஜோர்ஜியா அதலற்றிக் கோச்சஸ் அசோசியேஷன்' என்ற அமைப்பு கடி சொஃபருக்கு இளம் மல்யுத்த வீரன் விருதினை வழங்கியிருக்கிறது.



## கைகொடுத்த கதவுமணி

நியூயோர்க் நகரில் சிலி என்ற பகுதியில் வாழும் ஃபிரெட் பெக்ஸ், தொடர்ந்து ஒலித்த வண்ணமிருந்த தனது வீட்டின் முன்புறக் கதவு மணி ஓசை கேட்டு கதவைத் திறந்தார்.

ஆனால் முன் புறம் யாருமே காணப்படவில்லை. இருப்பினும் மணி தொடர்ந்து ஒலித்துக்கொண்டே இருந்தது.

காரணம் அறியாமல் திண்டாடிய அவர் தற்செயலாக கீழே குனிந்து பார்த்தார். அடர்த்தியாகப் புகை எழுந்து கொண்டிருந்தது. நில மட்டத்துக்குக் கீழே இருந்த தட்டு முட்டுக் கழிவுப் பொருட்கள் போடப்பட்டிருந்த அறையில் தீப்பற்றியிருந்தது கண்டு திகைப்படைந்தார். அயலிலுள்ளவர்களையும் அழைத்து தீயை அணைத்து தப்பித்துக்கொண்டார்.

தீ பற்றிய எச்சரிக்கை செய்ய மின் சக்தியால் இயங்கும் கதவு மணிக்கு எப்படித் தெரிந்தது? எல்லாருக்குமே ஆச்சரியம்தான்(!)

கீழே தீப்பற்றியதும் அங்கிருந்த மின் கம்பிகள் இரண்டு ஒன்றோடொன்று ஒட்டிக்கொண்டன. இக் கம்பிகள் கதவு மணிக்கான மின் இணைப்புடன் தொடர்பு பட்டிருந்தமையினால் மணி தானாக அடிக்க ஆரம்பித்துள்ளது. வியப்பூட்டும் இந்த அதிசய நிகழ்ச்சியினைக் கண்டவர்கள், ஃபிரெட் பெக்ஸ் 'ஆண்டவனருளால்' காப்பாற்றப்பட்டான் என்று புகழ்ந்தனர்.

## நில விரிப்பால் குவிந்த அதிஷ்டம்



கொடுக்கிற தெய்வம் கூரையைப் பிய்த்துக்கொண்டு கொடுப்பதாக கூறுவார்கள்.

இங்கிலாந்திலுள்ள ஜியோஃப்றி செசம் என்பவருக்கு அதிஷ்டம் நிலவிரிப்பு மூலமாக பிய்த்துக்கொண்டு கிளம்பியிருக்கிறது.

நடந்த சம்பவத்தை நீங்களும் அறிய வேண்டாமா? அறியுங்கள்.

இங்கிலாந்தில் பியூர்லி எனுமிடத்தில் புதிதாகக் கட்டிய தனது இல்லத்தை அலங்கரிக்க ஏதாவதொன்றை வாங்கும் பொருட்டு பழைய பண்டங்களை விற்கும் ஒரு கடைக்குச் சென்றார், 54 வயதான ஜியோஃறி செசம். பண்டைக்கால தரை விரிப்பு ஒன்று அழகாகத் தென்பட்டது. 105 டொலர் கொடுத்து அதனை வாங்கினார். 7 அடி 11 அங்குல நீளமும் 5 அடி 5 அங்குல அகலமும் கொண்ட அந்த விரிப்பினை தனது இல்லத்தின் உபசரிப்பு அறைச்சுவரில் மாட்டினார்.

ஜியோஃப்றியின் நண்பர் ஒருவர் இந்த விரிப்பினைப் பார்த்ததும் வியப்படைந்தார். 17ம் நூற்றாண்டு மொகலாய சக்கரவர்த்திகளின் அரண்மனையை அலங்கரித்த விரிப்புத்தான் அது என்று கூறியதும் ஜியோஃப்றி அதிர்ந்து போனார். பழைய பொருட்கள் மற்றும் சுவடிகளை ஆராயும் விற்பந்நர்களின் உதவியை நாடினார் ஜியோஃப்றி. அவர்களும் அவருடைய நண்பரின் கூற்றினை ஒப்புக்கொண்டனர். உடனடியாக ஓர் ஏல விற்பனை நிறுவனத்தாரை அணுகினார். அவர்களும் பரிசோதித்து மிகவும் பெறுமதிவாய்ந்த பொருள் இவ்விரிப்பு என்று கூறிவிட்டனர்.

ஏல விற்பனையில் கை தேர்ந்தவரான ஜாக்கி பிங் இதனைப் பார்த்துவிட்டு விரைவில் இதனை ஏலத்தில் விடுமாறு அறிவுரை கூறினார். இப்பொருளை விற்கும்போது இதன் முதல் ஏல விலை 45,000 டொலர் என்று ஆரம்பிக்கப்பட வேண்டும் என்றும் கூறியிருக்கிறார்.

## தகவல் பெட்டி

## எங்கே.....ஆ.....காட்டு!



குருவிக் குஞ்சின் 'பல்'லைப் பரிசோதிக்கும் பல் வைத்திய நிபுண (டென்ரிஸ்ட்) ராக ஒரு பூனைக்குட்டியார் மாறி விட்டாரா? அல்லது அதன் வாயினுள் புகுந்துவிட்ட புழுவையோ பூச்சியையோ பிடுங்கித்தின்ன அவாக் கொண்டுவிட்டாரா? இந்த நிலை பூனைக் குட்டியின் மூக்குக்குத்தான் ஆபத்தாக முடியும்! 'வெப்பமான தகரக் கூரையின்மீது பூனை (CAT ON HOT TIN ROOF) என்ற திரைப்படம் சில காலத்துக்கு முன்னர் வந்தது. அப்படத்தில் இடம்பெற்ற காட்சியை அடியொற்றி இப்புகைப்படம் எடுக்கப்பட்டது.

## பெண்களுக்கு உதவும் கருவி

தனியே செல்லும் பெண்களுக்கு இங்கு மட்டும்தன் ஆபத்து என்றில்லை.

சுவீடனிலும் ஆபத்து இருக்கிறது. வம்பு பண்ணுவது-வழிப்பறி செய்வது என்று தொல்லைக்கு உள்ளாகும் பெண்களுக்கு சுவீடன் விஞ்ஞானிகள் ஒரு தேனான செய்தி தந்திருக்கிறார்கள்.

சிகரெட் பெட்டி அளவில் ஒரு எலக்ட்ரானிக் அலாரத்தை கண்டுபிடித்திருக்கிறார்கள். அதனை பெண்கள் தமது கைப்பையில் வைத்துக்கொள்ளலாம்.

திடீரென்று ரவுடிகள் யாராவது வாலாட்டினால் கைப்பையில் உள்ள பெட்டியில் இருக்கும் பட்டனை தட்டிவிட வேண்டியதுதான். மறு நொடியே-

"அய்யோ- அம்மா காப்பாற்றுங்க, ஆபத்து" என்று அந்த எலக்ட்ரானிக் கருவி குரல் கொடுக்கத் தொடங்கிவிடும். பெண்ணின் வாயைப் பொத்தினாலும் கருவி கத்தும். எந்த மொழியில் வேண்டு மானாலும் கத்தவைக்கலாம். சுவீடன் விஞ்ஞானிகளுக்கு அங்குள்ள பெண்கள் தட்டிக் கொடுக்கிறார்கள் முதுகை. இருக்காதா பின்னே? எத்தனை பெரிய உதவி.



www.padippakam.com

## வினிதா மறுத்தது ஏன்?

குஷ்பு அலை ஓய்ந்தபின் சுகன்யாவுக்கு சாதகம் ஏற்பட்டது. தற்போது சுகன்யாவுக்கும் கடும்போட்டி. மீனா-ரோஜா ரஞ்சிதா-வினிதா என்று போட்டியாளர்கள் களத்தில் இருக்கின்றனர். இவர்களில் அதிக படங்களில் நடிப்பவர் வினிதா மட்டுமே. கைவசம் பத்துப் படங்கள் வைத்திருக்கிறார்.

'ராஜமுத்திரை' படத்தில் நெப்போலியனின் ஜோடியாக நடிக்க முதலில் வினிதா மறுப்புத் தெரிவித்தாராம். காரணம் யாதென்றால் இயக்குநர் செல்வமணி தனது அபிமான ரோஜாவுக்கு படத்தில் முக்கியத்துவம் கொடுத்துவிடுவார் என்று நினைத்தாராம் வினிதா. ராஜமுத்திரையில் நெப்போலியனின் இன்னொரு ஜோடி ரோஜா. விசயமறிந்த செல்வமணி வினிதாவை சமாதானப்படுத்தி எப்படியோ சம்மதம் பெற்று மறுப்பை வாபஸ்வாங்க வைத்துவிட்டார்.



## சத்யராஜ் கூட்டணி ஏமாற்றிவிட்டது

'தோழர் பாண்டியன்' திரைக்கு வந்துவிட்டது. நம் நாட்டுக்கும் வீடியோ பிரதிகள் வந்துவிட்டன.

சத்யராஜ்-மணிவண்ணன் கூட்டணி இணைந்து வழங்கிய 'அமைதிப்படை' மாபெரும் வசூலை குவித்தது. அதனால் அந்தக் கூட்டணி இணைந்து வழங்கிய 'தோழர் பாண்டியனும்' பெரிதாக எதிர்பார்க்கப்பட்டது. விளம்பரங்களும் அமோகமாகச் செய்யப் பட்டன.

ஆனால் படம் வெளியாகியபோது எதிர்பார்க்கப்பட்ட விறுவிறுப்பு இல்லை. பல காட்சிகளும் தணிக்கையில் வெட்டப்பட்டுவிட்டதாகத் தெரிகிறது.

வை.கோபால்சாமியின் அணியில் இயக்குநர் மணிவண்ணன் இருப்பதால் வைகோவையும் படத்தில் காட்டியுள்ளார்.

சத்யராஜ் தன் நடிப்பில் குறை வைக்கவில்லை. மணிவண்ணன்தான் ஏமாற்றிவிட்டார்.

## கமலோடு நடிக்க விருப்பம்

சிரஞ்சீவி தெலுங்கில் சூப்பர் ஸ்டார். கமலிற்கு சிரஞ்சீவிக்கு ஏகப்பட்ட மரியாதை. இருவரும் நல்ல நண்பர்கள். தமிழில் கமலோடு சேர்ந்து ஒரு படம் நடிக்கவேண்டும் சிரஞ்சீவி ஆசைப்படுகிறார். ஆனால் கமல் தற்போது வித்தியாசமான படங்களை தருவதில் குறியாக இருப்பதால் சிரஞ்சீவியோடு சேர்ந்து நடிக்கக்கூடிய கதையை தேடுவது சிரமம்.

இருவரும் பிரபல நடிகர்கள் என்பதால் ஜோரான கதை தேடினாலும் மசாலாப்படமாகவே அது அமையவேண்டியிருக்கும்.



## மினிசினி

* கமல் தனது வீட்டில் பெரிய நூலகம் ஒன்றை வைத்துள்ளார். இதில் ஏழாயிரத்திற்கும் மேற்பட்ட புத்தகங்கள் உள்ளன. இவற்றில் சினிமா சம்மந்தப்பட்ட புத்தகங்கள்தான் அதிகமாகவுள்ளன.
* ஆர்.கே. செல்வமணி இயக்கிய 'அதிரடிப்படை' படத்தைத் தயாரித்தவர் ரோஜாவின் சகோதரர் குமார். இவர் முன்னணி நடிகர் ஒருவர் நடிக்கும் தமிழ்ப்படம் ஒன்றை தயாரிக்கவுள்ளார்.
* சிலகாலம் வாய்ப்புக்கள் எதுவுமின்றி இருந்து, 'வரவு எட்டணா செலவு பத்தனா' படம் மூலம் மீண்டும் வந்திருக்கும் இசையமைப்பாளர் சந்திரபோஸ் இதுவரை 115 படங்களுக்கு இசையமைத்துள்ளார்.
* தீவியின் பிரமாண்டமான தயாரிப்பான 'மே மாதம்' படத்தின் இயக்குநர் பாலுகிருஷ்ணமூர்த்தி. மணிரத்திடம் உதவி இயக்குநராக பணிபுரிந்த பாலுகிருஷ்ணமூர்த்தி, பழம்பெரும் தயாரிப்பாளரான 'வீனஸ்' கிருஷ்ணமூர்த்தியின் மகன் என்பது குறிப்பிடத்தக்கது.
* சில வருடங்களுக்கு முன்பு திராவிட முன்னேற்றக் கழகத்திற்காக தேர்தல் பிரச்சாரம் செய்தவர் ராதிகா. இப்போது அரசியலே வேண்டாம் என்று ஒதுங்கியிருக்கிறார். அத்துடன் அரசியல் படங்களில் நடிப்பதையும் தவிர்த்துள்ளார்.
* உண்மைச் சம்பவம் ஒன்றைக் கருவாகக் கொண்டு உருவாகும் 'தமிழச்சி' படத்தில் நெப்போலியன், ரஞ்சிதா ஜோடியாக நடிக்கிறார்கள். இந்தப்படத்தில் பத்திரிகை நிருபர் வேடத்தில் ரேவதி நடிக்கிறார்.
* 'மிஸ்டர் கார்த்திக்', 'கண் சிமிட்டும் நேரம்' போன்ற படங்களின் தயாரிப்பாளராக திரையுலகில் அறிமுகமானவர் சரத்குமார். இன்று முன்னணி நடிகர்களில் ஒருவராக இருக்கும் இவர் அடுத்த ஆண்டு படமொன்றை இயக்கவுள்ளார்.
* ஷர்மிளி, விசித்திராவைத் தொடர்ந்து 'ஐ லவ் இந்தியா' படத்தில் அறிமுகமான கவிதாஸ்ரீ முன்னணிக்கு வந்துகொண்டிருக்கிறார். 'வாழ்க ஜனநாயகம்' உட்பட பல படங்களில் நடனமாடி வருகிறார் கவிதாஸ்ரீ.
* அனில்கபூர்-மோனிஷா கொய்ராலா நடித்துள்ள '1942 ஏ லவ் ஸ்டோரி' என்ற இந்திப் படத்தின் வீடியோ உரிமை ஒரு கோடி ரூபாய்க்கு விற்பனை செய்யப்பட்டிருக்கிறது.
* மலையாளத்தில் வெற்றிபெற்ற 'காஷ்மீரம்' (தமிழில் நாட்டுக்காக) படத்தை அடுத்து ஜோஷி இயக்கத்தில், மம்முட்டிக்கு ஜோடியாக 'சைன்யம்' படத்தில் நடித்து வருகிறார் பிரியாராமன்.



## தெலுங்கில் கார்த்திக்

நீண்ட இடைவெளிக்குப் பின் தெலுங்கில் ஒரு படம் கார்த்திக்கை தேடி வந்திருக்கிறது.

தந்திரக் காட்சிகள்-மாயாஜாலக் காட்சிகள் நிறைந்த படம். கதாநாயகி யார் தெரியுமோ? சூப்பர் ஸ்டாரினி விஜயசாந்தி. கார்த்திக்-விஜயசாந்தி இருவருமே பாரதிராஜாவால் அறிமுகப்படுத்தப்பட்டவர்கள். ஆனால் தமிழில் இருவரும் இதுவரை ஜோடி சேரவில்லை.

## காலனியால் பிரபு மகிழ்ச்சி

'வியட்நாம் காலனி' நூறுநாள் விழா காணப்போகிறது. பிரபு சந்தோசத்தில் இருக்கிறார். நகைச்சுவை கலந்த படம் என்பதால் தியேட்டர்களில் பிரபு இரசிகர்கள் கைதட்டி இரசிக்கிறார்கள். பிரபு நடித்து அடுத்து வரப் போகும் படம் 'ஜல்லிக்கட்டு காளை', விரைவில் வரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

## குஷ்புவின் புதிய ஜோடி

முகப்பில்
**பிரசாந்-சார்லி**
படம்- ஆணழகன்
புன்னகையோடு
**வினிதா**



www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்



பிரசாந்த்-சுலேஹா
படம்-ஆணழகன்

## இளம் பெண்கள் மர்மக் கொலை

15 இளம்பெண்கள். அத்தனைபேரும் அட்டகாசமான அழகிகள். ஆனால் அவர்கள் யாரும் உயிரோடு இல்லை. யாரோ திட்டமிட்டு கொன்று விடுகிறார்கள். காவல்துறை கலங்கிப்போகிறது. இறுதியில் கொலையாளி மாட்டுகிறான். ஆனால் சட்டத்தின் கண்ணில் மிலோக்கணக்கான மண்ணை அள்ளி வீசிவிட்டு தப்பித்துக்கொள்கிறான். இறுதியில் தெய்வத்தின்தீர்ப்பு கிடைக்கிறது. இப்படித்தான் 'தெய்வத்தின் தீர்ப்பு' படத்தின் கதை போகிறது.

ரகுமான்-நிரோஷா, நிழல்கள் ரவி, சரத்பாபு, பேபி அஞ்சு ஆகியோர் நடிக்கிறார்கள்.

இசைக்கு முக்கியத்துவம் உள்ள படம். இசை-இளைய ராஜா.

## ஜூகி—ரிஷி உறவு முறிவு

இந்திப் படவுலகில் முன்னேறிவரும் கவர்ச்சி கலந்த நடிகை ஜூகி சாவ்லா.

ஜூகிசாவ்லா முதலில் சிம்புகபூருக்கு வலை வீசினார். அவர் சிக்கவில்லை. உடனே ஜூகி ரிஷிகபூரை மடக்கிப் பிடித்தார். இருவருக்கும் படு நெருக்கம். ஆனால் இப்போது ரிஷிகபூர் ஜூகியை விட்டு கழன்றுவிட்டார். ஜூகியும் கவலைப்படவில்லை. ஜாய் மேத்தா என்னும் தொழிலதிபரை படு தீவிரமாக காதலித்துக்கொண்டிருக்கிறார் ஜூகி.

## திருமணம் என்றால் என்ன?

'மகளிர் மட்டும்' படத்தின்மூலம் பேசப் பட்டிருந்த ரோகிணிக்கு யாராவது காதல் கடிதம் எழுதினால், உடனடியாக சுக்குநூறாகக் கிழி கிழி என்று கிழித்து, எழுதியவரையும் வசைபாடியபடி குப்பைத் தொட்டிக்குள் எறிந்து விடமாட்டார். அதையும் படித்து ரசிப்பாராம். திருமணம் பற்றி ரோகிணி என்ன சொல்கிறார் கேளுங்கள்: "இளமையில் காதலையும், தாய்மையின் குழந்தைப் பாசத்தையும், முதுமையில் நட்பையும் பகிர்ந்து கொள்வதுதான் திருமணம்" என்கிறார்.

# சினிவிசிட்

### சபாஷ் மம்முட்டி

'பொந்தன் மாடா', 'விதேயன்' படங்களில் தேசிய விருது பெற்றவர் மம்முட்டி. ஆனால் இந்தியில் மம்முட்டி நடித்த 'தர்திபுத்ரா' படுதோல்வியடைந்துள்ளது. காரணம், முதலில் தனக்கு சொல்லப்பட்ட கதைவேறு. படமாக்கப்பட்ட கதை வேறு. அது மட்டுமல்லாமல் தனது பாத்திரத்தின் முக்கியத்துவமும் குறைக்கப்பட்டது என்கிறார் மம்முட்டி. மலையாளத்தில் சூப்பர் ஸ்டார் அந்தஸ்தை மம்முட்டி இழந்துவிட்டாரா? இது கேள்வி. மம்முட்டியின் பதில் வித்தியாச ரகத்தில் வருகிறது. "சூப்பர் ஸ்டார்கள் எல்லாம் என்னவானார்கள்? உலகப் புகழ் பெற்ற மைக்கல் ஜாக்சன் கதி என்னவாயிற்று? அவரைப்போல நானும் தூக்க மாத்திரைகளை விழுங்கிவிட்டு படுத்துக்கிடக்க வேண்டுமா? அப்படியெல்லாம் இருப்பதைவிட ஒரு சாதாரண நடிகராக நிம்மதியுடன் இருந்தாலே போதும்" இதுதான் அவரது பதில்.



ரூபிணி
படம்-தாமரை

### நம்ம ஊரு ராசா

கணவன் ஒரு குடிகாரன். மனைவி சரியான சினிமா பைத்தியம். ஒரு படத்தைப் பார்த்ததும் அதில் நடித்திருக்கும் கதாநாயகியின் அலங்காரம் மற்றும் வசனங்களையும், பாடல்களையும் மனதில் நிறுத்தி வீட்டிற்கு வந்து, அப்படியே செய்து காட்டுபவள். இது கணவனுக்குப் பிடிக்காது பிறகென்ன? எப்போதுமே குடும்பத்தில் சண்டை சச்சரவுதான். இதிலொரு வேடிக்கை என்ன வென்றால், கணவன் வீட்டிற்கு வருகிறபோது மனைவி படத்திற்கு சென்றுவிடுவாள். மனைவி வீட்டிலிருக்கும் நேரம் கணவன் வெளியில் குடித்துக் கும்மாளம் போட்டுக்கொண்டிருப்பான். இப்படி ஒரு நகைச்சுவையான கதையைக் கொண்ட 'நம்ம ஊரு ராசா' படத்தில் கணவன்-மனைவியாக இரட்டை வேடத்தில் நடிக்கிறார் வடிவேலு. "பெண் வேடத்திற்கு மேக்கப் போடுவதற்கு ஒரு மணி நேரம் ஆகிறது. நிச்சயமாக இந்த இரண்டு கதாபாத்திரங்களும் ரசிகர்களின் பலத்த வரவேற்பைப் பெறும்" என்றார் வடிவேலு.

### கிசு-கிசு நியூஸ்

...தி நடிகைகளும்
...ட் வீரர்களும்

### ராம்கியின் முதல் அனுபவம்

இதுவரை தன் சொந்த ஹேர்ஸ்டைலுடன் நடித்து வந்த ராம்கி முதன் முறையாக விக் வைத்துக்கொண்டு உளவாளி படத்தில் நடிக்கிறார். அண்மையில் ராம்கி விலையுயர்ந்த கமரா ஒன்றை வாங்கியுள்ளார். படப்பிடிப்புக்குச் செல்லும்போது தன்னுடன் நடிப்பவர்களை அந்தக் கமராவினால் படமெடுத்து வருகிறார்.

### கமலின் புதிய படங்கள்

'நம்மவர்' படம் முடிவடைந்த பின்னர் கமலஹாசன், ஏவிஎம் நிறுவனம் தயாரிக்கும் ஒரு படத்தில் நடிக்கவுள்ளார். அத்துடன் கே.விஸ்வநாத் இயக்கும் தெலுங்குப் படம், பாலசந்தர் தயாரிக்கும் ஒரு படம் ஆகியவற்றிலும் நடிக்கவுள்ளார். இதற்கிடையில் மருதநாயகம் படப் பணிகளையும் ஆரம்பிக்கவுள்ளாராம்.

### ரஞ்சிதாவின் ஆசை

ரஞ்சிதா 'நாடோடித் தென்றல்' படத்தில் வாத்து மேய்க்கும் பெண்ணாக நடித்திருந்தார். அந்தப் படம் நடிக்கத் தொடங்கியதிலிருந்து வாத்து மேய்க்கும் பெண் ஒருத்தியை சந்திக்க ஆசைப்பட்டாராம். "இதுவரை நானும் ஒவ்வொரு வெளிப்புறப் படப்பிடிப்புக்குப் போகும் போதும் பார்க்கிறேன். ஒருவரையும் சந்திக்கும் சந்தர்ப்பம் கிடைக்கவில்லை" என்கிறார்.

### எம்.ஜி ஆருக்கான கதையில் ரஜினி

ரஜினி திரையுலகிற்கு வந்து 20வது ஆண்டை முன்னிட்டு 1995 பொங்கலன்று 'பாஷா' வெளிவரவுள்ளது. இது ரஜினிக்கு 149வது படம். 'பாஷா' வை அடுத்து, தனது 150வது படத்தை பிரமாண்டமாக எடுக்கத் திட்டமிட்டுள்ளார் ரஜினி. ஆனால் இந்தப் படத்தை சொந்தமாகத் தயாரிக்கமாட்டார் என்று கூறப்படுகிறது. அநேகமாக 'உழைப்பாளி' படத்தைத் தயாரித்த பட அதிபர் நாகிரெட்டியார் தயாரிக்கும் 'வாத்தியாரய்யா' படம்தான் ரஜினியின் 150வது படமாக அமையும் என்று தெரிகிறது.

'பாஷா', 'வாத்தியாரைய்யா' ஆகிய இரு கதைகளும் மறைந்த புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆருக்காக உருவாக்கப்பட்டவை என்பது குறிப்பிடத்தக்கது. ரஜினியின் 150வது படமான 'வாத்தியாரய்யா'வை, ரஜினியை வைத்து அதிகப்படங்களை இயக்கியவரும், ரஜினியின் 100வது படத்தை இயக்கியவருமான நட்சத்திர இயக்குநர் எஸ்.பி. முத்துராமன் இயக்குவார். ரஜினி ரசிகர்கள் பாஷாவையும் 150வது படத்தையும் எதிர்பார்க்கத் தொடங்கி விட்டனர்.

### நவீன ஆடைகளில் ஆர்வம்


தற்போது இந்திப்பட உலகில் நம்பர் வன் நடிகையாக இருக்கும் ஜூஹி சாவ்லா, படத்திற்குப் படம் வித்தியாசமான உடைகளில் ஜொலிப்பதோடு, நன்றாக நடித்து வருகிறார். நவீன ரக ஆடைகள் அணிவதில் அதிக ஆர்வம் கொண்ட அவர், மற்ற நடிகைகளின் சாதனைகளை முறியடிக்கும் வகையில் 'டர்' படத்தில் 70 வகையான வண்ண உடைகளில் தோன்றினார். இதற்கு முதல் 'தில் தேரா ஆஷிக்' படத்தில் 42வித உடைகளில் மாதுரி டிக்ஷித் வந்தார். அதை முறியடிக்கும்விதமாக ஸ்ரீதேவி 'லம்ஹே' படத்தில் 60 வகையான ஆடைகளும், 'சாந்தினி'யில் 65 விதமான உடைகளும் அணிந்து நடித்திருந்தார்.



சத்யப்பிரியா-மூர்த்தி-பேபிஷாமிலி
படம்-உருமாறி வந்த காதலி

www.padippakam.com
நன்றி - நூலகத் திட்டம்





# படி பாப்பா

படி பாப்பா! படி நீ
படி பாப்பா படி–இந்தப்
பாரில் மாந்தர்–பாவலன் அறிஞன்
பலரும் போற்றிடவே; படி பாப்பா....

துன்பங்கள் தொடர்ந்தாலும்
தோல்விகள் அணைத்தாலும்
சீரும்–சிறப்பும் பெற்று–நீ
சிரித்து வாழ்ந்திடவே! படி பாப்பா....


ஏழ்மைகள் கோடி வரும்
ஏற்றங்கள் பாதி வரும்
நாளும் உணர்ந்திடவே–நீ
நலமுடன் வாழ்ந்திடவே! படி பாப்பா–

அன்புக்குச் சிலையெழுது
அறிவுக்கு தலை வணங்கு
காக்கும் கரங்கள் என்று–உனை
காண்போர் போற்றிடவே! படி பாப்பா–

செல்வன்.இராமநாதன் தமிழ்வண்ணன்
இரத்தினபுரி

"ஊமையராய்ச் செவிடர்களாய்க் குருடர்களாய்
வாழ்கின்றோம் ஒரு சொற் கேளீர்!
சேம முற வேண்டுமெனில் தெருவெல்லாம்
தமிழ் முழக்கம் செழிக்கச் செய்வீர்!"
–சுப்பிரமணிய பாரதியார்–

## பாப்பா முரசு சிறுகதை



# தாய் சொல்லைத் தட்டாதே

ஒரு காட்டில் ஒரு புதர் இருந்தது. அதில் ஒரு முயல் வசித்து வந்தது. நாளடைவில் அந்த முயல் நான்கு குட்டிகள் போட்டது. அவைகளில் மூன்று குட்டிகள் வெண்மையாகவும், ஒரு முயல் கறுப்பாகவும் இருந்தது. தான் மட்டும் கறுப்பாக இருப்பதால் அது, தான் தான் சிறந்தவன், அழகானவன், உயர்ந்தவன் என்று எண்ணியது. இஷ்டம்போல குதிக்கவும், ஓடவும் தலைப்பட்டது கறுப்புமுயல்.

குட்டிகள் ஓடியாடத் தொடங்கியதும் தாய் முயல் அவற்றிற்கு வாழ்க்கையின் இரகசியத்தைக் கற்றுத்தர விரும்பியது. எங்கு எப்படி ஜாக்கிரதையாகச் செல்லவேண்டுமென்று அனுபவபூர்வமாகக் குட்டிகளுக்குக் கற்றுத்தர நான்கு குட்டிகளையும் அழைத்துக் கொண்டு புறப்பட்டது தாய்முயல். வெள்ளைக்குட்டிகள் மூன்றும் அதை ஒட்டி வர, கறுப்பு முயல் குட்டி மட்டும் விலகி, விலகி இஷ்டம்போல ஆடிக்கொண்டும் குதித்துக்கொண்டும் வந்தது.

தாய் முயல் மரங்கள் அடர்ந்த பகுதிக்குச் சென்றது. அங்குள்ள மரங்களைச் சுட்டிக் காட்டி அவைகளைப்பற்றி குட்டிகளிடம் கூறிற்று.

"அருமைக் குழந்தைகளே! இதோ இருக்கிறது பாருங்கள் வானத்தைத் தொடுவது போல உயர்ந்து, கிளைகளைத் தன்மீது மூடிக்கொண்டு நிற்கிறதே இது அசோக மரம். இது பார்ப்பதற்கு அழகாகவும், பசுமையாகவும் இருக்கும். இது ஆலமரம். எவ்வளவு பெரிது பாருங்கள். சின்ன விதையிலிருந்து பிரமாண்டமாக வளர்ந்த இந்த ஆலமரம் நிறைய பறவைகள் கூடு கட்டி வசிக்க இடம் கொடுக்கும். இது தேக்குமரம். இது பலாமரம். இது மாமரம்."

என்று ஒவ்வொரு மரமாகக் காட்டி தாய் முயல் கூறி வந்தது. எல்லா வெள்ளைமுயற் குட்டிகளும் காதுகளைத் தீட்டிக் கொண்டு அம்மா முயல் சொல்வதை உன்னிப்பாகக் கேட்டன.

கறுப்பு முயல் குட்டியோ அம்மா முயல் சொல்வதைக் காது கொடுத்தும் கேளாமல் அங்கு ஓடுவதும், இங்கு ஓடுவதுமாக இருந்தது.

தாய்முயல் அடுத்ததாகக் குட்டி முயல்களுக்கு உணவைப் பற்றிச் சொல்லத் தொடங்கிற்று.

"அருமைக் குழந்தைகளே! பசி உண்டானதும் கண்டதை நீங்கள் சாப்பிட்டு விடக்கூடாது. அறுகம்புல், கோதுமைப்புல் மிகவும் சுவையாக இருக்கும். அவைகளை நீங்கள் வயிறு நிறையச் சாப்பிடலாம். தவிர, ஆலமரம், கொய்யாமரம் போன்றவற்றின் இலைத்தளிர்களையும் நீங்கள் யோசிக்காமல் சாப்பிடலாம். ஆனால், இதோ இருக்கிறதே முட்செடிகள், இவைகளைத் தப்பித் தவறிக் கூட நீங்கள் சாப்பிட்டுவிடக் கூடாது. அவற்றைச் சாப்பிடுவதால் உடல் நலம் பாதிக்கப்படும். சில சமயங்களில் அவைகளை உண்பதால் பைத்தியம்கூடப் பிடித்துவிடும்." என்று சொல்லிற்று தாய் முயல்.

மூன்று வெள்ளை முயல்களும் அம்மா சொல்வதைக் கவனமாகக் கேட்டு, அந்த முட்செடியை எப்படி இருக்கிறது என்று பார்த்துக்கொண்டன.

கறுப்பு முயல் குட்டியோ அம்மா சொல்லிக் கொண்டிருக்கும் அறிவுரை தனக்கு இல்லை என்பதுபோல் வேறு பக்கமாக ஓடிச்சென்று விளையாடிக் கொண்டிருந்தது.

மரங்களைப்பற்றி, உணவுகளைப் பற்றி சொல்லி முடித்த தாய்முயல் அடுத்ததாக, காட்டு மிருகங்களின் தடங்களைப்பற்றிக் குட்டிகளுக்குக் கூறலாயிற்று.

"அருமைக் குழந்தைகளே! இந்தச் சின்னக் காலடிச் சுவடுகளைப் பார்த்தீர்களா? இவைகள் அணிலின் கால் சுவடுகள். இவைகளால் நமக்கு ஆபத்தில்லை. ஏன் தெரியுமா? அணில் நம்மைப்போலவே சாதுவான பிராணி. விதைகள், பருப்புகள், காளான்கள் போன்றவைகளை அணில் மிகவும் விரும்பி சாப்பிடும். இதோ பார்த்தீர்களா குழந்தைகளே இவை கலைமானின் அடிச்சுவடுகள். கலைமான்கள் நமக்குத் தீங்கு விளைவிக்காது. இவைகள் ஓநாய், நரிகளின் காலடிகள். இவைகளைக் கவனமாகப் பார்த்துக்கொள்ளுங்கள். இந்தக் காலடிகள் உள்ள இடத்தின் பக்கமே செல்லாதீர்கள். இவைகள் மிகவும் பொல்லாதவை. நம்மைச் சாப்பிட அலைபவை.

"இவைகளிடமிருந்து நாம் எப்போதும் விலகியே இருக்க வேண்டும்." என்றது தாய்முயல்.

மூன்று வெள்ளை முயல்களும் 'சரியம்மா' என்பதுபோல தலையாட்டின.

நாட்கள் சென்றன. முயல் குட்டிகள் பெரிதாகின. வெள்ளை முயல் குட்டிகள் மூன்றும் அம்மா சொன்னபடியே நடந்தன. ஆபத்தின்றி வாழ்ந்தன.

அம்மா சொன்ன அறிவுரைகள் எதையும் கேளாத கறுப்பு முயல், அம்மா முயல் சாப்பிடக்கூடாது என்று சொன்ன முட்செடியைச் சாப்பிட்டு விட்டு, நரி, ஓநாய் ஆகியவற்றின் காலடிச் சுவட்டின் மீது சென்று ஒரு ஓநாயின் பசிக்கு இரையானது.

## விடுகதைகளும் விடைகளும்

1. ஊரவர் அனைவருக்கும் அள்ளிக் கொடுப்பான். அவன் தின்னமாட்டான். அவன் யார்?
2. அண்ணன் ஒட்டமாட்டான். தம்பி ஒட்டுவான். அவன் யார்?
3. இரவில் இருப்பான். பகலில் மறைவான். அவன் யார்?
4. துருவத்துருவ பூ-பிழியப் பிழியப் பால். அது என்ன?
5. நித்தம் கொட்டும். ஆனால் சத்தம் இராது. அது என்ன?

**விடைகள்**

1. அகப்பை 2. உதடு
3. நட்சத்திரம் 4. தேங்காய்
5. கண் இமை

கு. நிஷந்தன்
புனித சூசையப்பர் கல்லூரி–திருகோணமலை.

1. குதிரை ஓட ஓட வால் குறைந்துகொண்டே போகுது. அது என்ன?
2. பாம்புக்கு எதிரி நான். ஆனால் கீரி அல்ல. இறைவனைச் சுமந்திடுவேன். விமானமும் அல்ல. நான் யார்?
3. பாடல் இல்லாத ஆட்டம். பணம் பறிக்கும் ஆட்டம். அது என்ன?
4. வெள்ளைப் பாம்பு. கல்லைத் தூக்கும். அது என்ன?
5. பூ இருந்தும் பறிப்பதில்லை. அது என்ன?
6. நீரில்லா குளத்தில் நீந்தி விளையாடும் மீன். அது என்ன?
7. அண்ணன் மேளம் அடிக்க, தம்பி விளக்கேற்ற, தாய் அழுகிறாள். அது என்ன?
8. ஆட்டலாம், அசைக்கலாம். பிடுங்க முடியாது?
9. உரித்த புறா சந்தைக்குப் போகுது?
10. இறைவன் செய்த கதவு. தானே திறக்கும். தானே மூடும். அது என்ன.

1. தையல்-ஊசி, நூல் 2. மயில்
3. சூதாட்டம் 4. புடலங்காய்
5. சேவல் 6. கண்
7. இடி, மின்னல், மழை 8. விரல்
9. தேங்காய் 10. வாய்

மசூபா-அக்குறனை.மு.பா.வி

## சிறந்த வர்ணத்திற்குப் பரிசுதரும் எண்ணம்!



மேலே உள்ள படத்திற்கு வர்ணம் தீட்டி தபாலட்டையில் ஒட்டி அனுப்புங்கள். சிறந்த வர்ணம் ஒன்றுக்கு பரிசு ரூபா 25/= காத்திருக்கிறது. அனுப்பவேண்டிய கடைசித் திகதி 03.09.1994.

வர்ணம் தீட்டும் போட்டி இல: 55
தினமுரசு வாரமலர்
த.பெ.இல.1772
கொழும்பு.

### வர்ணம் தீட்டும் போட்டி இல. 52

**பரிசுக்குரியவர்**
செல்வி.தவராஜா தஜானி-மட்/இந்துக்கல்லூரி-வாழைச்சேனை.

**பாராட்டுக்குரியவர்கள்**

வி.கௌரிதாசன்
புனித ஜோசப் கல்லூரி-திருகோணமலை.

முகமட் றிஸ்கின்-தமிழ் மகா வித்தியாலயம், நுகேகொடை.

எம்.விஜயாம்பிகை
சென்.கப்ரியல் பாலிகா மகா வித்தியாலயம், ஹட்டன்.

சித்தி மருசுக்கா-அல்-பத்தாஹ் வித்தியாலயம், நிலாவெளி.

வி.சிறீகணன்-சென் பீற்றஸ் ஆண்கள் பாடசாலை-பம்பலப்பிட்டி.

எம்.ஆர்.எம்.சப்ராஸ்-நஸ்ரியா மகா வித்தியாலயம், சிலாபம்.

பாத்திமா இஸ்ரத்-போகஹகும்புர.

ஜெ.சஜீவன்-முகத்துவாரம் இந்துக்கல்லூரி, கொழும்பு.

மு.முஹைரா-ஸ்ரீ சண்முக இந்துக் கல்லூரி, திருகோணமலை.

எஸ்.சாந்தகுமார்-பல்குபுரை முஸ்லிம் வித்தியாலயம்-வெரல்லகம.

## அறிவோம் மனதில் பதிவோம்




துருக்கியின் மன்னராக இருந்த 'மித்ரி டேட்ஸ்' என்பவர் வாத்து ரத்தத்தில் சிறிதளவு விஷம் கலந்து அடிக்கடி குடிப்பார். அதனால் அவரது உடலில் விஷம் பரவி உடல் உரம் பெற்றது. அதனால் அவரைப் பாம்பு தீண்டினாலோ, விஷம் வைத்துக் கொல்ல முயற்சித்தாலோ அவர் சாமாட்டார். முற்காலத்தில் மன்னர்கள் இப்படிச் செய்வது வழக்கம்.



உலகிலேயே அதிகம் கார்கள் தயாரித்த நிறுவனம் வோக்ஸ் வேகன். இந்த நிறுவனத்தின் பீட்டல் வகை கார்கள் 1933ம் ஆண்டு தயாரிப்பு ஆரம்பித்தது. 1991ம் ஆண்டுவரை 2 கோடி கார்கள் தயாரிக்கப்பட்டது.

## செய்து பாருங்கள்

### இசைக்கருவி



**தேவையான பொருட்கள்:** சோடா போத்தல் மூடி, இரப்பர் பாண்ட், நீளமான நூல், பட்டன்.

**செய்முறை:** இரப்பர் பாண்டை வெட்டி அதை பட்டனின் ஒரு துளையில் விட்டு அதன் முனைகளை முடிச்சுப்போட வேண்டும். அந்த இரப்பர் பாண்டை சோடா போத்தல் மூடியில் நுழைத்துவிட வேண்டும். பட்டன் மூடியின்மீது இருக்க வேண்டும். பட்டனின் மற்றொரு துளையில் நூலைக் கட்டவும். நூலில் சரி சமமான இடைவெளியில் பல முடிச்சுக்களைப் போடவும்.

இப்போது சோடா போத்தல் மூடியை ஒரு கையில் பிடித்துக் கொண்டு மற்றொரு கையின் விரல்களை நூலின் முடிச்சுக்களில் மேல் நோக்கி நகர்த்தவும். அப்போது இனிமையான ஓசை ஏற்படும்.

பாப்பா முரசுக்கு உங்கள் ஆக்கங்கள் வரவேற்கப்படுகின்றன.
முகவரி:
பாப்பா முரசு
தினமுரசு வாரமலர்
த.பெ.இல. 1772
கொழும்பு

## கங்காரு



- கங்காருகள் எங்கே உள்ளன?
  அவுஸ்திரேலியாவிலும் அதனைச் சுற்றியுள்ள தீவுகளில் மட்டும் கங்காருகள் உள்ளன.
- கங்காருகள் உருவத்தில் எப்படி இருக்கும்?
  சில, எலிகளின் அளவுதான் இருக்கும். அவற்றிற்கு எலி கங்காரு என்று பெயர். சிவப்பு கங்காருகள்தான் கங்காரு வகைகளிலேயே மிகவும் பெரியவை. அவை இரண்டு மீற்றர் உயரம் வளரும். இப்படி கங்காருகளில் பலவகைகள் உண்டு.
- இவைகள் எவ்வகையான உணவுகளைச் சாப்பிடும்?
  பெரும்பாலும் புற்கள்தான் இவற்றின் உணவு.
- இவை எப்படி ஓடும்?
  மெதுவாகச் செல்லும்போது முன் கால்களைத் தரையில் ஊன்றி பின், பின்னங்கால்களை இழுத்து நடந்து செல்லும். வேகமாக ஓடும்போது பலமான பின்னங்கால்களை வைத்துக் குதித்துக் குதித்துத் தாவிச் செல்லும். பத்து மீற்றர் நீளத்திற்குத் தாவும் இது, இரண்டு மீற்றர் வேலியையும் தாண்டி விடும்.
- குட்டிபோட்டு பால் கொடுக்கும் விலங்குகளில் கங்காருவின் தனித்தன்மை என்ன?
  இது ஒரு 'மார்ஸ்யூபியல்' வகை பிராணி. குட்டிகளைத் தாய் தனது உடலில் உள்ள பையில் சுமக்கும் விலங்குகளுக்கு 'மார்ஸ்யூபியல்' என்று பெயர். இந்த வகையிலே குறிப்பிட்டுச் சொல்லக் கூடிய விலங்கு கங்காரு ஆகும்.



# தேன் கிண்ணம்

## காதல் உயிர்ப்பு

கல்லூரி நாட்களுக்குள்
கர்வம் போர்த்து–என்
பார்வைத் தெருக்களில்
பவனி வந்தவளே!

இன்னும், இன்னும்
மௌனக் கல்லெறிந்து!
மனக் குளத்தை
மாசு படுத்தாதே!

உன்
உதட்டு
உத்தியானத்தில்
புன்னகை மொட்டுக்களை
பூக்க விடு.

உதயத்தில் வந்து
உறங்கிப் போன
வார்த்தைகளை
உதிரியாக்கு!

நீண்ட ராவுகளில்
நித்தம் வந்து
உணர்ச்சி விருட்சங்களை
உசுப்பி உசுப்பி!
இளமைத் துளிர்களை
உதிர்த்துப் போடு

கனவுகளுக்குள்
கட்டில் நட்டு!
பாதி இமை உடுத்து!
படுத்துத் தொலை.

இன்னும், இன்னும்
உனக்குள்–ஏன்
இத்தனை இறுக்கம்.

இந்த இதயம்
இயங்கிக் கொள்வதும்
பூமி சுழல்வதும்
எல்லாமே
உனக்காகத்தான்
இது புரியாதவளாய் நீ.

மரணம் கௌவி
மறுபடி உயிர்க்கும்
மயான பூமியில்
இன்னும் இவன்
இருப்பது கூட–உன்
இறுதிப் பதிலுக்கே.



உன்
இறுதிப் பதிலே
எனக்கு
இறுதி பகலானாலும்
பரவாயில்லை

மாலை சூடி
விழிகள் மூடி
மயானம் போனாலும்
கல்லறையிலும்–என்
இதயம் உனக்காக துடிக்கும்
உயிர் பெறும்.
அது போதும்.....

**நிவேப்பிரியன்(கல்லூர்க்கவி)**
**பொத்துவில்-03.**

## ஆயுத யாகம்

உரிமை வேண்டி
ஆயுத யாகம்
ஆயுதத்துக்கோ
ரத்ததாகம்!

▫

பாடிப்பெற்ற தேசம்
பறவைகளின்
பூபாளத்தைக்கூட
பறிகொடுத்துவிட்டது!

▫

ஒரு இருண்ட கண்டத்தில்
ஒளிக்கதிர்கள்
இருள் கழுவும்போது
ஒரு ஒளிர்ந்த தேசம்
கரி பூசிக்கொள்கிறது!

▫

இருபது ஆண்டுகளுக்கு
முன்பொருநாள்
தமிழாராய்ச்சி
மாநாடங்கே
குருதியில் குளித்தது!
இனவாதம்
இதயங்களில்
ஊசிகுத்தியது!

▫

ஆயிரமாயிரம்
அறிஞர்களின்
இதயங்கள் சுமந்த
அறிவாலயம்
இதயமற்றவர்களால்
அக்கினிப் போர்வையை
உடுத்திக்கொண்டது!
சத்தியமாய்–அன்றே
தமிழுக்குச்
சாவோலை செதுக்கப்பட்டது!

▫

வெட்டுப் புள்ளிகள்
அறிவுத் தளிர்களை
வெட்டிப்போட்டன!

▫

இப்போதங்கே
உரிமை வேண்டி
ஆயுத யாகம்!

▫

துப்பாக்கி முனைகள்
திசைமாறியதால்
தமிழினமே
திக்கெல்லாம்
தலைதெறித்தோடியது!

▫

அர்ச்சுனன்
அன்று கண்டது
பறவையின் உருவைத்தான்
கிளையிலும்
இலையிலும் விழி பதித்தவர்கள்
குறிதவறிப் போனார்கள்!

▫

அங்கேயோர்
உதயம் தேவைதான்
இலக்குகள் தவறி
இனங்களைக் கலைத்தீர்
வந்ததா வசந்தம்?

▫

கொக்கட்டிச் சோலை
காக்கியுடைகளின் வெற்றி
பூநகரி
புலிகளின் வெற்றி!
இப்படியே..
இலக்குகள் யாவும்
போராட்டமானால்....
போராட்டத்தின்
இலக்கு....?

**பஹீமா ஜஹான் ஸவாஹிர்**
**மெல்சிரிபுர.**

## அவள்!

முன்னே இரண்டு மொக்குடை யாளவள்
முல்லைச் சிரிப்புடையாள்!–கவின்
என்னே யென்று ஏங்கிட வைக்கும்
எழிலாள் எனக்குடையாள்!
பின்னே இரண்டு பின்னல் அசையும்,
பேதை நடந்திடுங்கால்– தினம்
கன்னம் தடவிக் களிக்கத் தருவாள்
காதல் விருந்திடுவாள்!

காலைப் பெயர்த்து (ஓ)ஆடி நடப்பாள்
காந்தம் போலிழுப்பாள்! தினம்
வேலைப் பழிக்கும் விழியால் வீசி,
வெற்றிக் கணை தொடுப்பாள்!
நூலை நிகர்த்த இடையுடையாளவள்
நுங்காய் மார்புடையாள்!–நிதம்
சாலை தனிலே சந்திப்பாளவள்,
சந்தோசம் தருவாள்!

மூன்று கனிகள் தாங்கும் உடலாள்,
மோகம் தந்திடுவாள்! இதழ்
தேன்தானென்று திளைக்கத் தந்தென்–
தேவை தீர்த்திடுவாள்!
கான்வாழ் மயிலின் சாயல் மிகுத்தாள்
கவிஞன் உள்ளத்தில்;–அவள்
நான்தான் உங்கள் உயிரேயென்று
நடனம் புரிகின்றாள்!





**அ.கௌரிதாசன்–ஆலங்கேணி–கிழக்கு.**

## உன்னுடைய நான்!



உனக்கு
எல்லாமே–
ஞாபகமிருக்கும்
என்னைத்தவிர.

▫

உனக்குத் தெரியுமா
உன்னைத் தவிர–
எதுவுமே எனக்கு–
நினைவில்லையென்று..!

▫

என்–
கனவுகளை
விசாரித்து பார்
உன்னைத் தவிர
எதையுமே உண்டிருக்காது..!

▫

என்
கடிதங்களை
படிக்க
ஒதுங்குவாயே
அந்த அடுக்கு மல்லிகை!
இன்னும் இருக்கிறதா
உனது வீட்டில்...?

▫

எதையுமே
மறக்கவில்லை
நான்–
நாம் உட்கார்ந்த–
கிணற்றடி கட்டு,
சாய்ந்திருந்த
கமுகுமரம்
இப்பவும் எனக்குள்
ஈரமாய் இனிக்கிறது..!

▫

உனது
கூந்தலில்
சிக்கெடுக்கும்
என்–
கைவிரலுக்கு..
நீ போட்டுவிட்டாயே
வெள்ளி மோதிரம்,
அதைக்கூட–
நான்
அழுத்திப் பார்த்ததில்லை.
உனக்கு வலிக்குமென்று..!

▫

நீ–
அனுப்பி வைத்த
என்–
புகைப்படங்கள்,
கடிதங்கள்,

எல்லாமே கிடைத்தது.

▫

உனக்குள்
இருக்கும்,
என்னை மட்டும்–
ஏன் கண்மணி
இன்னும்–
அனுப்பவில்லை
நீ...?

**ஒட்டமாவடி–அறபாத்.**

# பிரிந்தவர் கூடினால்...



**த**மிழ் திரையுலகில் கொடிகட்டிப் பறந்த மெல்லிசை மன்னர்கள் எம்.எஸ். விஸ்வநாதன்-ராமமூர்த்தி.

காலத்தால் அழியாத பாடல்களை கண்ணதாசன் எழுத-அதற்கு விஸ்வநாதன்-ராமமூர்த்தி இசையமைக்க, டி.எம்.சௌந்தரராஜன் பாட, சிவாஜி உயிர் கொடுத்து நடிக்க இப்போதும் எப்போதும் மறக்க முடியாத காலம் அது.

யார் கண்பட்டதோ மெல்லிசை மன்னர்கள் இடையிலே பிரிவு. தனித்தனியே இசையமைத்தார்கள். அதிலே விஸ்வநாதன் மட்டுமே கொடிகட்டிப் பறந்தார்.

இப்போது நீண்ட பல ஆண்டுகளுக்குப் பின் இசைப் பிரியர்களுக்கு இனிப்பான செய்தி.

எம்.எஸ்.விஸ்வநாதனும் ராமமூர்த்தியும் மீண்டும் ஒன்றாய் இணைந்துவிட்டார்கள்.

கவியரசு கண்ணதாசனுக்கு சிலைவைக்க நிதிதிரட்டும் நிகழ்ச்சிகளை தமிழ் நாட்டில் நடத்தி வருகிறார்கள்.

சேலம் நகரில் நடைபெற்ற இசை நிகழ்ச்சியில் விஸ்வநாதன்-ராமமூர்த்தி இணைந்து தோன்றினார்கள். இளையராஜா (சங்கர்) கனேஷ் டி.எம்.சௌந்தரராஜன், பி.சுசிலா, எல்.ஆர்.ஈஸ்வரி, பி.பி.ஸ்ரீனிவாஸ் ஆகியோரும் அவர்களோடு தோன்றி இசை நிகழ்ச்சி நடத்தினார்கள்.

மீண்டும் இருவரும் இணைந்து இசையமைப்பீர்களா என்று கேட்டபோது, "வாய்ப்பு வந்தால், அதற்குரிய மரியாதை தரப்பட்டால் திரைப்படத்திற்கு இணைந்து இசையமைப்போம்" என்று இருவரும் கூறியுள்ளார்கள்.

இசை நிகழ்ச்சியில் 'பார்த்த ஞாபகம் இல்லையோ' பாடலை வயலினில் வாசித்தார் ராமமூர்த்தி.

'மன்னவன் வந்தானடி' பாடலை பாடிய பி.சுசீலா, பாடி முடித்த பின், "ஒரு தவறு செய்துவிட்டேன் மன்னவன் வந்தானடி என்று பாடியிருக்கக்கூடாது, மன்னவர்கள் வந்தாரடி என்று பாடியிருக்க வேண்டும்" என்றார்.

இளையராஜாவை மேடையில் அழைக்க "வா வெண்ணிலா" பாடலை பாடினார் எம்.எஸ்.விஸ்வநாதன்.

'நெஞ்சம் மறப்பதில்லை' பாடலை இளையராஜா பாடி முடிக்க பரிசாக முத்தம் கொடுத்தார் எம்.எஸ்.வி.

இருவரும் இணைந்த செய்தி 1994ம் ஆண்டின் தூய தலைப்புச் செய்தி என்று இசையமைப்பாளர் தேவா கூறியிருக்கிறார்.

இருவரையும் வைத்து இசையமைத்து சிறந்த பாடல்களை மீண்டும் கேட்க வைக்குமா தமிழ் திரையுலகம்? எதிர்பார்ப்போம்.

## மானிடம் வாழ்த்திச் செல்க!

காய்ந்த சருகினை
ஒத்ததாய்
துன்பங்களின் ஆக்கிரமிப்பில்
ஒரு வாழ்வு.
விரக்திச் செறிப்புள்ள
மூச்சுக்களினால்
நிரப்பப்பட்டிருக்கிறது
எங்கள் விளை நிலங்கள்.

▫▫▫

கொன்றையின் பூப்பும்
பூவரசின் மலர்வும்
வேலிக் கிளுவையின்
வாசமும் தொலைத்து
இன்றோடு
எத்தனை நாட்கள்?

▫▫▫

அன்பை, ஆதரவை
அன்னியோன்யத்தை
சுதந்திரத்தை என்று
இன்னும் எத்தனை
இழக்கப்பட்டுவிட்டது.

▫▫▫

இருண்டதாயே இருக்கும்
காலைகளை
இன்னும்
எத்தனை நாளைக்குத்தான்
வரவேற்பது?

▫▫▫

தேசம் பிற்போக்கின்
அடியில் சுருங்கி
விட்ட தற்கான
அறிகுறியா
இத்தனை இழப்புகளுக்கும்
அர்த்தம்.....?

▫▫▫

புகை மறந்து
தீ இழந்து
நந்த வனங்கள்
நாட்டப்படும்
புதிய தேசமே வருக!
மானிடம்
வாழ்த்திச் செல்க!!

**இளைய அப்துல்லாஹ்.**

## இந்த வாரம் உங்கள் பலன்
### (28.08.94 முதல் 03.09.94 வரை)

சோதிட மாமணி
'தில்லை'

### நவக்கிரக சஞ்சாரம்

| | |
|---|---|
| சிம்மம் | - சூரியன், புதன் |
| கன்னி | - சுக்கிரன் |
| துலாம் | - இராகு, வியாழன் |
| மகரம் | - சனி |
| மேடம் | - கேது |
| மிதுனம் | - செவ்வாய் |

சந்திரன்–இடபம், மிதுனம், கர்க்கடகம் ஆகிய இராசிகளில் சஞ்சரிப்பார்

### மீனம்: சுப நேரம்

(பூரட்டாதி, நாலாங்கால், உத்திரட்டாதி, ரேவதி)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | மனப்பயம், செய்தொழில் நட்டம். | பி.ப 1 மணி |
| திங்கள்- | காரியத்தடை, கௌரவக் குறைவு. | பி.ப 2 மணி |
| செவ்வாய்- | அந்நியர் உதவி, மனமகிழ்ச்சி. | காலை 7 மணி |
| புதன்- | வீண் துயர் நீங்கும், செய்தொழில் நன்மை. | பகல் 12 மணி |
| வியாழன்- | மனக் கவலை, வெளியிடப் பயணம். | காலை 8 மணி |
| வெள்ளி- | காரியசித்தி, உயர்ந்த எண்ணம். | பி.ப 2 மணி |
| சனி- | பெரியோர் நட்பு, முயற்சி மேன்மை. | காலை 10 மணி |

அதிஷ்டநாள்-வியாழன், அதிஷ்ட இலக்கம்- 2

### மேடம்: சுப நேரம்

(அச்சுவினி, பரணி, கார்த்திகை முதற்கால்)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | மன மகிழ்ச்சி, குடும்ப சுகம். | பகல் 11 மணி |
| திங்கள்- | உறவினர் உதவி, பணச்செலவு. | பகல் 12 மணி |
| செவ்வாய்- | தாரசுகம், குடும்ப நன்மை. | காலை 6 மணி |
| புதன்- | பிள்ளைகளால் உதவி, செலவு மிகுதி. | பி.ப 1 மணி |
| வியாழன்- | பெரியோர் நட்பு, முயற்சி வெற்றி. | பி.ப 2 மணி |
| வெள்ளி- | கடன்பயம், உயர்ந்தோர் நட்பு. | காலை 6 மணி |
| சனி- | தனலாபம், செய்தொழில் விருத்தி. | பி.ப 2 மணி |

அதிஷ்டநாள்-வெள்ளி, அதிஷ்ட இலக்கம்- 6

### இடபம்: சுப நேரம்

(கார்த்திகைப் பின்முக்கால், ரோகிணி,மிருகசீரிடத்துமுன்னரை)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | காரியானுகூலம், முயற்சி மேன்மை. | பி.ப. 2 மணி |
| திங்கள்- | பணவிரயம், உறவினர் உதவி. | காலை 7 மணி |
| செவ்வாய்- | அந்நியர் நட்பு, மனக்கவலை. | பகல் 12 மணி |
| புதன்- | குடும்ப சுகம், காரியக்கேடு. | பி.ப. 2 மணி |
| வியாழன்- | தெய்வானுகூலம், பெரியோர் நட்பு. | பகல் 11 மணி |
| வெள்ளி- | செல்வாக்கு மேன்மை, இராஜ மரியாதை. | பகல் 12 மணி |
| சனி- | துயர் நீங்கும், செலவு அதிகம். | காலை 7 மணி |

அதிஷ்டநாள்-புதன், அதிஷ்ட இலக்கம்-5

### மிதுனம்: சுப நேரம்

(மிருகசீரிடத்துப் பின்னரை, திருவாதிரை, புனர்பூசத்து முன் முக்கால்)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | புதிய தொழில், செலவு மிகுதி. | காலை 6 மணி |
| திங்கள்- | மன அமைதியின்மை, தேகசுகம் பாதிப்பு. | காலை 9 மணி |
| செவ்வாய்- | அந்நியர் சகவாசம், வெளியிட வாழ்க்கை. | பகல் 12 மணி |
| புதன்- | காரியசித்தி, பொருள் பேறு. | பி.ப 3 மணி |
| வியாழன்- | உயர்ந்த எண்ணம், மன மகிழ்ச்சி. | பகல் 12 மணி |
| வெள்ளி- | காரியானுகூலம், கௌரவம். | காலை 9 மணி |
| சனி- | துயர் நீங்கும், மனமகிழ்ச்சி. | பி.ப 1 மணி |

அதிஷ்டநாள்-வியாழன், அதிஷ்ட இலக்கம்-7

### கும்பம்: சுப நேரம்

(அவிட்டத்துப் பின்னரை, சதயம், பூரட்டாதி)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | காரியானுகூலம், பணவரவு. | காலை 7 மணி |
| திங்கள்- | முயற்சி பலிதம், வீண் துயர் நீங்கும். | பகல் 12 மணி |
| செவ்வாய்- | மனமகிழ்ச்சி, பணத்தடை. | பி.ப 2 மணி |
| புதன்- | அந்நியர் உதவி, மனக்கவலை. | காலை 8 மணி |
| வியாழன்- | பணத்தட்டுப்பாடு, உயர்ச்சி. | பகல் 12 மணி |
| வெள்ளி- | கௌரவம், தேகசுகம் பாதிப்பு. | பி.ப 3 மணி |
| சனி- | காரியானுகூலம், செலவு மிகுதி. | பகல் 12 மணி |

அதிஷ்டநாள்-செவ்வாய், அதிஷ்ட இலக்கம்- 7

### கர்க்கடகம்: சுப நேரம்

(புனர்பூசத்து நாலாம் கால், பூசம், ஆயிலியம்)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | காரியானுகூலம், பொருள் வரவு. | பி.ப 2 மணி |
| திங்கள- | பெரியோர் நட்பு, முயற்சி மேன்மை. | காலை 7 மணி |
| செவ்வாய்- | மனமகிழ்ச்சி, பொருள் வரவு. | பி.ப 3 மணி |
| புதன்- | உறவினர் உதவி, குடும்ப நன்மை. | பி.ப 4 மணி |
| வியாழன்- | தனலாபம், வெளியிட வாசம். | பகல் 12 மணி |
| வெள்ளி- | துன்பம் நீங்கும், காரியசித்தி. | பகல் 11 மணி |
| சனி- | உயர்ந்த எண்ணம், முயற்சி மேன்மை. | பி.ப 2 மணி |

அதிஷ்டநாள்-வெள்ளி, அதிஷ்ட இலக்கம்- 3

### மகரம்: சுப நேரம்

(உத்தராடத்துப் பின்முக்கால், திருவோணம், அவிட்டத்து முன்னரை)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | செய்தொழில் விருத்தி, பணச் செலவு. | பி.ப 3 மணி |
| திங்கள்- | உறவினரால் தொல்லை, மனக் கிலேசம். | பகல் 12 மணி |
| செவ்வாய்- | குடும்ப சுகம், வெளியிடப் பயணம். | காலை 8 மணி |
| புதன்- | பெரியோர் நட்பு, முயற்சி மேன்மை. | பி.ப 2 மணி |
| வியாழன்- | வீண்குறை கேட்டல், அந்நியர் எதிர்ப்பு. | காலை 7 மணி |
| வெள்ளி- | தூரஇடப் பயணம், செலவு மிகுதி. | பி.ப 1 மணி |
| சனி- | மனக்கவலை நீங்கும், உயர்ந்த நட்பு. | பி.ப 4 மணி |

அதிஷ்டநாள்-திங்கள், அதிஷ்ட இலக்கம் -4

### சிம்மம்: சுப நேரம்

(மகம், பூரம், உத்தரத்து முதற்கால்)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | செய்தொழில் மேன்மை, உயர்ச்சி. | காலை 9 மணி |
| திங்கள்- | பணத் தடை, செலவு மிகுதி. | பகல் 11 மணி |
| செவ்வாய்- | அந்நியர் எதிர்ப்பு, கௌரவக் குறைவு. | பகல் 12 மணி |
| புதன்- | மனக் கஷ்டம், கடன் பயம். | காலை 7 மணி |
| வியாழன்- | வீண் மனஸ்தாபம், துயர் அதிகம். | பி.ப 2 மணி |
| வெள்ளி- | கடன் தொல்லை, காரியத்தடை. | பி.ப 1 மணி |
| சனி- | மறைமுக எதிர்ப்பு, குடும்பக் கஷ்டம். | காலை 6 மணி |

அதிஷ்டநாள்-செவ்வாய், அதிஷ்ட இலக்கம்- 9

### தனு: சுப நேரம்

(மூலம், பூராடம், உத்தராடத்து முதற்கால்)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | பெரியோர் நட்பு, முயற்சி பலிதம். | பி.ப 2 மணி |
| திங்கள்- | துயர் அதிகம், செலவு மிகுதி. | பி.ப 1 மணி |
| செவ்வாய்- | தனலாபம், கௌரவம். | காலை 9 மணி |
| புதன்- | அந்நியர் சகவாசம், மனமகிழ்ச்சி. | பி.ப 2 மணி |
| வியாழன்- | வீண் விரயம், பணத்தட்டுப்பாடு. | பகல் 11 மணி |
| வெள்ளி- | உறவினர் உதவி, மனக் கவலை. | காலை 7 மணி |
| சனி- | பணவரவு, காரியசித்தி. | பகல் 12 மணி |

அதிஷ்டநாள்-புதன், அதிஷ்ட இலக்கம் -2

### விருட்சிகம்: சுப நேரம்

(விசாகத்து நாலாங்கால், அனுஷம், கேட்டை)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | உயர்ந்த எண்ணம், மன மகிழ்ச்சி. | பி.ப 3 மணி |
| திங்கள்- | மனப் போராட்டம், செலவு மிகுதி. | காலை 9 மணி |
| செவ்வாய்- | பெரியோர் நட்பு, இராஜ நன்மை. | பகல் 12 மணி |
| புதன்- | மறைமுக எதிர்ப்பு, பகைவரால் தொல்லை. | பி.ப 1 மணி |
| வியாழன்- | புதிய முயற்சி, வீண் செலவு. | காலை 9 மணி |
| வெள்ளி- | வீண் குறை கேட்டல், மனச் சஞ்சலம். | பகல் 11 மணி |
| சனி- | குடும்ப சுகம், ஆடம்பரச் செலவு. | காலை 6 மணி |

அதிஷ்டநாள்-வெள்ளி, அதிஷ்ட இலக்கம்-3

### துலாம்: சுப நேரம்

(சித்திரையின் பின்னரை, சுவாதி, விசாகத்து முன் முக்கால்)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | உறவினர் உதவி, மனக்குறை நீங்கும். | காலை 8 மணி |
| திங்கள்- | தூர இடப் பயணம், செலவு மிகுதி. | பகல் 12 மணி |
| செவ்வாய்- | சுபகாரியத்தடை, மனச் சஞ்சலம். | காலை 9 மணி |
| புதன்- | பயனற்ற செயல், தேகசுகம் பாதிப்பு. | பகல் 12 மணி |
| வியாழன்- | மறைமுக எதிர்ப்பு, முயற்சி மிகுதி. | காலை 7 மணி |
| வெள்ளி- | அந்நியர் உதவி, மன நிம்மதி. | பி.ப 1 மணி |
| சனி- | செலவு மிகுதி, கடன் பயம். | பி.ப 2 மணி |

அதிஷ்டநாள்-புதன், அதிஷ்ட இலக்கம்- 5

### கன்னி: சுப நேரம்

(உத்தரத்துப் பின்முக்கால், அத்தம், சித்திரையின் முன்னரை)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | தனலாபம், குடும்ப மகிழ்ச்சி. | பி.ப 1 மணி |
| திங்கள்- | பெரியோர் நட்பு, உயர்ந்த எண்ணம். | காலை 7 மணி |
| செவ்வாய்- | தொழில் முன்னேற்றம், பணத்தடை. | பி.ப 2 மணி |
| புதன்- | பொருள் விரயம், மனக் கவலை. | காலை 9 மணி |
| வியாழன்- | பயனற்ற செயல், நிலைப்பிரிவு. | பகல் 12 மணி |
| வெள்ளி- | குடும்பக் கலகம், கௌரவக் குறைவு. | காலை 9 மணி |
| சனி- | செய்தொழில் நட்டம், செலவு. | பகல் 12 மணி |

அதிஷ்டநாள்-திங்கள், அதிஷ்ட இலக்கம்- 4

www.padippakam.com நன்றி - நூலகத்திட்டம்



# மருத்துவ விந்தைகள்

## மருத்துவ உலகில் வியப்பு

## அதிசயக் குழந்தை



"நிறைமாதத்தில், அதுவும் சுகப் பிரசவத்தில் 2 தலை, 3கை, கால்களுடன் பிறந்த அதிசயக் குழந்தை மருத்துவ உலகின் ஆச்சரியம்," என்று டாக்டர், சி.மோகன் ரெட்டி கூறினார்.

சென்னை வில்லிவாக்கத்தில் உள்ள மோகன் மருத்துவமனையில் கடந்த மாதம் 22ம் திகதி மாலையில் ஏழைப்பெண் ஒருவர் ஒரு அதிசயக் குழந்தையைப் பெற்றெடுத்தார். 2 தலை, 3 கால், 3 கை கொண்ட இந்த அதிசயப் பெண்குழந்தை சுகப் பிரசவமாகப் பிறந்துள்ளது.

தமிழ் நாட்டிலுள்ள அம்பத்தூர் கிராமத்தைச் சேர்ந்த 25 வயதான சாந்தி செல்வராஜ், தனது மூன்றாவது பிரசவத்திற்காக கடந்த மாதம் 22ம் திகதி மாலை 5 மணிக்கு ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டார். பிரசவ வலியோடும், ஆபத்தான நிலையிலும் வந்த அப்பெண்ணை தீவிர சிகிச்சை மூலம் காப்பாற்றியுள்ளனர்.

இந்த அதிசயக் குழந்தையின் பிரசவம் குறித்து டாக்டர் சி.மோகன் ரெட்டி கூறியதாவது;

மாலை 5 மணியளவில்தான் அந்தப் பெண்ணை அழைத்து வந்தனர். அதுவும் ஒட்டோவில் வரும்போதே அவருக்கு பிரசவ வலி. துடித்தார். நீர்க்குடம் உடைந்து இருகால்கள் வெளியே வந்து விட்டன. ஆபத்தான நிலை, வேகமாகச் செயற்பட்டோம். காலை இழுத்தால் உடல்வர மறுத்தது. கை குறுக்கே கிடக்கிறது என்றெண்ணி தேடினோம். பாதுகாப்பாக மீண்டும் இழுத்தோம். வெளியே வந்தது கை அல்ல கால். மூன்றாவது கால். அதிர்ந்துவிட்டோம். ஆனால் தாமதிக்கவில்லை. கைகளை வெளியே எடுத்து விட்டால், தலைதான் பாக்கி, பிரசவம் எளிது என நினைத்தோம். இரு கைகளைத் தேடி வெளியே இழுத்தபோது, மீண்டும் உடல்வர மறுத்தது. அப்போது மூன்றாவது கை இருப்பது தெரிந்தது. அதை மிகவும் எச்சரிக்கையோடு வெளியே இழுத்தோம். கழுத்துவரை குழந்தை வெளியே வந்துவிட்டது. தலையைத் தேடினோம். இரு தலை இருப்பது தெரிந்தது. உடனே குழந்தையைச் சரித்து ஒவ்வொரு தலையாக வெளியே இழுத்தோம். ஒப்பரேஷன் இல்லாமல், ஆயுதம் போடாமல் பத்திரமாகப் பிரசவம் பார்த்தோம். ஆனால் குழந்தை இறந்து பிறந்தது.

பிறப்பதற்கு ஓரிரு மணி நேரம் முன்புதான் குழந்தை இறந்திருக்க வேண்டும். 2 மணி நேரம் முன்னதாக வந்திருந்தால் குழந்தையின் உயிரைக் காப்பாற்ற முயற்சித்திருப்போம்.

குழந்தைக்கு 2 தலை, 3 கால், 3 கை இருந்தாலும் ஒரே உடல் கொண்டது. கைகளில் கூடுதல் விரல்கள் இருந்தன. குழந்தை மிகவும் ஆரோக்கியமான நிலையில் இருந்திக்கிறது. எடை 5.5 கிலோ. சிவப்பு நிறம்.

வழக்கமாக இதுபோன்ற அதிசயக் குழந்தைகள் குறைப் பிரசவத்தில்தான் பிறக்கும். அதுவும் ஒப்பரேஷன் மூலம்தான். இந்தக் குழந்தை மட்டும் நிறை மாதத்தில், சுகப் பிரசவத்தில் பிறந்து மருத்துவ உலகிற்கு ஆச்சரியத்தை ஏற்படுத்தியுள்ளது.

நெருங்கிய உறவுக்குள் திருமணம், இதுபோன்ற குழந்தை பிறப்புக்கு ஒரு காரணம்.

இவ்வாறு டாக்டர் மோகன் ரெட்டி கூறினார்.

குழந்தையின் தாய் சாந்தி கூறியதாவது-

"எனக்கும் மாமன் மகன் செல்வராஜுக்கும் 8 ஆண்டுக்கு முன் திருமணம் நடந்தது. இது மூன்றாவது குழந்தை. முதல் குழந்தை தீபா (வயது 4) இரண்டாவது வினோத்குமார் (வயது 2). முதல் இரு குழந்தைகளுக்கு எந்தப் பிரச்சனையும் கிடையாது. இந்தக் குழந்தைக்குத்தான் வயிறு மிகப் பெரியதாக இருந்தது. இரட்டைக் குழந்தையாகக்கூட இருக்கும்" என்று சிலர் கூறினர்.

இவ்வாறு சாந்தி கூறினார்.

இந்த அதிசயக் குழந்தை இரசாயன திரவத்தில் பாதுகாப்பாக வைக்கப்பட்டுள்ளது.

---

மிக உபயோகமான அட்வைஸ்

## தம்பதிகள் மகிழ்ந்திருக்க தகுந்த பயிற்சி



வாழ்க்கையில் கணவன் மனைவியருக்கிடையில் உறவு நிலைத்திருக்க அவர்களுக்கிடையில் பலதரப்பட்ட அம்சங்களிலும் புரிந்துணர்வு மிகமிக அவசியமாகும். இவற்றில் மிகவும் பிரதானமானது பாலியல் தொடர்பாகும். இத்துறையில் கணவன் மனைவியருக்கிடையில் திருப்தியான நிலை இல்லையானால் வேறு எந்த அம்சத்திலும் பூரண நிறைவு ஏற்படப் போவதில்லை. பெரும்பாலான குடும்பங்கள் சீர்குலைந்து சின்னாபின்னப்பட்டுப் போவதற்கும் அடிப்படைக் காரணம் இதுவே என்பதை நமது மூதாதையரும் உணர்ந்துள்ளனர்.

ஆணும் பெண்ணும் பாலியல் ரீதியாக நிறைவு கண்டால் வேறு எந்தக் குறைபாடும் அவர்களை இலகுவில் பாதிக்கப்போவதில்லை. ஒருவரை ஒருவர் புரிந்து-மனம் ஒன்றுபட்டு காதல் வசப்பட்டு-இருதிறத்தாருடைய பெற்றாரின் பூரண சம்மதத்தைப் பெற்று சகல சம்பத்துடன் திருமணம் முடித்து வாழ்க்கையைத் தொடங்கும் தம்பதியினர்கூட சில நாட்களிலேயே நாயும் பூனையும்போல் சண்டை போட்டு மன முறிவையும் மண முறிவையும் கண்டு பிரிந்துவிட நேரிடுகிறது.

இதற்கு பிரதான காரணமாக அமைவது இவர்கள் இவருக்குமிடையில் பாலியல் ரீதியான திருப்தியின்மையே என்று உளவியல் துறை நிபுணர்கள் கூறுகின்றனர்.

இருவரில் ஒருவருக்கு திருப்தியின்மை-கூடல் குறுகிய நேரத்தில் முடிந்துபோதல் என்பனவும் கவனத்திற்குரியவையே. ஆனால் இவை உளக்கட்டுப்பாடு மற்றும் சில பயிற்சி முறைகளால் பரிகாரம் காணக்கூடிய விசயங்களாகும்.

உளக் கட்டுப்பாட்டினால் உரிய பலன் பெறலாம் என்பது உண்மைதான். இருப்பினும் உள்ளத்தைக் கட்டுப்படுத்தும் ஆற்றல் எல்லாரிடமும் இல்லை.

ஆகவே பண்டைக்காலத்தில் கைக் கொள்ளப்பட்டுவந்த எளிய பயிற்சி முறை நிச்சயமான பலனளிக்கும் என்று உளவியல்துறை நிபுணரான டாக்டர் கந்தர் வெயில் கூறுகிறார். இவரும் இவருடைய மனைவி நிலின் மலோனும் பல்லாயிரக்கணக்கானோருக்கு இந்த எளிய முறையிலான பயிற்சியினை அளித்து வெற்றி கண்டுள்ளனர்.

'கேகல்' பயிற்சி என்பது இதற்குப் பெயர். இதனை குறிப்பிட்ட இடத்தில்-குறிப்பிட்ட காலத்தில் மட்டும்தான் செய்யவேண்டுமென்ற கட்டுப்பாடில்லை. அவகாசம் கிடைக்கும்போது, தெருவில் நடக்கும்போதோ- வண்டியில் பயணம் செய்யும் போதோ அல்லது வீட்டிலிருந்து ஏனையோருடன் உரையாடும்போதோ இப்பயிற்சியினைச் செய்யலாம்.

மூலாதாரத்துக்கும் சிறுநீர்க்குழாய்க்குமிடையில் 'பியூபோகொகிஜீல்' என்ற தசைநார் மண்டலம் ஒன்றுள்ளது. இதனுடைய இயக்கத்தினை பொதுவாக சகலரும் அறிந்திருப்பார்கள். மிகச் சங்கடமான சூழ்நிலையில் சிறுநீர் வெளியேற்றம் அவசியம் என்ற அவசியம் ஏற்படும் காலகட்டத்தில், அதனை வெளியேறிவிடாமல் தடுப்பதற்கு இந்த தசை நார்தான் உதவுகிறது. மனத்தின் தூண்டுதலால் சிறுநீர் வெளியேறாமல் இத்தசை கட்டுப்படுத்துகிறது. இந்தத் தசை நாருக்குத்தான் பயிற்சி அளிக்க வேண்டும்.

சிறுநீர் வெளியேறுவதைக் கட்டுப்படுத்துவதற்கு நீங்கள் ஒருவகை அழுத்தத்தினை இந்தச் தசைக்குக் கொடுக்கிறீர்களல்லவா? அதேபோன்ற அழுத்தத்தினை சாதாரணமாக-அடிக்கடி அந்தத் தசை மண்டலத்துக்குக் கொடுக்கப்பழகிக் கொள்ளுங்கள். ஆரம்பத்தில் முதல் நாளன்று 36 தடவை அழுத்தம் கொடுத்து தளர்த்த ஆரம்பியுங்கள். இதற்கு ஒரு நிமிடம் மட்டும் போதுமானது. காலை வேளையில் 36 தடவையும் மாலையில் 36 தடவையும் பயிற்சி பெறுங்கள். பின்னர் ஒரே நாளில் ஒரு தடவையில் 36 தரமாக பலதடவைகள் அழுத்தம் கொடுத்துத் தளர்த்துங்கள். காலையிலும் மாலையிலும் 10 நிமிடங்கள்வரை செய்யலாம். உங்கள் கட்டுப்பாடு பூரணமாகும்வரை இந்தப் பயிற்சியினை செய்து வந்தால் பூரண பலனைப் பெறலாம். உறவின் நேரத்தை அதிகரிக்க இந்தப் பயிற்சி கைகொடுக்கும்.

ஆண்கள் மட்டுமல்ல பெண்களும் இப் பயிற்சியினைச் செய்யலாம். விளம்பரங்களைநம்பி கண்டகண்ட மருந்துகளை உட்கொண்டு உடலைக் கெடுத்துவிடாமல் இந்த முறையினை கையாண்டு வாருங்கள்.

'ஆண் மரபுச் சார்புக்கு அப்பால்' (BEYOND MALE MYTH) என்ற நூலினை எழுதிய டாக்டர் பியற்றோ பின்ரோ என்பவரும் 'கேகல்' பயிற்சி பற்றி தன் நூலில் விபரித்திருக்கிறார்.

---

கிரைம் நியூஸ் கிரைம் நியூஸ்

## குற்றத்தடுப்பிலீடுபடும் முன்னாள் நடனக்காரி

## பெண்களை வதைத்தால் உதைதான்

சில ஆண்டுகளுக்குமுன்னர் நாடறிந்த நாட்டிய தாரகையாகத் திகழ்ந்த றுத் ஸ்பினேல் நியூயோர்க் நகர குற்றத் தடுப்பு அதிகாரியாகப் பதவியேற்றுள்ளார். கற்பழிப்பு, கொலை செய்ய முயற்சி மற்றும் திருட்டு போன்ற குற்றச் செயல்களுக்காகச் சிறைத் தண்டனை அனுபவித்து-நந்நடத்தைக்காக சில காலம் வெளியில் அனுப்பப்படும் கைதிகள் மீண்டும் குற்றம் புரிந்தால் அவர்களுடைய குற்றங்களை நிரூபித்து தண்டனை வாங்கித்தரும் அதிகாரம் படைத்த அலுவலராக றுத் பதவியேற்றுள்ளார்.

றுத்துக்கு 46 வயதாகிறது. 4 பிள்ளைகளின் தாய். குடும்பத்தில் கருணையுள்ளம் கொண்ட தாயாக இருந்தபோதும் குற்றவாளிகள் விடயத்தில் றுத் மிக மிகக் கண்டிப்பானவராகவே காணப்படுகிறார். பெண்களுக்கு தீங்கு விளைவிக்கும் குற்றவாளிகள்மீது றுத் எந்தவிதமான தயவு தாட்சணியமும்




காட்டமாட்டார். எப்படியும் கடும் தண்டனை வாங்கிக்கொடுத்து விடுவார்.

நியூயோர்க் நகரிலுள்ள உலகப் பிரசித்தி பெற்ற புரோட்வே அரங்கில் மேடையேறிய பல நாட்டிய நாடகங்களில் றுத் தோன்றியிருக்கிறார். ஐரோப்பாவிலுள்ள நகரங்களிலும் றுத் நடனமாடி பாராட்டுப் பெற்றுள்ளார். நியூயோர்க் நகரில் 1964–65ல் நடைபெற்ற உலகக் கண்காட்சியின்போது இடம்பெற்ற நாட்டிய நாடகங்களில் றுத் ஸ்பினேல் நல்ல புகழீட்டினார்.

றுத் குற்றத்தடுப்பு அதிகாரியாகப் பொறுப்பேற்றதிலிருந்து நியூயோர்க் நகரில் பெண்களை இம்சைப்படுத்தி இடருக்குள்ளாக்கும் குற்றங்கள் குறைந்து வருவதாகக் கூறப்படுகிறது. காரணம் "திடகாத்திரமான தேகம் கொண்ட–5 அங்குல குதியுயர்ந்த பாதணியினை அணியும் றுத்திடம் உதை வாங்குவதற்கு குற்றவாளிகள் பயந்து ஒதுங்கிவிட்டனர்" என்று ஒருவர் கூறுகிறார்.

---

கண்டுபிடி.....கண்டுபிடி



இந்த இரண்டு படங்களும் பார்வைக்கு ஒரேமாதிரி இருந்தாலும் இரண்டுக்கும் இடையே 'பத்து வித்தியாசங்கள் இருப்பதைக் காணலாம். எங்கே அவற்றைக் கண்டு பிடியுங்களேன் பார்க்கலாம். விடை வேறொரு பக்கம்.

www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்

# கொலை விழும் நேரம்

## அங்கம் 28

"என் காதுக்கு மொழியில்லை
என் நாவுக்குச் சுவையில்லை
என் நெஞ்சுக்கு நினைவில்லை
இனியென் நிழலுக்கு உறக்கமில்லை."
–கவியரசு கண்ணதாசன்–



தருவது
ரசிகன்

பத்திரிகை நிருபர் என்று தான் போட்டிருந்த வேசம் கலைந்து, தன்னை கிரைம் பிரிவு இன்ஸ்பெக்டர் என்று வினோ கண்டறிந்துவிட்டது காயத்திரிக்கு கவலை தந்தது.

வினோ வெறுத்தது தன்னை அறிந்துதானோ- அப்படியானால் ஆரம்பம் முதலே அவனோடு அறிமுகமாகி பழகிய நாளிலிருந்தே வினோ உண்மையை அறிந்துவிட்டானோ என்று யோசிக்க வைத்தது.

தன் நிலையை- அவனிடமே இதுவரை பொய் சொல்லி நடித்ததை எப்படி விளக்கிப் புரிய வைப்பது?

புரிந்துகொள்ள முயலுவானா? வெறுப்பு கண்ணை மறைக்க விளக்கம் தேவையில்லை என்றாகிவிடுமா?

உன் காதலும் பொய். உன் புன்னகையும் பொய். உன் ஒவ்வொரு வார்த்தைகளும் பொய் என்று குட்டை சொல்லி விடுவானா?

என் காதல் கலப்படமில்லாத பால் போல் வெண்மை. என் வார்த்தைகள் 'வினோ ஐ லவ் யூ' என்றது பூவில் மகரந்தம் இருப்பது மாதிரியான இனிமையான மெய் என்று நம்ப வைப்பது முடியுமா?

ஏன் மறைந்தாய்? உன் இதயத்தை நிரந்தரமாய் என்னிடம் தந்துவிட்டதாய் நீ சொன்னது மெய் என்றால், அந்த இதயத்துக்குள் பொய்யை ஏன் மறைத்து வைத்தாய்? என்று கேட்பானோ? கேட்டால்கூட பரவாயில்லையே. பதில் சொல்ல முடியும் அல்லவா?

வினோ-வா-வினோ. என் நெஞ்சின் மையத்தில் உன் காது வைத்துக் கேள் வினோ.

ஐ லவ் யூ-ஐ லவ் யூ- என்று துடிப்பிருக்குமே தவிர; உனக்குத் துரோகம் செய்ய உயிருள்ளவரை என் நெஞ்சு நினைக்குமா என்றுகேள் வினோ.

தேனீ கூடு கட்டுவது மாதிரி என் நெஞ்சுக்குள் உன்னைச் சுற்றிக் கட்டியுள்ள ஆசைக் கூட்டை சந்தேகம் என்னும் கல் எறிந்து கலைத்துவிடாதே வினோ.

விரயமாகும் தேனாய் என் வேதனை வடிய வைத்துவிடாதே வினோ.

கிரைம் இன்ஸ்பெக்டர் காயத்திரி பத்திரிகை நிருபராய் மாறியது கடமை. மாற்றியது கடமை.

காயத்திரி உன்னைக் கண்காணித்ததும் கடமை.

ஆனால் வினோ-உன்னை என் நெஞ்சுக்குள்-கண்ணுக்குள்- என் உயிருக்குள் வாங்கியது சத்தியமாய் காதல். ஒரு குண்டூசி முனையளவுகூட சேதமில்லாத காதல். என்றெல்லாம் உணர்வு சொல்லலாம்.

ஆனால் அவன் கேட்கவேண்டுமே. ஆனால் அவனுக்குப் பொறுமை வேண்டுமே? ஆனால் அவனுக்கு...

யோசிக்க யோசிக்க ஆற்றாமையாக இருந்தது. நா வறண்டு போனது.

'வினோ உனக்கு எப்படி புரிய வைப்பது' என்பதுதான் அவள் இறுதியாக கேட்ட கேள்வி.

"நான் புரிய வைக்கிறேன்" என்று வினோவின் தங்கை இந்திரா உள்ளே சமையலறையில் இருந்து வந்தது, காயத்திரியின் சோர்வை முகத்தில் அறிந்து உள்ளே போய் தண்ணீர் எடுத்துவந்தது யாவுமே காயத்திரிக்கு மங்கலாய், கனவு போல தெரிந்தன.

"காயத்திரி இந்தா தண்ணீர்"

இந்திரா தோளில் தட்டி நீட்டினாள்.

கண்களால் நன்றி சொல்லி வாங்கி வாயில் ஊற்ற சற்றுத் தெம்பு ஏற்பட்டது.

கதிரையில் நிமிர்ந்து அமர முடிந்தது. வினோ தன்னையே கவனித்துக்கொண்டிருப்பதை அவன் கண்களை நேராகச் சந்தித்து அறிய முடிந்தது.

அவன் பார்வையில் தெரிவது அனுதாபமும் அல்ல. ஆத்திரமும் அல்ல. இரண்டுக்கும் இடைப்பட்ட ஒன்று. இரண்டும் பாதி பாதி கலந்த உணர்ச்சியோ என்று காயத்திரி நினைத்தாள்.

இப்போது வினோ இந்திராவைப் பார்த்தான்.

"எதைப் புரியவைக்கப் போகிறாய் இந்திரா?"

என்று கேட்டான்.

காயத்திரிக்கு தண்ணீர் கொடுத்த கிளாஸை ரீப்போவில் வைத்துவிட்டு நிமிர்ந்து வினோவைப் பார்த்துவிட்டு திரும்பி காயத்திரியைப் பார்த்தாள் இந்திரா. காயத்திரி முகத்தில் எந்த உணர்ச்சியும் இல்லாமல் இந்திராவை- இந்திரா என்ன சொல்லப்போகிறாள் என்று பார்த்துக் கொண்டிருந்தாள்.

காயத்திரியின் முகத்தில் இருந்து தன் விழிகளை வாங்காமல்,

"அண்ணா காயத்திரிக்கு என் கதையில் பாதி தெரியும். என் கதையின் முக்கிய கட்டங்களை அறிய டி.ஐ.ஜி.டென்சில் அனுப்பியதால், இதில் உன் பாத்திரம் என்ன? கோபக்கார அண்ணன் சினிமாவில் செய்வது மாதிரி நீயும் ஏதாவது செய்திருக்கலாமோ என்று துருவத்தான் உன்னோடு தொடர்பு கொண்டாள். என்ன காயத்திரி நான் சொல்வதில் ஏதாவது பிழை இருக்கிறதா?"

கேலியாய் தொனித்தது இந்திராவின் கேள்வி.

இப்போதும் காயத்திரி முகத்தில் உணர்ச்சியே காட்டாமல் இந்திராவைப் பார்த்துக்கொண்டிருந்தாள்.

"என்ன காயத்திரி பதில் சொல்ல மாட்டாயா?"

வினோதான் கேட்டான். அவன் கேட்க, அதற்கும் இந்திராவே முந்திக்கொண்டு பதில் சொன்னாள்;

"எப்படியண்ணா பேச முடியும்? கையும்-களவுமாக மாட்டிக்கொண்டதால் பேச்சின் மூச்சு நின்றுவிட்டது."

இந்திரா சீண்ட காயத்திரி மென்மையாகப் புன்னகைத்தாள். மெல்ல உதடு திறந்தாள்.

"அண்ணனும் தங்கையும் குற்றப் பத்திரம் தயாரிப்பதில் ஏட்டிக்குப் போட்டியாக இருக்கிறீர்கள்."

"நீ அண்ணாவுடன் நெருங்கியதுகூட எங்கள்மீது குற்றப்பத்திரம் தயாரிக்க ஆதாரம் தேடித்தானே காயத்திரி?"

இந்திரா கோபப்பட்டுப் பேசினாள்.

"நீதிபதிகூட ஒரு பக்க நியாயத்தை மட்டும் கேட்டு தீர்ப்புச் சொல்வதில்லை இந்திரா."

"ஆனால் நீதிபதிகூட மனச்சாட்சியை விட, சாட்சியங்களுக்கு மட்டும் மதிப்புக் கொடுக்கும் சந்தர்ப்பங்களும் ஏற்படுவதுண்டு காயத்திரி."

"சோ-எனக்கெதிரான சந்தர்ப்ப சாட்சியங்களை வைத்து நான் ஒரு துரோகி, என் உணர்வுகள் யாவும் போலி என்று தீர்ப்புச் சொல்லப் போகிறாயா நீ?"

இருவரதும் விவாதத்தின் இடையே புகுந்தான் வினோ.

"எதற்கு விரயவாதம்? காயத்திரி நீ சொல். உனக்கு என்ன வேண்டும்? என்ன தெரிய வேண்டும்? ஏன் என்னை சுற்றி வளைத்து வருகிறாய்? ஏன் காதல்-கத்தரிக்காய் என்று கதை சொல்லி வாழைப்பழத்தில் ஊசி ஏற்றிப் பார்க்கலாம் என்று நினைக்கிறாய்?

நேரே வா- நேரடியாய் கேள். நோ லவ். டோண்ட் ரைம் வேஸ்ட். வா. கேள் நேரடியாக."

ஆவேசமாக நீளமாகப் பேசி முடித்தான்.

காயத்திரி அவனை ஆழமாக ஒரு தடவை பார்த்துக்கொண்டாள்.

தன் இருக்கைவிட்டு எழுந்தாள். அவள் எழுந்த விதம் இந்திராவுக்கு பயமூட்டியது.

□□

நிர்மலாவை நேராக தன் வீட்டிற்கு அழைத்துச் சென்றார் குலாம்ஷா.

குலாம்ஷா வீட்டின் முன் ஹோலில் மதுமிதா வழக்கில் இறந்துபோன ரம்யா கண்ணாடி பிரேமுக்குள் இருந்து அழகாகச் சிரித்தாள்.

யார் அது என்பதாய் நிர்மலா குலாம்ஷாவைப் பார்க்க,

"ரம்யா."

என்று மட்டும் சொல்லிவிட்டு ஒரு நிமிசம் மௌனமாய் ரம்யாவை நினைத்து விட்டு,

"சற்று நேரம் ஓய்வெடுத்துக்கொள் நிர்மலா."

வலதுபுற அறையைக் காட்டினார்.

"வேண்டாம். நான் இப்போது வீட்டிற்குப் போகவேண்டும்."

குலாம்ஷா நிதானமாய் கேட்டார்.

"யாரைக் கொல்வதற்கு?"

சட்டென்று திகைத்து, நிமிர்ந்து விழிகள் விரித்து, இமைகள் படபடக்க, "என்ன சொல்கிறீர்கள் இன்ஸ்பெக்டர்?"

குலாம்ஷா அவளின் பதட்டம் இரசித்துக்கொண்டு,

"வீட்டில் யார் இருக்கிறார்கள் உனக்கு? இப்போது போனால் வெறுமை தெரியும். சோகம் முட்டும். உன் உயிரை நீயே வதைத்து கொல்லப் போகிறாயா என்று கேட்டேன்."

சொல்லி, அவள் முகபாவம் கவனித்து, மேலும் தொடர்ந்து,

"பொலிஸ் உன்னிடமும் நிறைய விசாரிக்க வேண்டியிருக்கிறது நிர்மலா. உண்மையைச் சொல்வதனால் நீ இப்போது பொலிஸ் காவலில்தான் இருக்க வேண்டியவள். என் பொறுப்பில் நான் உன்னை அழைத்து வந்திருக்கிறேன். பிளீஸ் நிலமையைப் புரிந்துகொள் நிர்மலா."

நிர்மலாவுக்கு கண்கள் கலங்கிவிட்டன. கலங்கிய விழிகளோடு அவரைப் பார்த்து,

"கௌரவமான சிறையில் என்னை வைத்திருக்கிறீர்கள்?"

"ஏறக்குறைய உண்மை."

உடனே கேட்டாள்,

"என்னில் ஏன் உங்களுக்கு அக்கறை மிஸ்டர் குலாம்ஷா?"

"குற்றவாளிகள் வெளியே இருந்து விரல் சொடுக்கு எடுத்து சோம்பல் முறித்துக் கொண்டிருக்க, நிரபராதிகள் கம்பி எண்ணக் கூடாது. கழுத்தைக் கொடுக்கக்கூடாது என்ற அக்கறை."

"ஓ.கே.தனிப்பட்ட ரீதியில் என்னில் அல்ல."

"யெஸ். அக்கறைதான் என்று சொன்னால் உனக்குச் சந்தோசம் வருமா நிர்மலா?"

"வரும்."

"ஏன்?"

"என்னில் அக்கறைப்படுவதற்கு, என்னை நம்புவதற்கு, என்னைப் புரிந்து கொள்வதற்கு உலகில் ஒரு ஜீவன் இருக்கிறதே என்ற சந்தோசம்."

குலாம்ஷா அனுதாபமாக அவளைப் பார்த்தார்.

"புரிகிறது."

"என்ன?"

"உன் சோகம். உன் தனிமை. அதனால் உன் ஏக்கம். உனக்கு ஏற்பட்டுள்ள மனத் தாக்கம்."

உதடு கடித்துக்கொண்டு மேலும் கீழும் பலமாக தலையாட்டிக்கொண்டு உள்ளே வெம்பினாள் நிர்மலா.

"இ....இன்ஸ்பெக்டர்.."

சொல்லு நிர்மலா?"

"என்னில் நீங்களும் சந்தேகப்படுகிறீர்களா?"

"இந்தக் கேள்விக்கு உடனே பதில் அவசியம்தானா நிர்மலா?"

"பொய் சொல்லப் பிரியப்படவில்லையா?"

"அப்படித்தான் என்று வைத்துக் கொள்ளேன்."

"சோ...என்னில் சந்தேகம் இருக்கிறது உங்களுக்கும்?"

"பொலிஸ் புத்தி அது. தவிர..."

இடையிலே புகுந்து தடுத்து,

"ஓ.கே.ஓ.கே வேறு சமாதானம் எதுவும் வேண்டாம் இன்ஸ்பெக்டர். நான் பொலிஸ் நிலையத்திலேயே இருக்கத் தயார். இங்கு வேண்டாம்."

இப்போது குலாம்ஷா முன்னர் நிர்மலா கேட்டது போலவே,

"என்னில் நீ சந்தேகப்படுகிறாயா நிர்மலா? தனித்து இருப்பது பாதுகாப்பில்லை அத்துமீறல் நடக்கலாம் என்று பயப்படுகிறாயோ நிர்மலா."

நிர்மலா வறட்சியாகப் புன்னகைத்தாள்.

"பயப்படும் அளவுக்கு இழக்க என்னிடம் என்ன இருக்கிறது இன்ஸ்பெக்டர்?"

குலாம்ஷா உள்ளே கலங்கிப் போனார். இவள் நிறைய காயப்பட்டிருக்கிறாள். அந்தக் காயத்தின் வலியால் கஷ்டப்பட்டுக்கொண்டிருக்கிறாள். காயத்தை கிளறுவது கொடுமை.

"நிர்மலா உன் முடிவுகள் தவறு. உணர்ச்சி வேகத்தில் யோசிப்பது தவறான இடத்திற்கே கொண்டு சென்று நிறுத்தும். கடமை நிமித்தம் உன்னை மட்டுமல்ல எவரையும் சந்தேகிக்க வேண்டி வரலாம். ஆனால் உன்னை நான் நம்புகிறேன். நீ இங்கேயே தங்கலாம். நான் வெளியே செல்ல வேண்டும். வந்து பேசிக்கொள்ளலாம் என்ன?"

உன்னை நம்புகிறேன் என்று அவர் சொன்னதில் சோகத்திலும் மகிழ்ந்தாள் நிர்மலா.

"எனக்கு காவல் யார்?"

"நீதான்- நீயேதான். நான் யாரையும் சுலபமாக நம்புவதில்லை நிர்மலா. நம்பினால் என் கணிப்பு பொய்யாவது அரிது நிர்மலா."

மனந்திறந்து புன்னகைத்தார்.

"தனியே இருக்கப் பயப்படுகிறாயா நிர்மலா?"

"பயம்தான்."

"இங்கே யார் வரப் போகிறார்கள்?"

"காட்டில் இருக்கிறோம் நாங்கள். இங்கே மிருகங்கள் இருப்பது, எங்கும் இருப்பது சர்வசாதாரணம் இன்ஸ்பெக்டர்."

விரக்தியோடு பேசினாள். அவள் விரக்தி புரிந்தது. ஆதரவான குரலில் சொன்னார்,

"காட்டுக்குள்ளும் மனிதர்கள் செல்வதுண்டு நிர்மலா. காட்டுக்குள்ளும் மிருகங்கள் வரமுடியாத பாதுகாப்பை நாம் அமைத்துக் கொள்ள முடியும் அல்லவா. அப்படித்தான் இந்த இடமும். பயப்படாதே நிர்மலா."

குலாம்ஷா புறப்பட்டார்.

நிர்மலா வந்து கதவு சாத்தி உள்ளே தாழ் போட்டாள்.

வெளியே குலாம்ஷாவின் கார் புறப்பட்டுச் செல்லும் சத்தம் கேட்டது.

"குலாம்ஷா போய்விட்டாரா நிர்மலா?"

பின்புறம் இருந்து கேட்டது பெண்குரல்.

அதிர்ந்து திரும்பினாள் நிர்மலா.

□□

ஐ.ஜி. அலுவலகத்தில் அவரும் டி.ஐ.ஜி.டென்சிலும் குலாம்ஷாவுக்காக காத்திருந்தனர்.

குலாம்ஷா வந்து சல்யூட் வழங்கி விட்டு, தாமதத்திற்கு மன்னிப்பு கேட்டு விட்டு, ஐ.ஜி அமருமாறு சைகைகாட்ட டி.ஐ.ஜி. டென்சிலுக்கு அருகில் ஐ.ஜியின் எதிரே அமர்ந்தார்.

ஐ.ஜி. தொண்டையைக் கனைத்துக் கொண்டு பேச ஆரம்பித்தார்.

"இரு பாதைகளில் எமது விசாரணை போய்க்கொண்டிருக்கிறது. சகல சாலைகளும் ரோமாபுரிக்கே என்பது மாதிரி இரு பாதைகளும் குற்றவாளிகளின் கோட்டையைப் பிடிக்கத்தான்."

டி.ஐ.ஜி.டென்சில் மெல்லிய புன்னகை செய்ய, குலாம்ஷா ஐ.ஜி சொல்வதை தீவிரமாய் கேட்டுக் கொண்டிருந்தார்.

ஐ.ஜி தொடர்ந்தார்.

"குலாம்ஷா குற்றவாளிகளின் கோட்டையில் பாதியைத்தான் பிடித்திருக்கிறார். அது மட்டுமல்ல மிக முக்கிய குற்றவாளி இன்னும் மாட்டவில்லை. பத்திரிகைகள் சிரிக்கின்றன. எம்மைப் பார்த்து பொதுமக்கள் சிரிக்கவும் வைக்கின்றன. எனவே உடனே பிடித்தாக வேண்டும்."

குலாம்ஷா மெல்லத் தலையை இடதுபுறம் திருப்பி டி.ஐ.ஜி. டென்சிலைக் கவனித்தார்.

ஐ.ஜி.தன் தடித்த உதடுகள்மீது இருந்த தடித்த மீசை சற்று அசையச் சிரித்து,

"என்ன மிஸ்டர் குலாம்ஷா அவரை ஏன் பார்க்கிறீர்கள்? இருவருக்குமே அந்தப் பொறுப்புத்தான் தரப்பட்டுள்ளது."

"யெஸ் சேர்."

"டி.ஐ.ஜி.டென்சில் வசம் ஒரு கசட் இருக்கிறது. நீங்கள் வரும்போது அதைத்தான் கேட்டுக்கொண்டிருந்தேன். எனக்கு ஒரு சந்தேகம் வந்திருக்கிறது."

இருவருமே ஆர்வமாகி ஒரே குரலில்,

"என்ன சந்தேகம் சேர்?"


ஐ.ஜி. இருவரையும் பார்த்து மீசைக்குள் புன்னகைத்தார்.

(தொடர்ந்து வரும்)


## பேனா நண்பர் அரங்கம்



பெயர்: கா. சுசீந்திரன்
வயது: 18
முகவரி: B-2, அரச விடுதி, சரவணா வீதி, கல்லடி.
பொழுதுபோக்கு: பத்திரிகை, நாவல்கள் வாசித்தல், இசையை இரசித்தல்.




பெயர்: எம். ரிஸா
வயது: 22
முகவரி: 02, பஸ் நிலையம், அவிசாவளை.
பொழுதுபோக்கு: பத்திரிகை, தொலைக்காட்சி, கிரிக்கெட் விளையாடுதல்.




பெயர்: சி. ரோகினி
வயது: 17
முகவரி: குறுமண்வெளி-11, களுவாஞ்சிக்குடி.
பொழுதுபோக்கு: பத்திரிகை, கதைப்புத்தகம், வானொலி.



பெயர்: ஏ.றியாசா
வயது: 20
முகவரி: 13, பாடசாலை வீதி, குளியாப்பிட்டிய, எதுன்காஹகொட்டுவ.
பொழுதுபோக்கு: வழமையான பொழுதுபோக்குகள்.



பெயர்: எஸ்.குகதாசன்
வயது: 26
முகவரி: 96. HUNTINGTON AVE, SCARBOROUGH, ONTARIO, M1K 4L5, CANADA.
பொழுதுபோக்கு: சினிமா பார்த்தல், புத்தகம் வாசித்தல்.



பெயர்: எம்.றோஷென் அலி
வயது: 21
முகவரி: P.O.BOX-46917 FAHAHEEL 64020, KUWAIT.
பொ.போக்கு: வழமையான பொழுதுபோக்குகள்.

பெயர்: எஸ். சந்தனராஜ்
வயது: 19
முகவரி: காஹால்ல எஸ்டேட், அப்புத்தளை.
பொ.போக்கு: வழமையான பொழுதுபோக்குகள்.

பெயர்: முகமட் ரெலீன்
வயது: 17
முகவரி: 42/14, பெனிதுடுமுல்ல, நாவலப்பிட்டிய.
பொ.போக்கு: கிரிக்கெட் விளையாடுதல், புத்தகம் வாசித்தல்.

பெயர்: யோகநாதன்
முகவரி: RAFH N660, P.O.BOX-7897, RIYADH 11159, K.S.A.
பொ.போ: நண்பர் தொடர்பு, பத்திரிகை, புத்தகம்.

பெயர்: எம்.இக்ரம்
வயது: 24
முகவரி: 66, ஸாவியா வீதி, மஹகொடை, பேருவளை.
பொ.போ: உதைபந்து விளையாடுதல், நண்பர்கள் தொடர்பு.

பெயர்: எம்.ஜோன் கிறிஸ்டோபர்
வயது: 24
முகவரி: 263, செட்டியார் வீதி, கொழும்பு-11.
பொ.போ: பத்திரிகை, தொலைக்காட்சி, பேனா நட்பு.

பெயர்: எம். இல்யாஸ்
வயது: 22
முகவரி: 165, ஒஸ்மன் வீதி, சாய்ந்தமருது.
பொழுதுபோக்கு: பேனா நட்பு, முத்திரை சேகரித்தல், பத்திரிகை.

சிறுகதை

# அவளுக்கென்று ஒரு மனம்

கவிப்பிரியா நிஷா
வெல்லம்பிட்டிய

"இதுக்குத்தான் படிச்சி படிச்சி சொன்னேன்- பொம்பள பிள்ளைக்கு படிப்பு வேணாம்னு. கேட்டா தானே?"

"ராஜம். இப்போ என்ன நடந்திடுச்சின்னு இப்படிக் கத்துறே?"

"இதற்குமேல இன்னும் என்னங்க நடக்கணும்? எங்க குடும்பம் மானம் மரியாதையோட வாழ்ந்துக்கிட்டிருக்கிற குடும்பம். அப்படிப்பட்ட குடும்பத்துக்கு இவளால ஒரு கெட்ட பேர் வந்திச்சின்னா அது எவ்வளவோ பெரிய அவமானம்."

"நீ சொல்றது எனக்குப் புரியுது ராஜம். அதுக்காக இப்படிக் கத்தி ஊரைக் கூட்டணுமா என்ன?"

"அது சரி, உங்களுக்கென்ன நீங்க ஆம்பள. அதனால மௌனமா இருந்திடுவீங்க, ஆனா நான் பொம்பளையாச்சே அதான் என்னோட வயிற்றெரிச்சலை கத்திப் போக்கிக்கிறேன்."

"சரி சத்தம் போடாதே. பக்கத்து வீடுகளுக்கு தெரிஞ்சா நமக்கும் சேர்த்துத்தான் அவமானம்."

"ஆமா, நம்ம துர்காவுக்கு அந்த லெட்டரை யாரு எழுதி இருப்பான்னு நீங்க நெனைக்கிறீங்க?"

"வேறயாரு எழுதி இருப்பா? அவகூட படிக்கிற பையன்களில ஒருத்தன்தான் எழுதி இருக்கணும்."

"அவன் ஆம்பள எழுதத்தான் செய்வான். அதுக்காக இவ அந்த லெட்டரை வாங்கிக்கிட்டு வரணுமா என்ன?"

"அவதான் அந்த லெட்டரைப்பற்றி தனக்கு எதுவுமே தெரியாதுன்னு சொல்றாயில்ல?"

"அப்போ அந்த லெட்டர் எப்படி இவ புத்தகத்துக்குள்ள வந்திச்சி?"

"அதான் எனக்கும் புரியல. சரி நடந்தது என்னவோ நடந்திடுச்சி. அதுக்காக அவளை திட்டிக்கிட்டு இருக்காதே. நான் வெளியில போயிட்டு வர்றேன்."

அவர் வெளியில் போய்விட்டார்.

"அஞ்சாவது படிச்சதோடயே உன்னை ஸ்கூல்ல இருந்து நிறுத்தி இருக்கணும். உன் அப்பா பேச்சைக் கேட்டு உன்னை தொடர்ந்தும் படிக்க வைச்சது எவ்வளவோ பெரிய தப்புன்னு இப்போதான் புரியுது."

"நீங்க நெனைக்கிற மாதிரி நான் தப்பு பண்ணலம்மா"

"அப்படின்னா அந்த லெட்டர் எப்படி உன் புத்தகத்துக்குள்ள..?"

"சத்தியமா அந்த லெட்டரைப்பற்றி எனக்கு எதுவுமே தெரியாது."

அவள் அழுதாள்.

"இந்தக் காலத்துப் பிள்ளைகளைப் பற்றி எனக்கு தெரியாதாக்கும். நீ என்னோட மகதான். என்றாலும் இந்த விஷயத்தில உன்னை நான் நம்ப மாட்டேன்."

"அம்மா!"

"இந்தா பாரு துர்கா, இனிமே நீ ஸ்கூல் போக வேணாம்."

"அ..ம்..மா."

"நான் சொன்னா சொன்னதுதான். நீ படிச்சது போதும். இனி ஸ்கூல் போக வேணாம். வீட்ல இரு."

பக்கத்து வீட்டில் நடந்த இந்த உரையாடல் என் செவிகளுக்கும் கேட்கவே செய்தது. ராஜம் ஆன்டி என்றுமில்லாதவாறு இன்று சத்தம் போட்டு பேசுவதற்கான காரணம் என்ன என்பதும் எனக்குப் புரிந்தது. ராஜம் ஆன்டியின் மகள் துர்கா பாடசாலையில் கல்வி கற்கும் மாணவி. அவளுடன் கல்வி கற்கும் சக மாணவன் ஒருவன் தன் எண்ணத்தை எழுத்தாக்கி ஏட்டினிலே பதிவாக்கி அவளுக்குத் தெரியாமல் அதை அவளது பாடப் புத்தகத்துக்குள் வைத்துள்ளான். அந்த லெட்டர் யதேச்சையாக ராஜம் ஆன்டியின் கையில் அகப்பட அதன் விளைவு அவர்கள் வீட்டில் ஒரு பூகம்பமே வெடித்துவிட்டது.

பாவம் துர்கா! அவள் இன்னும் அழுதுகொண்டே இருந்தாள். அவளை நினைக்க எனக்கு பாவமாக இருந்தது. ச்சே என்ன சமுதாயம் இது. லெட்டர் எழுதியது அவன். ஆனால் அதற்கான தண்டனை இவளுக்கா? ஏன் இவளொரு பெண் என்பதனாலா? இவள் என்ன தப்பு பண்ணினாள்? அந்த லெட்டரை பாடசாலையிலிருந்து வீடுவரை சுமந்து வந்தது தப்பா? அதற்காகத்தான் அவளுக்கு இப்படியொரு தண்டனையா?

இனிமேல் பாடசாலைக்கே போகக் கூடாது எனும் அளவுக்கு.. யப்பா! எவ்வளவு பெரிய தண்டனை. துர்காவுக்காக என்னுள்ளம் அழுகிறது.

□□□

அதன் பிறகு வந்த நாட்களில் துர்காவை காண கிடைக்கவில்லை. அவள் பாடசாலையிலிருந்து நிறுத்தப்பட்டுவிட்டாள் என்பது மட்டும் தெரிந்தது. முன்பெல்லாம் எங்கள் வீட்டுக்கு அடிக்கடி வந்து சென்றவள் இப்போது எங்கள் வீட்டுக்கும் வருவதில்லை.



சுதந்திரமாக வாழ்த்துக்கொண்டிருந்த துர்கா கூண்டுக்கிளி ஆகிவிட்டதை என்னால் ஜீரணித்துக்கொள்ள முடியாமல் இருந்தது. படிப்பில் ஆர்வமுள்ளவளால் தொடர்ந்து படிக்க முடியாமல் போய் விட்டதே! என்ன கொடுமை இது? என்னால் அவளுக்காக அனுதாபப்பட மட்டுமே முடிந்தது.

தபால்காரன் தந்துவிட்டுப்போன மடலைப் பார்க்கிறேன். அது என் உயிர்தோழி நிஸ்வா ஸலாம் அனுப்பிய மடல். ஆவலோடு மடலை படித்துக்கொண்டிருந்தபோது என் எதிரே துர்கா!

"வா துர்கா உட்காரு."

அவள் அமர்ந்துக்கொள்கிறாள்.

என் விழிகளை அவள்மீது மேய விடுகிறேன்.

அவளிடம் முன்பிருந்த உற்சாகம், சந்தோஷம், சிரிப்பு எல்லாமே இப்போது காணாமல் போயிருந்தன. அவள் முகத்தில் ஏதோ ஒரு சோகம். படிப்பை தொடர முடியாமல் போனதால் ஏற்பட்ட சோகமாக இருக்கலாம் என்றெண்ணிக்கொண்டு அவளருகே வந்து அமர்கிறேன்.

"இப்போதெல்லாம் உன்னை காணவே கிடைக்குதில்லியே?"

"......"

"ஸ்கூலுக்குக்கூட போறதில்லபோல..."

"....."

அவள் மௌனமாகவே இருந்தாள்.

"ஏன் துர்கா பேசாம இருக்கே....? ஏதாவது பேசேன்."

"...."

மீண்டும் மௌனம்.

அவளது முகத்தை நான் உற்று நோக்குகிறேன். அவளது கண்களின் ஓரத்தில் கண்ணீரின் கசிவு.

"ஹேய்...ஏன் கண் கலங்குறே?"

"எனக்கு அடுத்த மாசம் கல்யாணம்."

அவளது கண்களில் முட்டிக்கொண்டிருந்த கண்ணீர் சட்டென தரையில் பட்டுத் தெறித்தது. எனக்குள் அதிர்ச்சி! என்றாலும் அதனை வெளிக்காட்டிக்கொள்ளாமல்,

"அட சந்தோஷமான விஷயம் தானே? இதுக்குப் போய் அழலாமா?" என்றேன், அவளது கூந்தலை வருடிக்கொடுத்தவாறு.

"எனது சந்தோஷமான விஷயம் இந்தக் கல்யாணமா?"

அவள் கேட்டாள். நான் மௌனமாக இருந்தேன்.

"என்னோட படிப்பு என்னைக்கு நின்னு போச்சோ அன்னைக்கே என்னோட சந்தோஷமெல்லாம் தொலைஞ்சி போச்சி."

அவள் அழுதாள். நான் அவளை தேற்றினேன்.

"அழாதே துர்கா, ப்ளீஸ் அழாதே."

கண்களை துடைத்துக்கொண்டவள் தொடர்ந்தாள்,

"எனக்கும் மனசுன்னு ஒண்ணு இருக்கு. அதிலேயும் ஆசாபாசங்கள், விருப்பு வெறுப்புக்கள் எல்லாமே அடங்கியிருக்கு. ஆனா...ஆனா இதை ஏனோ என் அம்மா புரிஞ்சிக்க மாட்டேங்கிறாங்க. எங்கம்மாவுக்கு என்மேல நம்பிக்கையில்ல. அதனாலதான் என்னை ஸ்கூல்ல இருந்து நிறுத்தி. அவசர அவசரமா எனக்கு கல்யாணம் பேசி..."

அவள் குலுங்கிக் குலுங்கி அழுதாள்.

ராஜம் ஆன்டியை நினைக்க எனக்கு ஆத்திரம் ஆத்திரமாக வந்தது. படித்து ஒரு நல்ல நிலைக்கு வரவேண்டுமென்று கனவு கண்டு கொண்டிருந்தவளை பாடசாலையிலிருந்து நிறுத்தியது மட்டுமின்றி இந்தச் சின்ன வயதிலேயே அவளுக்கு திருமணமும் செய்து வைக்கப் போகிறார்களே? அவளது திருமணத்திற்கு இப்போதே அப்படியென்ன அவசரம் வந்தது? சுதந்திரமாக வாழ வேண்டிய இந்த வயதில் அவளைப் பிடித்து திருமணச் சிறைக்குள் தள்ளப் பார்க்கிறார்களே! ஒரு பெண்ணின் மனதை இன்னொரு பெண்ணால்தான் புரிந்துக்கொள்ள முடியும் என்பார்களே? அப்படியானால் துர்காவின் மனதை அவளது அம்மாவான ராஜம் ஆன்டியினால் ஏன் புரிந்துக்கொள்ள முடியாமல் போனது?

□□□

துர்காவின் திருமணம் இனிதே நடந்து முடிந்தது. அவள் புகுந்த வீடு செல்லும் நேரம். கலங்கிய விழிகளோடு எல்லோரிடமும் விடைபெற்றுக் கொண்டிருந்தாள். அவளது பெற்றோரும் கண் கலங்கிக் கொண்டிருந்தனர். நான் அவர்களை புதினமாகப் பார்க்கிறேன். இது நாள்வரை தங்களோடு வாழ்ந்து வந்த மகள் இன்று தங்களை விட்டுப் பிரியப் போகிறாள் என்பதால் ஏற்பட்ட வேதனைக் கண்ணீரா இது? அல்லது தங்களுக்கு சுமையாக இருந்த மகளை ஒருவன் கையில் பிடித்துக்கொடுத்தாயிற்று என்பதால் ஏற்பட்ட ஆனந்தக் கண்ணீரா இது? எனக்குள் எழுந்த கேள்விகள் விடை காணாமலேயே மடிந்து போயின. எல்லோரிடமும் விடைபெற்றுக்கொண்ட துர்கா என் அருகே வந்து,

"நான் போயிட்டு வர்றேன்."

சொல்லும்போதே அவளது கண்கள் கண்ணீரை வார்த்தன.

"சந்தோஷமா போயிட்டு வா."

என் கண்களிலும் கண்ணீர்த் துளிகள்.

சற்று நேரத்தில் அவள் தன் கணவனோடு காருக்குள் சென்று அமர்ந்து கொள்கிறாள். மணமக்களை சுமந்து கொண்டு கார் விரைந்து செல்கிறது.

துர்கா புகுந்த வீட்டில் சந்தோஷமாக வாழ வேண்டும்... அவளது இல்லற வாழ்க்கை மகிழ்ச்சிகரமானதாக அமைய வேண்டும். நான் மானசீகமாக பிரார்த்தித்துக் கொள்கிறேன்.

சிறுகதை

# அழியாத வானவில்கள்

மருதமுனை
முகர்றப்



மணி ஏழை நெருங்கிக் கொண்டிருந்தாலும் மழைதான் கொஞ்சமும் குறைந்த பாடில்லை.அனைத்து தெய்வங்களையும் முத்துக் கிழவன் வேண்டிய போதும் எதுவிதமான கருணையும் இன்னும் காட்டப்பட்டதாகத் தெரியவில்லை. இந்த முத்துக் கிழவனுக்கு மழை தேவையில்லாமல் இருந்தாலும் அதனால் நன்மையடையும் எத்தனை பேர்கள்தான் உலகிலே இருக்கின்றார்கள்!

முத்துக் கிழவன் காசு போடும் பெட்டியைத் திறந்து பார்க்கின்றான். மூன்று பத்து ரூபாய்த் தாள்களும் நான்கு இரண்டு ரூபாய்க் குற்றிகளும் சிதறிக் கிடக்கின்றன. அவனது கணக்குப்படி இப்போதே மழை நின்றாலும் எப்படியும் இரு நூறு ரூபாவுக்காவது வியாபாரம் செய்துவிடலாம்.

மீண்டும் முத்துக்கிழவன் வேண்டாமல் இருந்த மீதிக் கடவுள்களின் பெயர்களையும் முணுமுணுக்கின்றாள்.

சீறிக்கொண்டு ஒரு பஸ் வந்து நிற்க இரண்டு மூன்றுபேர் பஸ்ஸிலிருந்து இறங்கி கிழவன் நின்ற கூரையின் கீழேயே ஓடி வருகின்றனர். முன்பே கிழவனின் கடலை வண்டியினாலும் நான்கு பேர்களாலும் நிரம்பியிருந்த இடத்திலே நெரிசல்கூட, கிழவனும் வண்டிக்கு இடப்பக்கமாக மாறி நிற்கின்றான். மழைக்கு இடம் கொடுக்கும் நோக்கிலேயே நகர்ந்து வழி விட்டாலும் ஒரு பத்து ரூபாவுக்காவது வியாபாரம் செய்து விடலாமே என்ற எண்ணம் உள் மனதிலிருந்து எட்டிப்பார்த்துக் கொண்டிருந்தது.

பத்து நிமிடங்கள் தாண்டிவிட்ட போதும் கடலை வாங்கும் நோக்கங்கள் எதுவும் வந்தவர்களிடம் காணப்படவில்லை, கைகளை இறுகக் கட்டிக்கொண்டு வானத்தையும் கைக் கடிகாரத்தையுமே மாறி மாறிப் பார்த்துக்கொண்டிருக்கின்றனர்.

இரவு வேளையானதால் வீதியிலே சன நடமாட்டம் நன்றாகக் குறைந்திருந்தது. கூரையின் ஓரம் வழியாக வழிந்தோடும் மழை நீர் கிழவனை முழுமையாகவே நனைத்து விட்டது. வயது எழுபதைத் தாண்டியும் உடம்பிலே முறுக்கு இருந்தாலும் கை கால்கள் இலேசாக உதறல் எடுக்கவே செய்தன. குளிர் தாங்காமல் நாடிகள் ஒன்றுடன் ஒன்று அடித்துக் கொள்ளும் ஓசை கிழவனுக்கும் நன்றாகவே கேட்டது.

அவ்விடம் நின்றவர்களில் ஒருவர் கிழவனை அண்மி, "ஐயா, மருதானைக்கு எங்க பஸ் எடுக்க வேணும்?"

அவர் கேட்ட கேள்விக்கு பதில் கூற முயன்றும் நாடிகள் நன்றாக விறைத்திருந்ததனால் கிழவனால் எதுவுமே பேச முடியவில்லை. கையால் மட்டும் இடத்தைக் காட்டிவிட்டு யாராவது கடலைகள் வாங்க மாட்டார்களா? என்ற ஏக்கத்தில் ஒவ்வொருவர் முகத்தையும் மாறி மாறிப் பார்த்துவிட்டு வழிந்து கிடந்த பொலிதீன் பேப்பரால் கடலையை இழுத்து மூடி விடுகிறான்.

பின்னேரம் தள்ளு வண்டியை வெளியே எடுக்கும் போதே மனைவி மீனாட்சிக் கிழவி கூறினாள், "வானம் மேற்குப் பக்கமாக் கறுத்திருக்கு. மழை மேகங்களும் திரண்டிருக்கு. இண்டைக்கு தொழிலுக்குப் போக வேணாம்" என்று,

முத்துக் கிழவனுக்கும்தான் போக மனமில்லாமல் இருந்தாலும் இன்றைய இரவு இருவருக்கும் வெறும் வயிறாய்ப்போய் விடுமே என்பதற்காகத்தான் கிழவியையும் சமாதானப்படுத்திவிட்டு தொழிலுக்கு வந்தான்.

வழமையாக் கடலை தரும் கடலைக்காரன் சோமுவும் கடலையைக் கொடுக்கும் போதே சொல்லித்தான் கொடுத்தான். "மழை வெய்யில் எண்டெல்லாம் சொல்லிக்கொண்டு கடலையைத் திருப்பிக் கொண்டு வரக்கூடாது, காசோடதான் வரவேணும்."

கிழவனும் சம்மதித்துத்தான் கடலையை எடுத்துக்கொண்டு வந்தான். ஆனால் இப்போதுதான் ஒன்றுக்கும் வழி தெரியவில்லை.

எப்படியும் முன்னூறு ரூபா சோமுவுக்குக் கொடுத்து விடவேண்டும். சோமு கொடுக்கும் கடலை ஆகக் கூடுதலாக முன்னூற்றி ஐம்பது ரூபாவுக்கு விற்கும். சோமுவின் காசு போக மீதமாகும் ஐம்பது ரூபாவில் கிழவனும் கிழவியும் ஒருவாறு வயிறைக் கழுவிக்கொள்ளலாம்.

கடந்த வெள்ளிக்கிழமை இப்படித்தான் கடலையை இருநூற்றி ஐம்பது ரூபாவுக்கு விற்றுவிட்டு மீதி ஐம்பது ரூபாவை மறுநாள் உழைத்த பணத்தில் கொடுத்துவிட்டு இரண்டு நாட்களுக்கு தண்ணீரை மட்டும் குடித்து பட்டினி கிடந்ததை நினைக்கும்போதே கிழவனுக்கு கண்களில் கண்ணீர் நிரம்பியது.

முத்துக் கிழவனுக்கு எழுபது வயதினையும் மனைவி மீனாட்சிக்கு அறுபத்தைந்தைத் தாண்டிய போதும் இருவரும் இதுநாள்வரை ஒரு வார்த்தையாவது கடிந்து பேசியதில்லை. முத்துக் கிழவனும் எப்போதும் கிழவியின் பேச்சின் படியே நடப்பதால் எதுவித பிரச்சினைகளும் அவர்களுக்குள் எழுவதுமில்லை. இன்றும் மீனாட்சி சென்னபடி தொழிலுக்கு வராமல் விட்டிருந்தால் இந்தளவு கஷ்டப்பட்டிருக்கத் தேவையில்லை. மீண்டும் முணுமுணுத்தான் கிழவன்.

இப்போது கிழவனுக்கு கடலையின் மீதிருந்த கவனம் இல்லாது போய் மனைவி மீனாட்சியின் மீது அனைத்துக் கவனமும் மாறியிருந்தது. மழை பேயாது இருந்திருந்தால் சோமுவின் கணக்கை முடித்து வண்டியையும் கழுவி விட்டு இப்போது மனைவியுடன் சாப்பிட்டிடுக் கொண்டிருக்கலாம்.

கூரை வேயாததனால் முழுமையாகவே ஒழுகும் ஓட்டை வீட்டின் உள்ளிருந்து மீனாட்சி நனைந்து கொண்டிருக்கின்றாளோ, அல்லது வெளியே நின்று எனது வரவை எதிர்பார்த்துக்கொண்டிருக்கின்றாளோ?

கிழவனுக்கு நினைக்கவே பயமாக இருந்தது. எதனைப் பற்றியும் சிந்திக்காமல் குளிராலும் நடுக்கத்தாலும் விறைத்திருந்த பாதங்களை முன்னால் வைத்து வீட்டுக்குச் செல்லும் வீதிப்பக்கமாக வண்டியைத் தள்ளிக்கொண்டு செல்கின்றான்.

இப்போது கிழவனுக்கு கடலையைப் பற்றி எதுவித கலையுமில்லை. எப்படியும் மீனாட்சியிடம் போய்ச் சேர்ந்துவிட வேண்டும் என்ற கவலை மட்டும்தான் முகத்திலே தோய்ந்திருந்தது. சாவதானாலும் மீனாட்சியின் மடியிலேயே போய் சாவேன் என்பதில் கிழவனுக்கு முழு நம்பிக்கை. ஏனெனில் இதுவரை இருவரும் இறைவனிடம் உண்மையாக வேண்டிய வேண்டுதல் அது ஒன்றும்தான்.

ஆனால் நாளை காலை உயிருடன் இருந்தால் எப்படியும் முத்துக்கிழவன் சோமுவின் முன்னூறு ரூபாவைக் கொடுத்தே ஆகவேண்டும்.

## -14ம் பக்க விடை இதுதான்- கண்பிடித்தது சரிதானா?



சிறுகதை பக்கம்

# ரோஜாக்கள் உனக்காகவே

வின்சன்–சத்துருக்கொண்டான்

அன்று ஞாயிற்றுக்கிழமை. கம்பனி விடுமுறை நாள். காலையில் எழுந்திருந்த விமலுக்கோ உற்சாகம் கொப்பளித்துக் கொண்டு வந்தது. வழக்கமாய் கூச்சல் போடும் பறவையின் குரல் அன்று அர்த்தமுள்ள கவிதையாய்க் கேட்டது. வண்ண ரோஜாக்கள் கள்ளங்கபடமற்ற குழந்தைபோல் சிரித்தன. புன்னகை பூத்த முகத்துடன் தோட்டத்திற்குள் வந்தான் விமல்.

அங்கு நடந்துகொண்டிருந்த பரவசமான ஒவ்வொரு காட்சியும் அவன் கண்களுக்கு குளிர்ச்சியை அளித்தது. அத்தனையையும் இரசித்த வண்ணம் அருகில்கிடந்த கல்லிலேயே குந்திக் கொண்டான் விமல்.

அவன் கண்களோ கட்டுக் காவலின்றி எட்டுத் திக்கும் அலைபாயத் துவங்கியது. புன்னகை சிந்திக்கொண்டிருந்த ரோஜா மலர்களை பார்க்கும் வேளையில் விமலுக்கு, வினுஜாவின் ஞாபகம் வந்தது. அந்த ரோஜா மலர்களைப் பறித்துக்கொண்டு போய் வினுஜாவின் கூந்தலில் சூடி விட வேண்டும் போல் விமலுக்கு இருந்தது.

விமல் அந்தக் கிளையின் பொறுப்பை ஏற்றுக்கொண்டு இரண்டு நாட்கள் மிகவும் 'பிஸி'யாக இருந்தான். இதனால் ஒஃபிஸில் வேலை செய்பவர்களுடன் பேசுவதற்கு அவனுக்கு நேரம் கிடைக்கவில்லை.

மூன்றாம் நாள் இடைவேளைக்குப் பிறகு வாடிக்கையாளர்களின் தொந்தரவில்லாமல் சிறிது ஓய்வாக இருந்தபோது,

"நமஸ்காரம் சார்" என்று முகம் மலரச் சிரித்தபடியே வினுஜா உள்ளே நுழைந்தாள்.

"உக்காருங்கோ" உட்கார்ந்தாள்.

"நீங்க என்னை மன்னிக்கணும். அன்றைக்கு நான் சார்ஜ் எடுத்துக்க வந்தப்ப மிஸ் சாதனாவையும், மிஸ் பத்மாவையும் மாத்திரம்தான் சந்திக்க முடிஞ்சுது. மத்தவங்களைச் சந்திக்க முடியவில்லை."

"அதனாலென்ன சார்பரவாயில்லையே!"

"இருந்தாலும் உங்க எல்லோரையும் பத்தி சுதாகர் சார்கிட்ட கேட்டுத் தெரிஞ்சிட்டேன். எல்லாரைப் பத்தியும் நல்லபடியாவே சொன்னார். நீங்கல்லாரும் அவருக்கு எப்பிடி வேலையில பரிபூரண ஒத்துழைப்



புக் குடுத்து வந்தீங்களோ அந்த மாதிரி எனக்கும் குடுப்பிங்கன்னு நம்பறேன். குடுக்கணும்னு கேட்டுக்கிறேன்."

"கண்டிப்பா என்னைப் பொறுத்தவரையிலும் ஐ வில் கிவ் யூ மை பெஸ்ட்"

"தாங்யூ."

வினுஜா தொடர்ந்தாள்.

"எனக்கு வயசு இருபதுதான் சார்."

யேஸ்? அதுக்கென்ன?

"உங்களுக்கு ரொம்ப வயசாயிடுச்சின்னு நான் சொல்றதா நீங்க நினைக்கக்கூடாது. வயசாகலேன்னாலும் பதவியில நீங்க என்னைவிட ரொம்ப உயரத்தில இருக்கீங்க. அதனால என்னை நீ வா போ என்றே பேசலாம்."

"நோ நோ. அது என்னால முடியாது. நீங்க ஆணா இருந்தா ஒரு சமயம் நான் அதுக்கு ஒத்துக்க முடியும். ஒரு பெண்கிட்ட ஒருமையிலை பேசுறதின்னா அது ரொம்ப நெருங்கிய உறவாயிருந்தாலொழிய அப்படிப் பேச முடியாது." விமல் கூறியபோது, வினுஜாவின் முகம் வாடிவிட்டது.

அதை விமல் கவனிக்கத் தவறவில்லை. அவள் மனதைப் புண்படுத்தி விட்டோமோ என்று அவனுக்கு வருத்தமாக இருந்தது.

"உங்க முகம் சட்டென்று வாடிப் போயிட்டுதே? நீங்க ரொம்ப சென்சிடிவ் போல இருக்கு"? என்று கேட்டான்.

"சீக்கிரம் வாடின முகம் சீக்கிரம் மலரவும் செய்யும்." என்றாள் வினுஜா.

'தட்ஸ்குட் அப்ப மலரட்டுமே' என்றான் விமல். சிரித்துக்கொண்டே வெளியேறினாள் வினுஜா.

காலங்கள் உருண்டோடின. இவ்வாறு இரு வருக்கும் இடையில் நிலவிய சாதாரண பழக்கம் நாளடைவில் அரும்பாகி மொட்டாகி காதலாக மலரத் துடங்கியது. சிந்தனையில் ஆழ்ந்து கொண்டிருந்த விமலுக்கு அம்மா வித்தியாவின் குரல் திடுக்கிட வைத்தது.

"விமல் அங்கென்ன செய்து கொண்டு இருக்கிறே? இங்க போட்டு வைத்த டீ மேசையிலை இருந்தே ஆறிப்போகுது. சீக்கிரம் எழும்பிட்டு வாப்பா." அம்மா வித்யாவின் அழைப்புக்கு செவி சாய்த்த விமல் வீட்டை நோக்கி நடக்கின்றான். அந்த ரோஜா மலர்களைப் பறித்து அவன் எப்போதாவது வினுஜாவின் கூந்தலில் சூடி அவளின் அழகை இரசிக்கத்தான் போகின்றான். ●

# இறுதியாய் ஒரு தீர்மானம்

-சேத்தூர் எஸ்.பகீரதி-

இரண்டு மனம் வேண்டுமென்று கேட்கலாம். ஆனால்... வாழ்க்கையில் எல்லாமே இரண்டாகிவிட்டால்...

வீடு அந்தப்புதிய குழப்பத்தில் இரண்டு பட்டுக்கொண்டிருந்தது. பிரசன்னா செய்வதறியாது திகைத்து நின்றான். "பிரசன்னா எங்க பிள்ளை?" என்று ஒரு சாரார் சொல்ல.. "அதெப்படி



முடியும் இவ்வளவு வருஷமா வளர்த்து ஆளாக்கினது நாங்க. பிரசன்னா எங்க பிள்ளை." என்று மற்றசாரார். அதுதான் பிரசன்னாவின் இரண்டு அப்பாவும், இரண்டு அம்மாவும் தீவிரமாக வாக்கு வாதப்பட்டுக் கொண்டிருந்தனர். பொறுமை யிழந்த பிரசன்னா அந்த இடத்திலிருந்து மெதுவாக நழுவிக்கொண்டான்.

பிரசன்னா தனது உயர்தரப் படிப்பை முடித்து விட்டு சென்ற மாதம்தான் தனது கிராமத்துக்கு வந்திருந்தான். "ஓ... நான் பிறந்த இந்த கிராமம் எவ்வளவு அழகு?" என பிரசன்னா தனக்குள் சொல்லிக் கொள்வான். தன்னையே நினைத்துக் கொண்டிருக்கும் மாமா மகள் பிரியங்காவையும் அத்தை மகள் ரேவதியையும் நினைத்து பிரசன்னா தனக்குள் சிரித்துக் கொண்டே "ரெண்டு பைத்தியத்துல நான் எதைக் கட்டிக்கொண்டு அழப் போறேனோ தெரியல்ல' என்று சொல்லி நகைப்பான்.

இதுவே போதும் பிரியங்காவும் ரேவதியும் சண்டை பிடிக்கத் தொடங்கிவிடுவார்கள். பிரசன்னா "சபாஷ் சரியான போட்டி" என்று சொல்லிக்கொண்டே நழுவி விடுவான். ஒரு வாரத்துக்கு முன் இவ்வாறு சந்தோஷம் நிறைந்ததாகவே இருந்தது.

ஆனால்... அந்த சந்தோஷம் சென்ற வாரம் பிரசன்னா தங்கள் மகன் எனக் கூறிக்கொண்டு மற்றுமோர் அப்பா அம்மா வந்தவுடனேயே எங்கோ தொலைந்துவிட்டது. இதுவரை தன்னை வளர்த்தவர்கள் கோயில் திருவிழா ஒன்றில் தன்னைக் கண்டு தத்தெடுத்து வளர்த்த பெற்றோர் என்றும் தற்போது வந்திருப்பவர்கள் தனது உண்மையான பெற்றோர் என்றும் அறிந்த பிரசன்னா அதிர்ந்தான். இரண்டு தாய்மாரும் பிரசன்னாவைப் போட்டி போட்டுக்கொண்டு கவனித்தார்கள். பிரசன்னாவுக்கு இரண்டு தங்கைகள் வேறு. "அண்ணா அண்ணா.." என்று அவர்கள் வளைந்து வருவதும், தந்தைமார் இருவரும் முகத்தை தொங்கப்போட்டுக் கொண்டு யோசிப்பதும்... நினைத்துப் பார்க்கவே பிரசன்னாவுக்கு ஏதோ செய்தது. செய்வதறியாது திகைத்து நின்றான்.

இதற்குள் பிரியங்காவினதும் ரேவதியினதும் நினைவு பிரசன்னாவின் மனதுள் விஸ்வரூபமெடுத்தது. "ஓ இப்போ வந்திருக்கிற அப்பாவுக்கு ஒரு தங்கை மகளும், அம்மாவுக்கு ஒரு அண்ணன் மகளும் இருக்க அவர்கள் இருவரும் பிரியங்காவையும், ரேவதியையும் போல என்னைச் சுற்ற... கடவுளே! இருக்கவே கூடாது.." என இந்த இக்கட்டான சூழ்நிலையில்கூட பிரசன்னா நகைச்சுவையாக நினைத்துக்கொள்வான். பிரசன்னாவின் குணம் ஒன்று எதையும் வாழ்க்கையில் ஈஸியாக எடுத்துக்கொள்வது. ஆனால் இதைத்தான் பிரசன்னாவால் ஈஸியாக நினைக்க முடியவில்லை.

கோயில் குளக்கட்டில் இருந்து எல்லாவற்றையும் அசை போட்டுக்கொண்டிருந்த பிரசன்னாவை "ஹாய் பிரசன்னா" என்ற பெண் குரல் சிந்தனையைக் கலைக்க பிரசன்னா பக்கவாட்டில் திரும்பி ஏறிட்டான். உயர்தர வகுப்பு படிப்பை முடித்த ஒரே ஒரு அழகான பணக்கார மாமா மகள் பிரியங்கா நின்று 'பளிச்' என சிரித்தாள்.

பிரசன்னா ஒன்றுமே பேசாது சைக்கிளைத் தள்ளிக்கொண்டு வீட்டை நோக்கிப் பறந்தான். எதிரே அந்த ஒற்றையடிப் பாதையில் ரேவதி கண்களில் மின்னல் தெறிக்க குறும்பாக 'அத்தான்' என்றபடி நின்றாள். ஏழாந்தரம் வரை ரேவதி படித்திருந்தாள். பண்ணையாரின் ஒரே செல்வ மகள்– செல்ல மகள். அதாவது பிரசன்னாவின் அத்தை மகள். பிரசன்னா கண்டும் காணாதவனாய் முகத்தைத் திருப்பிக்கொண்டு வீட்டை வந்தடைந்தான்.

வீடு கலகலப்பாகவே இருந்தது. வீட்டினுள் நுழைந்த பிரசன்னா அதிர்ந்தான். இரண்டு மாமாமாரும் இரண்டு மாமிமாரும் தட்டில் பழம் பாக்குடன் அமர்ந்திருந்தார்கள். எதற்காக வந்திருக்கிறார்கள் என்பதை ஊகித்த பிரசன்னா மௌனமாக தனது அறைக்குள் நுழைய முற்பட ஹோலினுள் இவ்வளவு நாளும் முருகன் வள்ளி தெய்வானை சமேதராய் வீற்றிருந்து தெய்வீகமாய்ப் புன்னகைப்பதைக் கண்டதும் இன்று என்னவோ செய்தது.

ஒரு மாமா பிரசன்னாவை 'மாப்பிள்ளை' என்று அழைக்க மற்ற மாமாவோ 'யோவ் பிரசன்னா எனக்குத் தான் மாப்பிள்ளைய்யா' என்று சொல்ல வாக்குவாதம் தொடங்கிவிட்டது. பிரசன்னா தலையில் அடித்துக்கொண்டே அறையினுள் நுழைந்து சிந்திக்கத் தொடங்கினான்.

" ஓ மை காட்! இரண்டு அப்பா, இரண்டு அம்மா, இரண்டு தங்கச்சி இரண்டு மாமா இரண்டு மாமி இரண்டு முறைப் பெண்கள்" பிரசன்னா முடியைப் பிய்த்துக்கொண்டே குறுக்கும் நெடுக்குமாக நடந்தான். திடீரென நின்றான். தான் இதுவரை நினைத்திருந்ததை செயற்படுத்த நினைத்தான். அவ்வாறே செய்தான். வெளியில் வந்த பிரசன்னாவைக் கண்டதும் அனைவரும் ஏகமாய் அதிர்ந்தனர். காவியுடையும், கழுத்தில் உருத்திராக்க மாலையும் நெற்றி நிறைய விபூதியுமாய் சொல்ல முடியாத தெய்வீகத் தன்மை முகத்தில் நிழலாட பிரசன்னா கால்போன திசையில் நடந்து கொண்டிருந்தான். ■

# திருட்டுப் பய(ல்)

அன்பு+தூய்மை+ஊடல்=காதல்

"என்ன காதலிச்சத ஒரு கெட்ட கனவா நெனச்சி மறந்திடு. என்ன விட்டா இந்த உலகத்துல ஆம்பளைகளா இல்ல? இப்ப எனக்கு முக்கியமா தேவ பணம். அதனாலதான் ஒரு பெரிய பணக்காரரூட்டு மகள கட்ட சம்மதிச்சேன். இப்பகூட சொல்லுறேன் உங்க குடும்பத்துல சீதனமா ஒரு இலட்சம் ரூபா தர்றதா இருந்தா இப்பவே உன்ன கல்யாணம் பண்ணி கழுத்துல தாலி கட்ட நான் ரெடி! ஆனா அந்த பாக்கியத்த தான் கடவுள் உங்களுக்கு குடுக்கலயே? நான் என்ன செய்ய அயாம் சொரி குணசிலா."

இப்படி கூறி என்னவளின் முகம் சிவப்பதைக் கண்டு அந்த அழகை வர்ணித்து என் அபிமான தினமுரசின் தேன் கிண்ணப் பகுதிக்கு கவிதையொன்று எழுதிட நான் நினைத்தாலும் (ஹி... ஹி... ஒரு டூப் விட்டு தான்) அவள் மேல் கொண்ட தூய்மையான காதல் தடுத்தது.

அந்தி சந்திப்பு என்றாலும் போன தடவை தினமுரசு கொடுக்காத கோபம் இன்னுமிருந்தது. கவுண்டமணி 'ஜோக்' கொன்றை அள்ளி வீசினேன்.

"ம்" திருடி சிரிக்கவில்லை (ஹி...ஹி... நான் சிரித்தேன் கிச்சி கிச்சி மூட்டி)

"சே.." ஐடியா ஒன்றுகூட நினைவுக்கு வரவில்லை. அவளைப் பேச வைக்க. (போங்க அவ பேசா மடந்தையில்ல)

"ம்" குட் ஐடியா.

"குணசிலா ஏவுட்டு மனச நீ சரியா புரிஞ்சிக்கல. அடுத்த முதலாந் தேதி எங்க குடும்பமே ஊர்மாறி போறோம். அடிக்கடி அப்ப உன்ன சந்திக்க ஏலாம இருக்கும். எப்படியோ ஆறு, ஏழு மாசத்துக்கு ஒரு தடவசரி உன்ன வந்து பார்த்திட்டு போறேன்." எனக்கு வெளியில் சோகம் உள்ளே சிரிப்பு(பொய் சொன்னதற்குத்தான்)

"அடி சக்க" அவள் முகத்தில் கோடி மாற்றந் தெரிந்தது. என் கையை இறுக பற்றிக்கொண்டு விம்மி விம்மி அழத் தொடங்கினாள். (அடிச்சாச்சி லக்கி பிரய்ஸ்)

"ஒரு நிமிசத்துக்கு காணாட்டியும் மூச்சே போயிடும்னு ஒரு நாளைக்கு 300 தடவ சொல்லுவீங்களே? இப்ப ஆறு ஏழு மாசத்துக்கு ஒரு தடவ வந்து பாக்கிறேங் கிறிங்களே?" அவளின் குரல் கரகரத்தது. கூடவே இரு கண்களும் மகாவலி ஆறாய் மாறியது.

'அது தான் ஆம்பள புத்தி. காதலிக்க முந்தி வைரமுத்து வரி என்னா கண்ணதாசன் வரி என்னா? அவ்வளவையும் தூக்கி விடுவானுங்க. கொஞ்சம் நாள் போனோன...' ரஜனி ஸ்டைலை வரவழைத்து கொண்டேன்.

"நிஜமாவே போறீங்களா?" ஏக்கம்.


"ஆமா." என் மனசாட்சி இதயத்தில் எனக்கு கராட்டி அடித்தது. அக்கினிப் பார்வை பார்த்தாள். ஐயோ பயந்தே விட்டேன். பத்தினி பார்வையல்லவா அது.

என் மனம் 'பக்கு பக்கு' என அடித்துக் கொண்டது. விளையாட்டு விபரீதமாகுமா என்று.

"அங்க போனா என்ன மறந்துடு வீங்களா?" குரலில் ஏக்கமும் முகத்தில் சோகமும் சேர்ந்த படி அவள்,

"அது சொல்ல ஏலாது." (அனார்கலி சலீம் ஜோடிகள் இருந்திருந்தால் என்னை கொலை செய்திருப்பார்கள்)

"மறக்கிறதுனா எதுக்கு என்ன சுத்தி சுத்தி வந்து காதலிச்சீங்க...? எத்தன தடவ என் தலையில இருந்து பாதம் வரைக்கும் பெரிய கவிஞர் மாதிரி வர்ணிச்சி தள்ளி இருக்கீங்க?" பேச்சில் காரம் தெரிந்தது.



-ஹப்புத்தளையூர் எப்.லெனாட்குமார்-

"பிளீஸ்.... குமார் உங்கள விட்டா எனக்கு யாருமே இல்ல. சின்ன காலத்துலயே சொந்தங்கள இழந்தவ நான். பாசத்துக்காக ஏங்கி தவிச்ச நேரம் உங்க தூய்மையான அன்பு மட்டும் எனக்கு கிடைக்காம இருந்திருந்தா நா(ன்) இன்னேரம் செத்தே போயிருப்பேன். என்ன விட்டுட்டு (மறந்துட்டு) போயிடாதீங்க..." காலில் விழாத குறையாக கெஞ்சினாள்.

இப்போது நிஜமாகவே நான் அழுது விட்டேன். (உண்மையில் இது சோகக் கண்ணீரா அல்லது ஆனந்த கண்ணீரா? சொல்ல மாட்டீர்களா?)

அவளை அப்படியே அள்ளி எடுத்து முத்தமிட என் மனது துடித்தது. ஆனால்...

"சொல்லுங்க?...குமார்...சொல்லுங்க...?" நிஜமாகவே என் காலில் விழுந்துவிட்டாள்.

"பைத்தியக்காரி...!" தூக்கி கமலஹாசன் ஸ்டைலை பயன்படுத்தினேன். (ஹி... ஹி... ஹி... வெட்கம்)

"பைத்தியக்காரி சும்மா விளையாட்டுக்கு தானே இப்படி சொன்னேன். இதுக்கு போயி இப்படி சிணுங்கிறியே? ஏவுட்டு சின்ன குணசிலாவ விட்டுட்டு இந்த ஐயா எங்கயும் போகவும் மாட்டாரு, மறக்கவும் மாட்டாரு" முடிந்த அளவு கொஞ்சி தள்ளினேன் (ஹி...ஹி...சந்தர்ப்பம் ஒரு நாளைக்கு தானே?)

ஒட்டி இருந்தவளை சிறிது விலக்கி விட்டேன் திரும்பவும் அட்டையானாள்.

"பொய் தானே சொன்னீங்க...?" கழுத்தை சாய்த்து குழந்தையைப்போல் என்னவள்...

"ம்ஹீ..." சிரிப்போடு நான்.

"திருட்டுப் பய(ல்)" தலையில் ஓங்கி ஒரு குட்டு. சிரித்தேன் (வலியில் சிரித்தது வேறு விசயம்)

அமர்ந்தேன். மடியில் சாய்ந்தாள். ●

# கத்தரித்த கடி ஜோக்ஸ்

வெயிட்டர்: என்ன சார் நீங்க ரெண்டே ரெண்டு இட்லியோட எழும்பிட்டீங்களே?


சாப்பிட்டவர்: வயசாயிடுச்சுப்பா.... என்னால் இப்பெல்லாம் அதிகமா மாவாட்ட முடியலை.

□□

அவர்: கையை நல்லா சுட்டுக்கிட்டேன்.

இவர்: வியாபாரத்திலையா?

அவர்: ஊஹும்.... சமைக்கும்போது.



டாக்டர்: உங்கள் மனைவி இன்னும் ஒரு மணிநேரம்தான் உயிருடன் இருப்பாங்க.

கணவன்: பரவாயில்லை டாக்டர். இவ்வளவு வருடங்கள் பொறுமையோட இருந்த நான் இன்னும் ஒரு மணிநேரம் பொறுத்துக்க மாட்டேனா?

□□

ஒருவர்: என்னது வியாபாரத்தில நொறுங்கிப் போயிட்டீங்களா? என்ன வியாபாரம் செஞ்சீங்க?

மற்றவர்: அப்பள வியாபாரமுங்க.

□□

ஒருவர்: டாக்டர் உங்களுக்கு 6 மணிக்கு மேல கண் தெரியாதா?

டாக்டர்: ஏன் அப்படிக் கேக்கிறீங்க?

ஒருவர்: இல்ல... பார்வை நேரம் காலை 10 மணி முதல் மாலை 6 மணி வரைன்னு போட்டிருக்கே.

□□

www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்

# ரசிகன் தரும் இலக்கிய நயம்

# இரண்டல்ல ஒன்று





"போம் வரவா?"
என்றான் பொழிலன்.

"போகப் போவது நீங்கள் அல்ல."

என்று புதிர் போட்டாள் செல்வி. புரியாமல் விழி அகட்டி, பொன் அந்தி வானம்போல் சிவந்திருந்த அவள் கன்ன நிறம் பார்த்து,

"என்னவளே-பூ மகளே என்னதான் சொல்லுகிறாய் நீ"

என்று குரலிலே விளங்காத்தனம் தெரிய வினா தொடுத்தான் மலைக் குன்றாய் மார்பு புடைத்து நின்ற காளை பொழிலன்.

"என் உயிரை உங்களிடம் தந்து விட்டேன்; தந்துவிட்டேன் என்பதனால் சென்றீர்கள் நீங்கள் என்றால், என் உயிரும் ஒட்டி வரும் உங்களுடன்! உறவாடிவரும் உங்கள் வசம்! அதனைத்தான் உரைத்தேன் நான்."

கிளி மொழியாள், கொவ்வைக் கனியிதழாள், துள்ளும் இருமீன்போல் விழியதனால் பொழிலனை புசித்தபடி புதிர் முடிச்சை அவிழ்த்து விட்டாள்.

புதிர் முடிச்சு அவிழ்ந்ததனால் அவள் உயிர் முடிச்சு தன்னிடமே என்றறிந்து, பொன்வானில் சிறகடிக்கும் பூங்குருவியாகியது பொழிலன் மனம்.

கண் வியந்து, சிந்தை மகிழ்ந்து சொக்க வைக்கும் பொன் உருக்கி செய்தவொரு சீரான சிலையைப்போல, என் நேரே வந்த திரு உருவே; உன் உயிரை நான் பெறவே என்ன தவம் செய்துவிட்டேன். என்றெண்ணி, மயில் சிறகை விரித்ததுபோல் பொழிலன் மனம் மயிலாக, மகிழ்ச்சியென்னும் சிறகை விரித்தாடியது.

சிறகு விரிந்திருக்க, கையருகில் நின்றவந்தக் கட்டழகுப் பெட்டகம் தொட்டணைக்க வா என்று பேரழகு களால் தூதுவிட, சூதற்ற மனதினன் பொழிலன் தன் தேகமெங்கும் பரவும் சூடறிந்தான்.

எதிரியின் பலமறிய உளவறியும் வேவுப்படைபோல, பொழிலன் விழி யிரண்டும் பொன்னெழிலாள் மேனியதின் வனப்புகளில் சவாரி போயின.

தென்னையது தாங்குமந்த செவ்விளநீர் குலைகளைப்போல், மங்கையிவளும் தாங்கு மிந்த இரு குலைகள் ஒத்திருக்கும் மாயம் என்ன? பாவமிந்த இடையந்தப் பாரங்களை தாங்கிநிற்கும் ஜாலம் என்ன?

செவ்விளநீர் குலைகளதை நாம்தான் பறிக்க வேண்டும்; அதையொத்த இவளிரு தனங்களோ நம் மனதையன்றே பறித்து வெறித்திட வைக்கும் கள் உணர்ச்சி விதைக்கின்றன என்றெல்லாம் நினைத்தான் பொழிலன்.

பொல்லாத அவன் விழிகள் போராடும் களத்தினிலே புயலாக பாய்ந்துசெல்லும் குதிரைகள்போல், தன் பூமேனி மீதினிலே சவாரி செய்வதனை, கள்ள விழிப் பார்வையினால் செல்வி கண்டறிந்தாள்.

வடை சுட்ட பாட்டியிடம் காகம் அதைப் பிடுங்கியது போலன்றோ வெட்கம் அவ்ள் மனதைப் பிடுங்கித் தின்றது.

பேச்சில்லை. அவர் பிடியில் நான் இல்லை. இழுத்தணைக்கும் வீச்சில்லை யென்றாலும் விழிகள் அந்த தொழி லனைத்தும் தாமே செய்து முடிப்பதென்ன?

தன் பெருவிரலை நோக்கிக்கொண்டு மனதில் அந்த கேள்விகளைத் தேக்கிக் கொண்டு தேனூறும் இதழாள், தேர் அசைந்தது போல் மெல்லத் தன் தேகம் அசைத்தாள்.

சங்கடத்தை சாய்த்துவிட செவ்விதழை திறந்தாள் கோதை.

"ஏன் பேசாதிருக்கிறீர்கள்?"

என்று கேட்டாள். கேட்ட அந்த வேளையிலே அவள் இதழ்கள் அசைந்த விதம் தன் விழியால் வாங்கிய பொழிலன், நிறைவெறியில் தடுமாறும் மாந்தர் சிலர் போல தன் சித்தம் இன்பப் பித்தில் தடுமாறக் கண்டான்.

பதிலேதும் சொல்லாமல் பாவை யவள் அருகே போனான்.

அவன் விழிகள் சிவந்திருந்த கோலம் கண்ட கோதையவள் மனதுக்குள் ஆனந்த உணர்வு கொண்டாள்.

என்றாலும் சும்மா ஒரு பேச்சுக்காய்,

"அய்யய்யோ என்ன செய்யப் போகிறீர்கள். ஏன் கிட்டே வருகிறீர்கள்?"

என்றவளும் பயந்ததுபோல் பாசாங்கு செய்து கேட்டாள்.

சுட்டுவிழி- கட்டு உடல்- அமுது கொட்டும் இதழ் செல்வியவள் தொடுத்த வினா செவிமடுத்த போதும், விடை விடுத்தானில்லை காளை.

நெருங்கி-நேராய் நின்று அவள் இரு தோள்களிலும் இரு கரங்கள் வைத்து, பிறைநெற்றி, கூர் விழிகள், உயர்நாசி, வெட்கத்திலும், அவன் கைகள் தோள் தொட்டு, அவன் விழிகள் தன்மீது நெருங்கி மொய்ப்பதிலும் ஏற்பட்ட உணர்ச்சி வேகத் திலும் துடித்த அவள் உதடுகளில் பொழிலன் தன் விழி நிறுத்தி, பின் நகர்த்தி அவள் கழுத்தின் வனப்பும், வளவளப்பும் விழியத னால் பருகிக்கொண்டு மேலும் விழி நகர்த்த, அவன் கரங்கள் தோள் தொட்டதனால் விலகியிருந்த அவள் மேலாடை தந்த எழில் காட்சி அவன் சித்தமதை தூக்கிப் பந்தாட பொழிலன் செல்வியவள் நெற்றி மையத்திலே தன் உதட்டை ஒட்டிக்கொண்டான்.

உள்ளமதில் எரிந்திட்ட உணர்ச்சித் தீயின் கடும் வெப்பக் குறியந்த முத்தத்தில் தெரிந்ததுவே.

நெற்றியில் இருந்து உதடு விலக்காமல், "செல்வி!" என்றழைத்தான் சொக்கி யிருந்த பொழிலன்.

உணர்ச்சியால் மெல்ல உடல் நடுங்க, விழிகள் துடிக்க, நெஞ்சுக்குள் ஆசை முரசு கொட்ட, போதையேறி சிவந்ததுபோல் விழிகள் கடும் சிவப்பாய் குறிகாட்ட,

"என்ன..."

என்று செல்வி கேட்டதிலே அவள் உறுதி குலைவதை குரல் காட்டிக்கொடுத்தது.

அவள் கேட்க, பொழிலன் பொங்கு பெரு வெள்ளமான உணர்ச்சியோடு,

"நம் இருவர் உயிர் ஒன்றாய் இருப்பது மெய் அறிவாய் நீ. அறிவேன் நான்."

"ம்...ம்.."

"நம் இருவர் எண்ணங்களும் ஒன்றாக மாறியதும் மாசு மருவற்ற மெய்தானே?"

"ம்....ம்.."

"ஆனாலும் என் பிரிய தேவதையே ஒன்றுண்டு முரண்பாடு."

பொழிலன் சொன்னது புரியாமல் பொற்பாவை மெல்ல முகம் உயர்த்த, நெற்றியில் இருந்து வழுவி அவள் நாசிமடலில் தங்கியது அவன் உதடு.

கூச்சத்தில் நெளிந்தபடி, கூவும் குயில் தோற்றுவிடும் குரலாலே கேட்டாள்,

"எ...என்னவந்த முரண்பாடு?"

"உயிர் ஒன்று, உணர்வு ஒன்று. நினைவொன்று, நெஞ்சுத் துடிப்பொன்று, ஏன் எங்கள் உடல் மட்டும் இரண்டாக இருத்தல் வேண்டும்?"

வெட்கித் தலை குனிந்தாள் அந்த வெண்ணிலவும் அழகு வரம் கேட்கும் வதனத்தாள் செல்வி.

குனிந்த தலை உச்சியிலே பொழிலன் உதடு பொழிந்தது பாசம்.

துவண்டிருந்த இடை தொட்டு தன் உடல் நோக்கி தோகையவள் மேனியினை இழுத்தான் பொழிலன்.

இப்போது பொழிலன் சொன்ன முரண்பாடு போன இடம் தெரிய வில்லை.

இருவர் இடையே வழியின்றி வேறு வழி நாடிப்போன தென்றலும் முரண்பாடு தீர்ந்ததுக்கு சாட்சி சொல்லும்.

இந்தவொரு நிலையினைத்தான் கவிவேந்தன், கற்கண்டு தமிழுக்கு புதிய உவமை பல தந்திட்ட கம்பன் சொல்லிப் போனான்.

**"கருத்தொரு தன்மைய துயிரு மொன்று தம்
அருத்தியு மத்துணை யாய நீரினார்
ஒருத்தியு மொருவனு முடலு மொன்றெனம்
பொருத்தின ரிவரெனப் புல்லி னாரரோ"**

**கம்பராமாயணம்–பாலகாண்டம்.**

## குறுக்கெழுத்துப் போட்டி இல–64

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 1 | | | ■ | 2 | ■ | 3 |
| | ■ | 4 | | | | |
| 5 | 6 | | ■ | | ■ | |
| | | ■ | ■ | | 7 | |
| ■ | 8 | 9 | | ■ | | ■ |
| 10 | ■ | 11 | | | | |
| 12 | | | | ■ | 13 | |

### இடமிருந்து வலம்

1. கண்ணம்மாவின் விழியில் இதைக் கண்டார் பாரதியார்.
4. நிறைவேற்றப்படுவதற்காக இடப்படுவது இது.
5. கடந்த தேர்தலில் இது இல்லாதவர்கள் என்று கருதியவர்களை மக்கள் நிராகரித்தார்கள்.
8. தேர்தலில் போட்டிக் கட்சிகளுக்கிடையே அடிக்கடி இது பரிமாறப்படும். (திரும்பியிருக்கிறது)
11. சத்திய சோதனை என்ற பெயரில் காந்தி இதனைத் தந்தார்.
12. இதனால் பெற்றோல் செலவு கிடையாது.
13. போருள்ள போது மக்களை இது அதிகம் வாட்டும்.

### மேலிருந்து கீழ்

1. வாழ்வில் இதுவும் அவசியம்.
2. மகளுக்கு ஒத்த சொல்.
3. கடற்கரைகளிலும் இந்த மரத்தைக் காணலாம்.
6. முனிவர்கள் இதை அமைத்துத் தவமிருந்தனர்.
7. அசைவம், சைவம் இரண்டு வகையாக வும் தயாரிக்கலாம். (தலைகீழாக இருக்கிறது)
9. திருக்குறள் தந்தவரின் வாழ்வின் இவரும் ஒருபாதி.
10. கோபத்தில் துடிக்குமாம் இது.

**இதற்குரிய சரியான விடையைக் கூப்பனில் நிரப்பி அஞ்சலட்டையில் வெட்டி ஒட்டி 03.09.1994க்கு முன்னர் எமக்குக் கிடைக்கும்படி அனுப்பிவையுங்கள். அனுப்பிவைக்க வேண்டிய முகவரி:**

குறுக்கெழுத்துப் போட்டி இல-64
தினமுரசு வாரமலர்
த.பெ.இல. 1772
கொழும்பு.

சரியான விடையை எழுதி அனுப்புபவர்களில் பத்து அதிஷ்டசாலிகள் தெரிவு செய்யப்பட்டு, ஒவ்வொருவருக்கும் தலா ரூபா 50/= பரிசளிக்கப்படும்.

### குறுக்கெழுத்துப் போட்டி இல-62க்கான சரியான விடைகள்:

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 1 சி | 2 ல | ந் | தி | ■ | 3 மா | 4 து |
| று | ட் | ■ | 5 சா | 6 வி | ■ | ற |
| நீ | டு | 7 ம் | ■ | ம் | ■ | வி |
| ர | ■ | ட | ■ | 8 ம | லை | ■ |
| 9 க | 10 மு | கு | ■ | ல் | ■ | 11 பா |
| 12 ம் | ய | ம | இ | ■ | ■ | வா |
| ■ | ல் | ■ | 13 அ | று | வ | டை |

### குறுக்கெழுத்துப் போட்டி இல.62இல் வெற்றி பெற்ற அதிஷ்டசாலிகள்

1. திருமதி.மல்லிகா பத்மநாதன் பசறை.
2. சி.சிதத்குமார் நுகேகொடை.
3. என்.சரவணபவன் மட்டக்களப்பு.
4. திருமதி.சம்ஸா ஹமீட் கொச்சிக்கடை.
5. அப்துல் வாஹிட் பாணந்துறை.
6. பி.கிறேஷியன் ரெஜினோல்ட் திருகோணமலை.
7. எஸ்.மின்ஹானா அம்பகொட்டே.
8. எம்.பாரூக் புத்தளம்.
9. செல்வி.ஆர்.சுபாஷினி கொழும்பு-06.
10. கே.விஜயசேகர் மாத்தளை.

இவ் அதிஷ்டசாலிகள் ஒவ்வொருவருக்கும் பரிசாக தலா ரூபா 50/= வழங்கப்படும்.

காதல் எப்போது இனிக்கும், எப்போது கசக்கும்?

**திருமதி இராசநாயகம்–கல்லடி.**

உண்மைக் காதலாக உள்ளவரை இனிக்கும்.

□□

பார்வைக்கு இனியவர். ஆனால்- பழக்கத்தில் கொடியவர்களைப்பற்றி?

**நா.சலேத்தம்மா–வெல்லம்பிட்டிய.**

அகத்திற்கு மாறான முகம் கொண்ட வர்கள்.

□□

தினமுரசுக்கு கவிதை அனுப்பவேண்டு மானால் தபால் அட்டையிலா அனுப்ப வேண்டும்?

**எஸ்.அமுதா–அளுத்மாவத்தை.**

அனுப்புவது எதிலாக இருந்தாலும் அது கவிதையாக இருந்தால் சரிதான்.

□□

கோபத்தை அடக்குவதற்கு ஒரு வழி சொல்லுங்கள்?

**கே.ரீ.நதீசன்–கொழும்பு-13.**

கோபம் வரும்போது கட்டுப்பாட்டை ஒரு கயிறாக்கி மனதை கட்டிப்போடுங்கள். ஆனாலும் நியாயமான கோபத்தை அடக்குவதும் தவறுதான்.

□□

எதைச் செய்ய நினைத்தாலும் அவசரப்படுகிறேன். இதை நிறுத்த ஒரு வழி சொல்லுங்கள்?

**ஹனிபா மும்தாஜ்–அட்டாளைச்சேனை-4.**

அவசரப்படுவது உங்களுக்கே தெரிகிறதல்லவா? இனிமேல் எந்தக் காரியத்தை செய்யும்போதும் அதனை மனதில் இருத்தினால் போதும்.

□□

நாம் வாழப் பிறந்தோமோ அல்லது பிறந்ததற்காக வாழ்கின்றோமா?

**எம்.பௌஷாட்கான்–குருத்தலாவை.**

பிறந்ததினால் கிடைத்ததுதான் வாழ்க்கை! அதனை அனுபவிக்கத் தெரிந்த வர்களே உண்மையாக வாழ்கிறார்கள்.

□□

கிராமப்புற காதலுக்கும், நகர்புற காதலுக்கும் உள்ள வித்தியாசம் என்ன?

**எம்.ஸிஹான்–புத்தளம்.**

கிராமத்தில்-நான் உன்னை விரும்பு கிறேன். நகரத்தில்-ஐ லவ் யூ.

□□

இலங்கை கடன் வாங்காமல் முன்னேற ஆலோசனை ஒன்று கூறுங்களேன்?

**செல்வன்.ஸலீம் முஹமத் கபாலி ஹொரவப்பொதானை.**

முதலில் இந்த கடன்கார யுத்தத்தை ஒழிக்கவேண்டும். நடக்கிற காரியமா அது?

□□

சில அரசியல் வாதிகள் இறுதிச் சந்தர்ப்பத்தில் கட்சி மாறுவதைப் பற்றி என்ன நினைக்கிறீர்கள்?

**ஏ.எஸ்.எம்.ரிஸ்வி–மதவாச்சி.**

உயிரியல் தத்துவம் தெரிந்தவர்கள். அதாவது தகவமைத்துக்கொள்ள தெரிந்ததே வாழும்! பச்சோந்திகள் என்று சொல்வது நாகரிகம் அல்லவே.

□□

அமெரிக்கா மீண்டும் இராக்மீது குண்டுவீசப் போகிறதாமே! உண்மையா?

**ஸலீம் மு.ஸாதாத்–அ-நிக்வெவ.**

அமெரிக்காவின் கையில் குண்டு இருப்பது உண்மை. அதனை அது வீசினால் கேட்க ஆள் கிடையாது என்பதும் உண்மை. ஆனால் இராக் மீது வீசுமா என்று தெரியவில்லை.

□□

நான் ஐந்து பெண்களை காதலிக்கிறேன். எல்லாம் என்னைக் கட்டு என்று பெரும்பாடு படுத்துகிறார்கள் என்ன செய்வது?

**எஸ்.பாலச்சந்திரன்–பலாங்கொட.**

மிஸ்டர் திரௌபதியன், கவனமாயிரும். கட்டிவைத்து சாத்தப்போகிறார்கள்.

□□

சித்திரமும் கைப்பழக்கம், செந்தமிழும் நாப்பழக்கம்... மிகுதி என்ன?

**மாகிரட்–கண்டி.**

செத்திடுதல் உயிர் பழக்கம்.

□□

காதலித்து ஏமாற்றுவோரை என்ன செய்வது?

**ரெ.சந்திரசேகர்–புத்தளம்.**

என்னவென்றாலும் செய்து கொள்ளுங்கள்.

□□

கலைஞருக்கு உதயசூரியன் சின்னம் மீண்டும் கிடைத்தது வெற்றிதானே?

**எச்.எம்.மஸ்னவி–புத்தளம்.**

சின்னம் கிடைத்தது வெற்றிதான். அவரது எண்ணம் நிறைவேற செல்வி உள்ளவரை முடியாதுபோல் இருக்கிறது.

□□

திருமணத்தின்பின் எழுத்துத்துறையை விட்டு விலகிவிடும் பெண்களைப் பற்றி?

**திருமதி.சுபத்ரா ரவி–கோட்லொஜ்(எஸ்டேட்)**

கழுத்தை நீட்டிய இடத்தில் எழுத்து ஏற்பட்ட தடையாகவும் இருக்கலாம்.

□□

டி.எம்.சௌந்தரராஜனும், எஸ்.பி. பாலசுப்பிரமணியமும் சேர்ந்து பாடிய பாடல் உண்டா?

**என்.ஜெயகணேசன்–பொகவந்தலாவை.**

பல உண்டு. அதில் ஒன்று; நாளை நமதே இந்த நாளும் நமதே.

□□

உலக அழகுராணி சுஷ்மிதாவை பற்றி சில வரிகள்?

**செல்வி சரவணேஸ் டெயிஸி–கலவானை.**

உண்மையான அழகிகள் போட்டிக்கு செல்லாதபடியால் உலக அழகுராணியான வர். பிரபலமும் கிடைத்திருக்கிறது. பண வரவும் வாய்த்திருக்கிறது.

□□

தாயின் பாசத்திற்கும்-காதலால் ஏற்படும் பாசத்திற்கும் உள்ள வித்தியாசம் என்ன?

**எஸ்.வாணி–கொழும்பு-06.**

முன்னது; கருவறையில் இருந்து ஆரம்பிப்பது. பின்னது; கருத்தொருமிப்பதால் இடைவழியில் ஏற்படுவது.

□□

www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்

**இவ்வாரம் (28.08.94 ஞாயிறு மாலை 7.00மணி) எம்.ரி.வியில் மகாபாரதம் தொடரைப் பார்க்கும் உங்கள் கரத்தில் முரசும் இருக்கட்டும்.**

**அழகு தமிழில் தருவது- இராஜகுமாரன்**

# மகாபாரதம்

அங்கம் 43

காலத்தின் குரல்: இந்திரப்பிரஸ்தம் ரிஷிகளின் வரவால் புனிதமடைந்தது. ஓமகுண்டத்திலிருந்து எழும் புகை மண்டலம் எங்கும் சூழ்ந்து புனித மணம் பரப்பியது. வேத மந்திரங்களின் நாதம் எங்கும் எதிரொலித்தது. எதிர்பார்த்திருந்த அந்த சுப வேளை வந்துவிட்டது. நானும் அங்கு செல்வதனால் யாகம் நடைபெறும் இடத்துக்கு நீங்களும் என்னுடன் வாருங்கள்.

–காட்சி தொடக்கம்–

முனிவர்கள் மந்திரமோத யாகம் தொடங்குகிறது. அரசர் திருதராட்டினரை விதுரர் அழைத்து வருகிறார்.

அறிவிப்பாளன்: கௌரவ குடும்பத்தின் முதல்வர், அஸ்தினாபுரியின் மாமன்னர் திருதராட்டினர் வருகிறார்..!

அர்ச்சுனனும் பீமனும் முன் நின்று விருந்தினரை வரவேற்கின்றனர்.

பீமன் திருதராட்டினரை அழைத்துச்சென்று இருக்கையில் அமர்த்துகிறான்.

அறிவி: யாதவர் குல அதிபதிகள் கிருஷ்ணன், அவருடைய அண்ணன் பலராமன் ஆகியோர் வருகின்றனர்.

அர்ச்சுனனும் பீமனும் அவர்களை திருதராட்டினரிடம் அழைத்துச் செல்கின்றனர். அவரை வணங்கியபின் இருக்கைகளில் அமர்கின்றனர்.

அறிவி: காந்தார நாட்டு மன்னன் சகுனி துரியோதனனுடனும் அவர் தம்பி மாருடனும் வருகின்றனர்.

யாகத்துக்கான ஆயத்தங்களையும் வந்திருப்போரையும் பார்த்த துரியோதனன் பொறாமையால் பொருமுகின்றான்.

அறிவி: அங்க தேசத்தின் அதிபதி கர்ணன் வருகிறார்.

அர்ச்: மதிப்பு மிக்க விருந்தினரே-வருக..!

அர்ச்சுனனின் அழைப்பினை அவமதிப்பது போல் கர்ணன் பதில் கூறாது சென்று இருக்கையில் அமர்கிறான்.

தொடர்ந்து சிந்து நாட்டின் மன்னன் ஜயத்ரதன், பாஞ்சால நாட்டதிபன் துருபதன் ஆகியோர் வருகின்றனர். ஒருவருக்கொருவர் முகமன் கூறியபின்னர் சகலரும் அவரவர் ஆசனங்களில் அமர்கின்றனர்.

துரோணாச்சாரியாரும் கிருபாச்சாரியாரும் வர சகலரும் எழுந்து மரியாதை செலுத்துகின்றனர். அவர்களும் ஆசனங்களில் அமர்கின்றனர்.

முரசு முழங்குகிறது– சங்கொலி எழுகிறது.

அறிவி: பாண்டு மாமன்னனின் மகன் யுதிஷ்டிரர், பிதாமகர் பீஷ்மர், மகரிஷி

(வ[illegible]யாசர், ராஜ[illegible]தேவியார் ஆகியோருடன் அரசிகள் திரௌபதி மற்றும் சுபத்திரை வருகின்றனர்.

பாடல்:

**நீதியும் நேர்மையும் ஞாலத்தில் நிலைத்திட**
**உதித்த உத்தமா உயர்குணக்குன்றே!**
**பாரத நாட்டின் பண்பினைப் பேணி**
**பாதுகாத்திடும் பெரும்பலம் படைத்தோய்!**
**பாண்டுவின் புதல்வனே வையகம் முழுவதும்**
**ஆண்டிடும் வல்லமை அனைத்தையும் பெற்று நீ**
**வேண்டும் வளங்களும் நலன்களும் நிறைந்திட**
**வெற்றிமேல் வெற்றி குவித்து நீ வாழ்கவே!**

□□□

யுதிஷ்: முதலில் வியாச மாமுனிவருக்கும் அவருடன் இங்கு வந்து இந்திரப் பிரஸ்தத்தை புனிதப்படுத்திய முனி சிரேஷ்டர்களுக்கும் என் வணக்கத்தையும் நன்றியையும் தெரிவித்துக் கொள்ளுகிறேன். அடுத்து எம்மை இடர்கள் அணுகாவண்ணம் காக்கும் எங்கள் தாத்தா-பிதாமகர் பீஷ்மரை வணங்குகிறேன். மகாராஜா திருதராட்டினர் இங்கு வந்துள்ளார். எங்கள் பெரியப்பாவான அவர் வந்திராவிடில் எமது யாகம் பூரணத்துவமடைந்திருக்காது. அவருடன் மகாத்மா விதுரர் அவர்களையும் வ[illegible] வரவேற்கிறோம். எமது குலகுரு கிருபாச்சாரியார், எமது [illegible]சான் துரோணாச்சாரியார் ஆகியோருக்கும் என் வணக்கம். என் அன்புச் சகோதரர்கள் துரியோதனன் மற்றும் அவர்தம்பிமார் அனைவரையும் வணங்கி வரவேற்கிறேன். எமது அழைப்பினை ஏற்று வாழ்த்து வழங்க வந்துள்ள மாமன்னர்கள், வீரதிலகங்கள் அனைவருக்கும் பணிவான வணக்கம் கூறி வருக வருகவென வரவேற்கிறேன்.

குந்தி கர்ணனை அடையாளம் காண்கிறாள். கண்ணீரை எவரும் அறியாமல் துடைத்துக் கொள்ளுகிறாள்.

குந்தி: (தனக்குள்ளாகவே பேசுகிறாள்) யுதிஷ்டிரா! அதோ உன் அண்ணன் இருக்கிறான். அவனையும் வணங்கி வாழ்த்துப் பெறு மகனே!

குந்தியின் தடுமாற்றத்தை சுபத்ரா அவதானிக்கிறாள். கர்ணனையும் குந்தியையும் மாறிமாறிப் பார்க்கிறாள்.

இப்பொழுது பீஷ்மர் உரையாற்ற எழுகிறார்.

பீஷ்ம: மன்னவனே! நாகரிகமடைந்த சகல நாட்டு மன்னர்களும், சக்கரவர்த்தியாக நீ மகுடமேற்பதைக் கண்டு வாழ்த்தும் பாக்கியம் பெற்றுவிட்டாய். என் நீண்ட கால வாழ்வில் இத்தகைய மாபெரும் தபசிரேஷ்டர்களான மகரிஷிகளை ஒருங்கே கண்டதில்லை. இது உனது ஆட்சிக்கு தேவனின் கிருபா கடாட்சம் என்றுமுண்டு என்பதனையே காட்டுகிறது. மன்னவா! உமது உறவினர்கள் அனைவருமே இங்கு சமூகமளித்துள்ளனர். இவர்கள் அனைவரையும் தனித்தனியே கௌரவிக்க வேண்டியது உமது கடமை.

யுதிஷ்: தங்கள் சித்தப்படியே! முதல் மரியாதை யாருக்கு அளிக்கப்பட வேண்டும் என்பதை கூறுங்கள் தாத்தா!

பீஷ்மர்: எவர் ஒப்பாரும் மிக்காருமற்றவரோ அவருக்கே!

யுதிஷ்: அவ்வாறானால் வியாச மாமுனிவரையா அல்லது தங்களையா நான் கௌரவிக்க வேண்டும்?

பீஷ்ம: மன்னவா! எங்களிருவரையும்விட மற்றுமொருவன் இந்த மன்னவர்கள் மத்தியில்-நட்சத்திரங்களின் நடுவே பூர்ணச் சந்திரன் ஒளிவீசுவது போல் அமர்ந்திருக்கிறானே... யாதவ வம்ச



மன்னன் வாசுதேவ கிருஷ்ணன், இந்த வையகம் மட்டுமல்ல, அண்ட சராசரம் அனைத்திலும் உயர்ந்தவனான அவனே முதல் மரியாதைக்குரியவன் என்பதனை நன்னெறிகளனைத்தையும் ஒருங்கே கொண்ட நீரே உணர்ந்திருக்க வேண்டும் அல்லவா? கதிரவனைக் கண்டு காரிருள் மறைவதுபோல; வரண்டு வடிவிழந்து வாடிக்கிடக்கும் பூங்கா வசந்த குருவின் வருகையால் பூத்துக் குலுங்கி பேரெழில் காட்டும் பிரதேசமாக மாறுவதுபோல, இந்தச் சபையிலே பேரெழிலோடு விளங்கும் அந்தப் பரந்தாமனைத் தவிர வேறு எவருளர் -முதல் மரியாதை பெற? வியாசமாமுனிவரே இந்தக் கண்ண பரமாத்மாவின் சமூகத்தில் தான் முதன்மை பெறுவதை விரும்ப மாட்டாரே! கிருஷ்ணனைவிட வேறு எவரும் இதற்குத் தகுதியில்லை என்பதே எனது அபிப்பிராயம். இருப்பினும் இதற்கு ஆட்சேபனை எவருக்கும் இருப்பின் அதனைத் தெரிவிக்கலாம். தேவகி நந்தனா! இன்றைய விழாவின் நாயகராக எழுந்தருளி அனைவரையும் கௌரவியுங்கள்!

பீஷ்மர் கிருஷ்ணரை உரிய மேடைக்கு அழைத்துவர, பூசைப் பொருட்களைக் கொண்டு வரும்படி தாதியர்களுக்கு யுதிஷ்டிரன் சைகை காட்டுகிறான்.

□□□

பின்னணிப் பாடல்:

**போற்றுதற்குரிய பரம் பொருளவனென**
**பிதாமகர் பணித்து விட்டார்**
**அவையினிலிருந்த அனைவருமொருமன**
**இசைவினை வழங்கிவிட்டார்.**

□□□

நகுலன் மலர்களை கிருஷ்ணனின் பாதங்களில் வைத்தபின் எழுந்து கிருஷ்ணனின் நெற்றியில் திலகமிட முயலும்போது, 'நகுலா' என்ற அதிகார அழைப்புக்கேட்கிறது. அனைவரும் திகைப்புற்றனர். சிசுபாலன்தான் குரலுக்குரியவன் என்பது தெரிகிறது.

சிசு: யாருக்கு மரியாதை அளிக்கப்படுகிறது என்று தெரிகிறதா?

யுதிஷ்: அன்பு சிசுபாலா...!

சிசு: நீ சும்மா இரு. இங்கு நிறைந்திருக்கும் அரசர்களனைவரும் உன்மீது அச்சம் கொண்டுதான் இங்கு வந்துள்ளனர் என்று கருதுகிறாயா? இல்லை! நீதி நியாயங்களை தெளிவாக உணர்ந்தவன் நீ-சக்கரவர்த்தியாக பட்டமேற்கட்டுமே என்று கருதியே வந்துள்ளனர். ஆனால் இந்தக் கோழைக்கு முதல் மரியாதை தர முன் வந்தமையினால், இங்கு சமூகம் தந்துள்ள அரச குலதிலகங்கள் அனைவருக்கும் பெரும் அவமானத்தைத் தந்துவிட்டீர்கள்.

அர்ச்சுனனும் பீமனும் கோதிப்படைகின்றனர்.

பீமன்: இன்னும் ஒருவார்த்தை உன் வாயிலிருந்து வருமானால் நீ தொலைந்தாய்...!

யுதிஷ்: பீமா! அர்ச்சுனா! சிசுபாலன் நமது அதிதி! நீங்கள் இவ்வாறு பேசலாமா..?

சிசு: ஏன் நான் பேசக்கூடாது? எனக்கு பயமில்லை. இவன் என் மாமா வாசுதேவனின் மகன் தான்என்பதையே நம்ப முடியவில்லை. மகாராஜா கம்சனின் ஊழியனுடைய மகனான இவனுக்கு முதல் மரியாதை பெற என்ன தகுதியுண்டு? வியாச மாமுனிவரோ அஸ்தினாபுரி மாமன்னர் திருதராட்டினரோதான் மரியாதை பெறத் தகுதியுடையவர்கள்.

பலராமன் கோபத்தில் சீற கிருஷ்ணர் தடுக்கிறார்.

சிசு: பாபம் பிதாமகர்! வயதாகிவிட்டது அவருக்கு! ஆயுள் முழுவதுமே சபதத்தால் கட்டுண்டு களையிழந்து, பலம் குன்றி முதுகெலும்பற்றவராகி விட்டார்.

பீஷ்ம: சிசுபாலா! இது யுதிஷ்டிரன் நடத்தும் இராஜ சூய யாகம், இல்லாவிட்டால் உன் நாக்கை இக்கணமே துண்டாடி உன் வாயை அடக்கியிருப்பேன்.

கிருஷ்: தாத்தா! அவன் உங்களை தூஷிக்கவில்லை. அவனுடைய தூஷணைகள் என்னை நோக்கியே வீசப்படுகின்றன. அவனைப் பேச அனுமதியுங்கள்!

சிசு: நான் பேசுவதற்கு எவருடைய உத்தரவும் எனக்குத் தேவையில்லை. அந்தப் பேடி கூறியதும், சாபத்துக்குள்ளான அந்தப் பாண்டுவின் புதல்வர்களும் அவரின் ஏவலுக்குப் பணிந்துவிட்டார்கள். மரியாதைக்குரிய அவ்வாசனத்தில் அமர இந்தத் திருடனுக்கு என்ன அருகதை இருக்கிறது? துருபதன் இருக்கிறார். துரோணாச்சாரியாரும் கிருபாச்சாரியாரும் இருக்கின்றனர். துரியோதனன், கர்ணன், அஸ்வத்தாமன் போன்ற வீரனா இவன்? இவன் அறிவாளியா? முனிவரா அல்லது ஆட்சி செலுத்தும் தகுதியுள்ள அரசனாவானா? நந்த கோன் கிராமத்தில் மாடுகளை மேய்த்துத் திரிந்த கோழைக்கு இந்த மரியாதையினை ஏற்கும் தகுதி என்ன?

கிருஷ்ணன் தன் அத்தைக்குக் கொடுத்த வாக்குறுதிகளை நினைத்துப் பார்க்கிறார்.

கிருஷ்: (தனக்குள்) அத்தை உங்களுக்கு எல்லாமே கேட்டிருக்கும். இப்பொழுது நான் என்ன செய்ய வேண்டும்?

பலரா: சிசுபாலா! இனி ஏதாவது கூறினால் உன் நாவினை அறுத்துவிடுவேன்.

கிருஷ்: அவன் பேசட்டும் அண்ணா! அத்தைக்குக் கொடுத்த வாக்கினை மறந்துவிட்டீர்களா? வாக்களித்தபடி இவனுடைய நூறு குற்றங்களைப் பொறுக்கக் கடமைப்பட்டவன் நான்!

பலரா: நீ விரும்பினால் மன்னிக்கலாம். இவன் உன்னை மட்டுமல்ல பிதாமகர் பீஷ்மர், அத்தை குந்தி மகாராணி எல்லாரையும் தூஷிக்கிறானே..! நீ பார்த்துக்கொண்டு சிரிக்கிறாய்..!

கிருஷ்: அண்ணா! நான் அவனுடைய குற்றங்களை எண்ணிக் கொண்டிருக்கிறேன். இன்னும் மூன்று குற்றங்கள் மட்டுமே உள்ளன.

சிசு: என்னை பயங்காட்டுகிறாயா? மூன்றென்ன..? முன்னூறு முறை உன்னைத் திட்டித் தீர்ப்பேன்...! நீ ஒரு திருடன் தொண்ணூற்றெட்டு...உன் தாய்மாமன் கம்சனைக் கொன்று அவருடைய ஆட்சியைக் கவர்ந்தாய்! தொண்ணூற்றொன்பது..! நீ ஒரு கடைகெட்ட நன்றி கெட்டவன்....எண்ணிக் கொள் நூறாகிவிட்டது. சரி என்னை என்ன செய்யப் போகிறாய்..? செய்ய வேண்டியதைச் செய் பார்க்கலாம்!

கிருஷ்: போதும்! சிசுபாலா! அத்துடன் நிறுத்திக்கொள்!

சிசு: நீ ஒரு போலி!... அரசர்களுக்குரிய போர்வையுடன் இங்கு வந்து அமர்ந்து கொண்டாய்!

கிருஷ்ணர் தனது வலது கை விரலை உயர்த்த சுதர்சன சக்கரம் தோன்றி, சுழன்ற வண்ணம் சிசுபாலனை அணுகுகிறது. அவையிலுள்ள அனைவரும் பயந்து எழுகின்றனர். சக்கரம் சிசுபாலனின் கழுத்தை அறுத்து அவன் சிரம் தரையில் உருளுகிறது. மீண்டும் சக்கரம் கிருஷ்ணனின் கைவிரலை வந்தடைந்து மறைகிறது. அவருடைய விரலில் காயம் பட்டு இரத்தம் சொட்டுகிறது. இதனைக் கண்ட திரௌபதி ஓடிச்சென்று தனது விலையுயர்ந்த சேலையைக் கிழித்து காயத்துக்குக் கட்டுப்போடுகிறாள்.

கிருஷ்: திரௌபதி! உனக்கு நான் இன்று கடனாளியாகிவிட்டேன். இந்தத் துணியிலுள்ள ஒவ்வொரு நூலையும் காலம் வரும்போது உனக்கு நான் அளிப்பேன்!

பின்னணிப்பாடல்:

**ஆணவத் திமிருடன் அறிவொழிந்தாடிய**
**வீணனை வதைத்தனன் வேத நாயகன்**
**மானிடனாய வதார மெடுத்தவன்**
**மாயவன் விரலிலோர் காயமடைந்திட**
**தூயவள் திரௌபதி துணியினால் துடைத்தவன்**
**வேதனை போக்கினாள் வியந்தவனன்புடன்**
**வேண்டும் வரமதை வேண்டிடும் வேளையில்**
**விரும்பியே தருவேன் விருப்புடனென்றனன்.**

□□□

காலத்தின்குரல்: ஒவ்வொரு கதைக்கும் தொடக்கம் ஒன்றிருப்பது போல் முடிவும் ஒன்று இருக்கவே செய்யும். இரண்டுக்குமுள்ள இடைவெளி சூழ்நிலைகளை ஒட்டி அமைகிறது. இன்றைய சூழ்நிலைக்கு ஒவ்வாத அம்சங்களை கூடுமானவரை ஒதுக்கியே இக்கதையினைக் கூறுகிறேன். இனிமேல் வரும் 12 வருடங்களில் பாண்டவர்கள் பெரும் துன்பங்களை அனுபவிக்க நேரிடும் என்பதை வியாச மாமுனிவர் அறிந்திருக்கிறார். இருப்பினும் அதனை முன்கூட்டியே கூறும்படி அவரிடம் நான் கோரப் போவதில்லை. அவ்வாறானால் திரைமறைவுச் சூழ்ச்சிகள் அம்பலமாகி விடக்கூடும்.

மங்களகரமான சூழ்நிலையில் சிசுபாலனின் வதை அமங்கலமாக முடிந்ததைக் கண்டோம். இவை இரண்டையும் ஒப்பிடவோ வர்ணிக்கவோ காலம் செலவிடாமல் உங்களை யுதிஷ்டிர மன்னவன் சக்கரவர்த்தியாக முடிசூடும் நிகழ்ச்சியினைக்காண! அழைத்துச் செல்கிறேன்.

□□□

முனிவர்கள் மந்திரங்களை ஓதி, யுதிஷ்டிரனுக்கு வியாசர் திலகமிட்டு மாலை அணிவிக்க பீஷ்மர் சக்கரவர்த்திக்கான மகுடத்தைச் சூட்டுகிறார்.

சகலரும் எழுந்து நின்று வாழ்த்துக்கூற, யுதிஷ்டிரர் உரையாற்றுகிறார்.

யுதிஷ்: மாமுனிவர் வேதவியாசர் அவர்களே! முனி சிரேஷ்டர்களே! வேத முணர்ந்த வேதியர்களே அந்தணர்களே! பிதாமகர் பீஷ்ம தாத்தா அவர்களே! அஸ்தினாபுரியின் மாமன்னர் திருதராட்டினர் பெரியப்பா அவர்களே! துரோணாச்சாரியார் அவர்களே! குலகுரு கிருபாச்சாரியார் அவர்களே! சித்தப்பா விதுரர் அவர்களே! மைத்துனர் பலராமர் அவர்களே! வாசுதேவ கிருஷ்ணன் அவர்களே! இங்கு குழுமியிருக்கும் மன்னர் பெருமக்களே! வீரர்களே! எனது அன்புத் தம்பியரே! பாரத நாட்டின் புகழையும் பெருமையையும் பாதுகாக்க என்றும் தயாராயுள்ளேன் என்று உறுதி கூறுகிறேன். பாண்டு புதல்வனான எனக்கு உங்கள் புகழ்ச்சி வேண்டியதில்லை. எனது தாய்நாடான அஸ்தினாபுரிக்கும் அந்நாட்டின் அரசனான எனது பெரியப்பா திருதராட்டினருக்குமே அப்புகழும் பெருமையும் சேர வேண்டும். இந்தப்பட்டாபிஷேக வேளையில் ஒன்றைக் குறிப்பிட விரும்புகிறேன். இந்திரப் பிரஸ்தத்தின் எல்லைகளை விஸ்தரிக்கும் எண்ணம் எங்களுக்குக் கிடையாது. சிசுபாலன் கொல்லப்பட்டமையினால் அந்நாட்டினை நாங்கள் ஆக்கிரமித்துவிடுவோம் என்று எவரும் கருதக்கூடாது. சிசுபாலனின் மகன் மகிபாலனுக்கு இந்திரப் பிரஸ்தத்திலேயே மகுடம் சூட்டி சேத்தி நட்டை-ஆளும் உரிமையினை அவனுக்கே வழங்குகிறோம்.

–காட்சி மாற்றம்–

இந்திரப் பிரஸ்தம்–அரண்மனை.

யுதிஷ்: சித்தப்பா! இந்த ஆசனத்தில் அமருங்கள்.

விதுர: இதுதான் எனக்குரிய இடம் மகாராஜா!

பீஷ்ம: மகனே! விதுரரை அவர் விருப்பப்படியே விட்டுவிடு அவர் விரும்பாததை திணித்தால் அவருடைய கோபத்துக் காளாக வேண்டிவரும்.

வியாசர் பிரவேசிக்கிறார். யாவரும் எழுந்து வணங்குகின்றனர்.

வியா: நான் திரும்புவதற்கு முன்னர் நீங்களனைவரும் ஒன்றாக இருப்பதைக் காணவே வந்தேன். மீண்டும் இத்தகைய ஒருங்கிணைப்புக்கான சந்தர்ப்பம் கிடைக்குமோ என்னமோ!

பீஷ்ம: அவ்வாறு ஏன் கருதுகிறீர்கள் முனி புங்கவரே!

வியா: இதனை என்னிடம் கேட்க வேண்டாம் கங்கா புத்திரா! பதில் மகிழ்ச்சியைத் தராது. ஒன்றை மட்டும் கூறுகிறேன்! சூரியனுக்கு ஒளி இருக்கிறது. அதற்குரிய இடத்தில் தான் அது இருக்கிறது. அதே போல்தான் சிறு அகல்விளக்கும். விளக்கு சூரியனின் இடத்துக்கு ஆசைப் படலாகாது. ஒருவருடைய உரிமைகளை தகாதமுறையில் அபகரிக்க முயன்றால் இறுதியில் தோல்வியில்தான் முடியும். சரி மக்களே நான் புறப்படுகிறேன்.

வியாசர் வெளியேறுகிறார்.

திருத: முனிவர் கூறியதன் பொருள் என்னவோ...?

துரி: தெளிவான கருத்துத்தானே அப்பா! சூரியனுக்கும் விளக்குக்குமுள்ள வித்தியாசத்தை யார்தான் அறிய மாட்டார்..?

கிருஷ்: எனக்குப் புரியவில்லை என்று கூறினால் உம்மால் விளக்கம்தர முடியுமா காந்தாரி மைந்தனே?

துரி: இதில் என்ன இருக்கிறது. சூரியன் சூரியன்தான். விளக்கு வெறும் விளக்குத்தானே!

திருத: என்னைப்பொறுத்தவரை நான் இருளில் மட்டுமே எப்போதும் இருப்பதால் இருளையும் ஒளியையும் பிரித்துப் பார்க்க என்னால் முடியாது. மகனே! மகரிஷி கூறியதில் உள்ள உண்மையைத் தெளிவது நல்லது.

குந்தி: எனது மகன் நீதி வழுவாது ஆட்சி செலுத்த உங்கள் அனைவருடைய ஆசிகளையும் வழங்குமாறு அனைவரையும் கேட்டுக்கொள்ளுகிறேன். மகனே! போய் அனைவருடைய வாழ்த்துக்களையும் பெற்றுக்கொள்!

கிருஷ்: என்னை ஏன் பார்க்க வேண்டும்? இது அரசவை அல்ல; குடும்பத்தவர்களின் ஒன்றிணைப்பு. முதலில் பிதாமகரிடம் போங்கள்.

பீஷ்ம: நலமெல்லாம் பெற்று நீடூழி வாழ இறைவன் அருளுவான்.

யுதிஷ்: தாத்தா! நான் என்றும் அஸ்தினாபுரியை நன் மதிப்புடன் நேசிக்க வரம் தாருங்கள்!

பீஷ்ம: பெரியப்பாவிடம் போய் அவ்வரத்தினைப் பெறு மகனே!

திருத: மகனே! இறைவன் அருள் பாலிப்பான். நீ இந்திரப் பிரஸ்தத்தை அமைத்தமையினால் அஸ்தினாபுரியுடனான தொடர்புகள் அறுந்துவிட்டனவா? அஸ்தினாபுரியும் உன்னுடையது தானே?

துரி: அப்பா! இந்திரப் பிரஸ்தத்தில் எனக்கும் உரிமை உண்டு என்பதையும் இணைத்து விடுங்கள்!

யுதிஷ்: தம்பி அவ்வாறு பெரியப்பா சொல்லித்தான் ஆக வேண்டுமா? அந்த உரிமை உனக்கு எப்போதும் உண்டு. பெரியப்பா! அரசியல் பற்றிய கருத்துக்களைக் கூறுங்கள்.

பீஷ்ம: அரசியல் விதுரருக்கே உரித்தானது. அவரிடமே அந்த வரத்தைக் கேள் மகனே!

திருத: ஆமாம் மகனே! அரசியல் பிரச்சனைகளில் எழும் சந்தேகங்களுக்கு நானும் அவரின் துணையினையே நாடுவேன்.

விதுர: வாழ்க! ஒழுக்கசீலனாக வாழ வேண்டும். இந்தக்காலகட்டத்தில் உன்னைவிட நற்பண்பு கொண்ட பிறிதொருவனைக் காண்பது அரிது. மன்னன் தன் எதிரிகளைப்பற்றி விழிப்புடன் இருக்க வேண்டும். அமைச்சர்கள், ஏவலாளிகள் மற்றும் மெய்காப்பாளர்களிடமும் எச்சரிக்கையாக இருப்பது நல்லது. பேராசையே தீமைகளின் வித்து. அதனை அணுகவிடாதே. குடிமக்களுக்கு உணவுக்கும் உறைவிடத்துக்கும் தட்டுப்பாடில்லாமல் பார்த்துக்கொள்.

யுதிஷ்: இது போதாது சித்தப்பா! நீங்கள் நற்பண்புகளின் அவதாரம். மேலும் கருத்துக்களைக் கூறுங்கள்.

விதுர: அமைதிக்கு கருணை அவசியம். யுத்தங்களின் முடிவில் சமாதானம் ஏற்படும். மன்னிப்பது என்பது மகத்தானது. அடுத்தது- வரி அறவிடும் போதும் அவதானம் அவசியம். பூக்களைப் பறிக்கும் தோட்டக்காரன் மரத்தைப் புடுங்க மாட்டான். அதேபோல் வரிகளும் மக்களைத் துன்புறுத்தாதிருக்க வேண்டும். வேகமாக வீசும் காற்று மேகங்களைச் சிதறடிப்பதைப்போல விவேகமற்ற மன்னன் தன் மூதாதையர்களிடமிருந்து பெற்ற ராஜ்ஜியத்தையே சிதறடித்துவிடுவான். நல்லொழுக்கத்தைக் கடைப்பிடிக்காத மன்னவனின் ஆட்சி தீயிலிட்ட மெழுகு போலாகிவிடும். பிறருடைய செல்வம், வெற்றி, பலம் கலாசாரம், மகிழ்ச்சி, புகழ் மற்றும் பெருமைகளை தனதாக்கி வாழ விரும்பும் எவனும் தீர்க்க முடியாத பிணியாளனாவான்.

பின்னணிப்பாடல்:

***அறவழி யொழுக்க மவனியிலோங்கிட***
***அரியணை யேறிய யுதிஷ்டிரனுக்கு மோர்***
***அறிவினை யூட்டிடும் அவசியமே தென***
***ஐயுற வேண்டிய தவசியமில்லை!***

***விதுரரு திர்த்திட்ட வார்த்தைகளெல்லாம்***
***சூதுடன் சூழ்ச்சியும் சேர்ந்த சகுனியின்***
***பாதக வலையினில் வீழ்ந்த துரியனின்***
***பாதையை மாற்றிடப் பகர்ந்தவையன்றோ!***

எம்.ரி.வி. தொலைக்காட்சி நிறுவனத்தின் உரிமை பெற்று மகாபாரத கதை வசனம் வெளியிடப்படுகிறது.

www.padippakam.com

அருள் ஜுவலர்ஸ்
436331
பெண்களின் அழகோ இரகசியம்!
அதை எங்களது வண்ண நகைகள்
மின்னிப் பேசுகின்றன.
3 SEA STREET, COLOMBO 11
செட்டியார் தெரு, கொழும்பு





## முன்னவனே—மூத்தவனே!

இரானில் 2500 ஆண்டுகளுக்கு முன்னர் வாழ்ந்ததாகக் கருதப்படும் ஒரு மனிதரின் தலையும் அம்மனிதரின் பதப்படுத்தப்பட்ட தலையுடன் காணப்பட்ட வேறு இரு பொருட்களும் இப்படங்களில் காணப்படுகின்றன. இரசாயனக் கலவைகளினால் கழுவப்பட்ட இம்மனிதனின் தலை முடியும் முகமும் சிதையாமல் இருப்பதைக் காணலாம்.

Kala
JEWELLERY
புன்னகை சிந்தும் பெண்ணுக்கு
மின்னிடும் பொன்னகை பேரழகு
433686
61 SEA STREET, COLOMBO 11
செட்டியார் தெரு, கொழும்பு



## கிளி-டோனா

நியூயோர்க்-லோங் ஐலண்டிலுள்ள 60 வயதான அல்பா பலாட் 200 பறவைகளை வைத்து வளர்த்து வருகிறார். தினசரி 14 மணி நேரம் அவற்றுடன் செலவிடுகிறார். வேறு எந்த விதமான பொழுதுபோக்கோ ஈடுபாடோ இல்லாத அல்பா பலாட் அவர் வளர்க்கும் பறவைகளுக்கு ஏற்றாற்போல் சிறிது சிறிதான உடைகளைத் தயாரித்து, அணிவித்து மகிழ்கிறார். இவ்வாறு இதுவரை 350 சிறு உடைகளை வடிவமைத்துத் தைத்து வைத்து பறவைகளுக்குப் போட்டு மகிழ்ச்சியடைகிறார். பலாட் பல வருடங்களாக நாடகங்களில் ஆடை அலங்கார வடிவமைப்பாளராகப் பணி புரிந்தவர். சிறு பிள்ளைகளுக்கும் பறவைகள் போன்று உடைகளையும் தயாரித்து அவர்களுக்கும் மகிழ்வூட்டி வருகிறார்.

இவரிடமுள்ள பறவைகளில் அதிகமானவை கிளிகள். ஒரு கிளிக்கு கவர்ச்சிப் பாடகி மடோனா போன்ற ஆடை அலங்காரம் செய்துள்ளார். மடோனா இரசிகர்கள் இந்த கிளி-டோனாவாலும் கவரப்படுவார்களோ? மேலே கிளி- உடல் அமைப்பு ... பொம்மையால் வடிவமைக்கப்பட்டுள்ளது. பார்ப்பதற்கு கிளி-டோனா சற்று முகம் மாறிய மடோனா மாதிரியே இருக்கிறார் அல்லவா? விநோத உடைப் போட்டியிலும் குழந்தைகள் மட்டுமல்ல கொத்தும் இதழ் கிளிகளும் பங்குபற்றத் தொடங்கிவிட்டன.



## தண்ணீரில் பூஞ்சிட்டு



தண்ணீரில் விளையாடுவதென்றால் சின்னஞ் சிறுசுகளுக்கு ஒரே கொண்டாட்டம்தான். இதோ இரண்டு வயதுப் பாலகன் தன்னைப் போல் தண்ணீர் ... தண்ணீரில் விளையாடுகிறான். சிறு வயதில் ... வாழ்க்கை சவால்கள் தரும் எதிர்நீச்சல் போட ... ●

## உங்களில் ஒருவன்

அன்று கடுமையான உடலுழைப்பினால் ஏற்பட்ட ... மக்பெயின் சற்று நேரம் சயனித்து ஓய்வெடுத்தார். ... கருணமென்று அவருடைய 4 மாத மகன் ... மார்பை தொட்டிலாக்கி கிடந்தினான் தாம். ... இடமில்லையா என்ற தோரணையில் வளர்ப்புச் ... குட்டியும் அசப்பில்லாமல் உறங்க இடம்பிடித்துக்கொண்டது. அவுஸ்திரேலியாவில் மவுண்ட் கம்பியரில் எடுத்த படம் இது. ●


## கையும் இரங்குமோ காரிகைக்கு?



'உலகம் சுழலும் போது' என்ற தொலைக் காட்சித் தொடரில் எமிலி என்ற பாகம் ஏற்று நடிக்கும் கவர்ச்சி நடிகை, படப்பிடிப்பு இடைவேளையின் போது நியூயோர்க் நகர பார்க் நிழற் சாலையிலுள்ள ஒரு சிலையின் முன் தன் அழகிய கையினை நீட்டுகிறார். அவருக்குப்பின்னால் இருப்பது கை வடிவமான சிலை கையுக்குள் அடக்கிவிடலாம் தான் காரிகையை! ஆனால் பெண் என்றால் கையும் இரங்கும்.

## தினமுரசு வாரமலர்





## நிழலல்ல நிஜம்

தொலைக்காட்சி நிகழ்ச்சிகள் மூலம் மக்கள் மதிப்பைப் பெற்றவர் நிரோ (இடது புறம் உள்ளவர்) அவருடைய முதல் குழந்தை பிறந்தபோது தனது சகோதருடன் மகிழ்கிறார். தொலைக்காட்சி நிகழ்ச்சிகளில் பாசம் பொங்க நடித்தது நிழல். இது நிஜம். எதில் சுவாரசியம் நிழலிலா-நிஜத்திலா? உங்கள் அனுபவத்தில் நீங்களும் தீர்மானிக்கலாமே?

## வருமானவிளையாட்டு

'கையிலே காசிருந்தால் கழுதையும் அழுக்கச் சொல்லும்' இப்படி ஒரு நடைமுறை பழமொழி உண்டு. அதேபோல் 'கையிலே ஒரு கமரா (புகைப்படப் பிடிப்புக்கருவி) இருந்தால்...? கருத்தாழமுள்ள படங்களையும் எடுக்கச் சொல்லுமல்லவா?

பீட்டர் லேர்மர் என்ற புகைப்படப் பிடிப்பாளர் ஓர் அணிலை வளர்த்து வந்தார். மிகவும் சுறுசுறுப்பான அந்தச் சிறு பிராணியை தனது புகைப்படக் கதாநாயகனாக்க ஆசைப்பட்டார். சிறிய அளவில் காட்சி அரங்குகளை அமைத்தார். அதில் சார்லி என்ற பெயருடைய அணில் பிள்ளையை மனம் போனபடி நடமாட விட்டார். தக்க வேளை வரும் வரை மணிக்கணக்காகக் காத்திருப்பார் (கமராவுடன்) அணிலார், உரிய 'போஸ்' கொடுத்ததும் உடன் 'கிளிக்' செய்துவிடுகிறார்.

விளையாட்டாக ஆரம்பித்த இந்த படப்பிடிப்பு இப்பொழுது பெரும் பணம் தேடித் தரும் தொழிலாக பீட்டருக்கு மாறிவிட்டது. விளம்பர நிறுவனங்கள், தொலைக்காட்சி நிறுவனங்கள் ஆகிய அமைப்புகள் சார்லியின் வண்ணம் வண்ணமான நடவடிக்கைகளை உள்ளடக்கிய படங்களை வாங்குவதற்காக பீட்டரின் கலையகத்தில் காத்துக் கிடக்கின்றனர். படத்தில் ஐஸ்கிறீம் விளம்பரம் ஒன்றுக்காக போஸ் கொடுக்கிறார் மிஸ்டர் அணில்.

